
www.padippakam.com

# உரை மொழிவு

## Urai Mozhivu




குடும்பம், சீர்வரிசை, நிகழ்த்துதல்
- ச.நவநீத கிருஸ்ணன்

தமிழ்நாட்டில் இலங்கை அறிஞர்கள்
- பா.கணேசலிங்கம், யாழ் பல்கலை

காந்தி vs தலித்துக்கள்
- கோ.ரகுபதி, (MSU)

கனடியச் சூழலில் தமிழ்ச்சாதி
- சிவா தாட்சாயணி

நிலம்பெயராக் கூத்துக்கள்
- சித்திரா மணிவண்ணன்

தமிழ் வேரில் வெந்நீர்
- முனைவர் மாணிக்கம்

சாதி நேற்றும் இன்றும்
- தொ. பரமசிவன்

சமூகவியல் அறிஞர்
நோம் சோம்ஸ்கியுடனான செவ்வி
(Exclusively premited for 'urai Mozhivu')

மானிடத் தோற்றம்பற்றிய ஆய்வு
- முனைவர் கே.வி.எஸ். நம்பி
மொழிபெயர்ப்பு : ரொனிற்றா அகஸ்ரின்

மூதேவி வழிபாடு
- திரு நீலகண்டன்

பெண்ணியம் - கோட்பாடுகள்
- பே. சாந்தி

இவற்றுடன்....
நூலறிமுகம்

ஆங்கிலப்பகுதி / English section:

> Genetic adam and Eve - K.V.S.Nambi

> INDIGENISM: THE OLDEST IDEOLOGY
Zainab Amadahy (Exclusively for 'urai Mozhivu')

படிப்பகம்

www.padippakam.com


ESSAYS
கட்டுரை

# நோம் சோம்ஸ்கியுடனான செவ்வி

Courtesy of Antasofia

Originally appeared on 'A16beaver'group publication. And with the exclusive permission of Z Mag group and Antasofia.

***செவ்வியாளர்:*** கடந்த ஆண்டு நாங்கள் மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'ஆளுகையின் மரபுவழி' (Genealogy of Dominian) என்ற கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தோம். மக்ஸ் ஸ்ரைனர், ஜோர்ஜியோ அகம்பன், மிசேல் ஃபூக்கோ, எத்தியன் டு லா புவாத்தி, ஹன்னா ஆர்டந் ஆகியோரைப் பற்றி அதில் படித்தோம். நான் மாக் ஸ்ரைனரின் 'தன்முனைப்பும் அதன் உரித்தும்' (The Ego and its Own) என்ற நூலில் கவனம் செலுத்தினேன். அவர், மொழி ஒழுங்குமுறைகளைக் கொண்டிருப்பதாயும் அவை சொற்களின் மூலம் நேரடியாகக் கருதியலுக்குள் செல்வதாகவும் கருதுகிறார். ஆகவே ஸ்ரைனரைப் பொறுத்தவரை நாங்கள் இத்தகைய மொழியின் குணங்களிலிருந்து விடுபட வேண்டும். தனிப்பட்ட அளவில் மொழியைப் பொறுத்தளவில் கலகக்காரர்களாய் இருக்கவேண்டும். ஆனால் புரட்சியாளர்களாக அல்ல. இது உங்களுடைய மொழிபற்றிய விடுபட்டதும் படைப்புத்தன்மை வாய்த்ததும்' என்ற கருத்தாக்கத்திலிருந்து



சற்று வேறுபடுகின்றது. நீங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

***நோம் சோம்ஸ்கி:*** ஸ்ரைனர் மொழியை மொழியின் பயன்பாட்டுடன் குழப்பிப் பார்க்கிறார் என்று நான் நினைக்கிறேன். அதாவது 'நாங்கள் சுத்தியலில் இருந்து விடுபடவேண்டும். ஏனெனில் சுத்தியல் சித்திரவதையில் பயன்படுத்தப்படுகிறது' என்பதைப் போன்றதே இது. சுத்தியல் சித்திரவதையில் பயன்படுத்தப் படுவது என்பது உண்மைதான். ஆனால் சுத்தியலை வீடு கட்டவும் பயன்படுத்தமுடியும். சுத்தியலின் பயன் பாடு பற்றி நாங்கள் சிறிது கவனத்து டன் இருக்கவேண்டும். ஆனால் மொழி ஒடுக்குதலுக்குப் பயன்படுத்தப்பட முடியும். விடுதலைக்குப் பயன்படுத்தப்பட முடியும். திசை திருப்பவும் பயன்படுத்தப்பட முடியும். இது, நீங்கள் உங்கள் கையிலிருந்து விடுபட வேண்டும். ஏனென்றால் உங்கள் கை மக்களை ஒடுக்கப் பயன்படக்கூடும் என்பதைப் போன்றது. இது, கையின் பிழையல்ல.

***செவ்வியாளர்:*** ஒரு இடது சாரிக்கு யு.எஸ்ஸில் இருப்பது கடினமாயிருக்கிறது. நான் உங்களுடைய நாட்டில் இயல்பாக இருப்பதாக உணரவில்லை. யு.எஸ்ஸில் முற்போக்குச் செயல்பாட்டின் நிலை என்ன?

***நோம் சோம்ஸ்கி:*** உண்மையில் சூழல் கொஞ்சம் சிக்கலானதாகத்தானிருக்கிறது. இங்கே தொழிலாளரைச்சார்ந்த குழுக்களும் இல்லை. தொழிலார்களைச்சார்ந்த ஒரு கட்சிகூட இல்லை. மக்கள் தொடர்பற்று இருக்கிறார்கள். இந்தத் தொடர்பற்ற நிலையே உண்மையான சிக்கல். மார்க்ஸிய இயக்கங்கள் யு.எஸ்ஸில் ஒருபோதும் உறுதியானவையாக இருந்ததில்லை என்பதையும் மறக்காதீர்கள். ஒட்டு மொத்த வரலாற்றிலும் இது மிகக் குறைவான தொகையே. ஆங்காங்கே சில தனிப்பட்ட மார்க்ஸியர்களே தாக்குறவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவும் யு.எஸ்ஸின் முக்கிய பகுதிகளில் ஏற்படவில்லை. அத்துடன் சில தீவிரத் தேசியவாதக் குழுக்களுடன் சேர்ந்து யு.எஸ் அரசும்கூட ஐரோப்பிய பாஸிச அசைவியக்கம்போல் உள்ளது. அது, தனது பெரிதாக்கப்பட்ட 'பேராதிக்க இலட்சியங்களுடன்'கூடிய இராணுவக் கட்டமைப்புடன் தோற்றமளிக்கிறது. தனிப்பட்ட அதிகாரங்கள் சொத்துக்களுடையோரின் விருப்புக்களிற்கிணங்க நடப்பதில் பிரமாணிக்கமாயிருக்கிறது. யு.எஸ்ஸில் உள்ள மக்கள் கடினமாக உழைக்கிறார்கள். பிற எந்தவொரு முன்னேறிய தொழிற் சமூகத்தைவிடவும் கடினமாக உழைக்கிறார்கள். இது அவர்களை அதிக மன உழைச்சலுக்கு உள்ளாக்குகிறது. மக்கள் தங்கள் வேலைகளில் கவனம் கொள்கிறார்கள். அவர்கள் எப்போதும் பயத்துடன் வாழ்கிறார்கள்.

யு.எஸ்ஸில் அதிகளவு குற்றச் செயல்கள் இருந்தபோதும்கூட அது, பிற ஒப்பிட்டுப்பார்க்கக்கூடிய சமூகங்களுடன் சம அளவில்தான் ஏறக்குறைய இருக்கிறது. ஆனால் குற்றம் பற்றிய பயம் மிகவும் அதிகமானது. பல வழிகளில், இதுவே உலகில் அதிகம் பயத்துடன் இருக்கும் நாடு! மேலும் சமூகச் செயல்பாட்டின் அளவு நீங்கள் எந்தப் பகுதியை இந்த நாட்டில் எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. பல தெரிவுப்போக்குகளின்படி யு.எஸ் ஒரு சிக்கலான நாடு.

எடுத்துக்காட்டாக நான் இந்த நாட்டின் மிகப்பெரிய பல்கலைக்கழகத்தில் இருந்தேன். அது ரெக்ஸாஸ். நாட்டின் சரியானதொரு மிதவாத இடம்கூட அல்ல. ஆனால் ஹோஸ்ரனிலும் ஒஸ்ரினிலும் பல்கலைக்கழக வளாகங்களில் அனைத்து வகையான குழும நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. கொங்கிரஸ் படைகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்ததை எதிர்த்து ரெக்ஸாஸ் பல்கலையில் ஆயிரக் கணக்கான மக்கள் ஈடுபட்ட ஊர்வலம் நடந்தது. மாணவர் கொங்கிரஸ் அதை எதிர்த்துக் கடுமையான தீர்மானம் கொண்டு வந்தது. ஒருவர் நாடு முழுவதிலும் இதுபோலப் பார்க்க முடியும். ஆனால் ஒரு போதும் போர், செயல்முறையாகத் தொடங்குமுன்னர் தடையூர்வலம் என்பதெல்லாம் நடப்பதில்லை. போர்-அமைதி என்பதெல்லாம் வெகுசன இயக்கங்களின் பலகூறுகளில் ஒன்று மட்டுமாகத்தான் இருக்கிறது. பலவகையான சமூக முன்வைப்புக்களையும் உடைய அவற்றின் ஒரு அணுகுமுறை, முன்வைப்பு மட்டும்தான் இது.

***செவ்வியாளர்:*** கடைகளில், மதுக் கடைகளில், திரையரங்குகளில், பிற

> **"உண்மையில் ஏன் நான் ஐ.அமெரிக்கக் குடியரசிலிருக்கும் பெரும்பாலான அறிவுசீவிகளினால் முதலாவது பொது எதிரியாகக் கருதப்படுகின்றேன் என்றால், ஐ.அமெரிக்கக் குடியரசுதான் உலகிலிருக்கும் முதலாவது பாரிய பயங்கரவாத நாடு என்று நான் குறிப்பிட்டமையே."**

மொழிபெயர்ப்பு: சந்தியாப்பிள்ளை

www.padippakam.com



அனைத்து இடங்களிலும் 9/11 பற்றிய வாசகங்கள் இருந்தமை கண்டு நான் கவரப்பட்டேன். அவை 'நாங்கள் ஒரு போதும் மறக்கமாட்டோம்' என்பதாகத் தான் இருந்தன. ஆனால் ஐரோப்பாவில் என்றால் 'நாங்கள் எப்போதும் நினைவில் வைத்திருப்போம்' என்பதாகவே எழுதுவோம். இந்த விளம்பரங்களில் ஒருவகை வஞ்சம் தீர்ப்பதற்கான சுவையிருப்பதாகத் தெரிகின்றது...


***சோமஸ்கி:*** நீங்கள் எல்லா வகையான தாக்குறவுகளையும் இங்கு காணலாம். அதாவது செப்ரம்பர் 11க்குப் பிறகு பெரும்பான்மையான மக்கள் அல்லது பெருமளவு வீதமான மக்கள் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தாக்குதல் நடத்தவேண்டும் என்று விரும்பிய-தாகச் சொல்லப்பட்டது. இது சாதாரணமான உணர்வுதான். ஆனால் இப்போது அதே பெரும்பான்மை அரசியல் தீர்வை விரும்புகின்றது.

***செவ்வியாளர்:*** உங்களுடைய பிரதிக-ளில் நீங்கள் 'மறைமுக அரசு' ஒன்றினால் உலகு ஆளப்படுவதாகக் கூறியிருக்கிறீர்கள். அதுபற்றிக் கொஞ்சம் கூறமுடியுமா?

***சோம்ஸ்கி:*** அது எனது சொல்லல்ல. உலகளாவிய, தொழில்முறையான பொருளாதார எழுத்துக்களிலிருந்து நான் அதை எடுத்துக்கொண்டேன். இந்த 'மறைமுக அரசு' முதலிடுபவர்களையும் கடன் கொடுப்போரையும் கொண்டது. அவர்கள் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை மூலதனமிடுதல் மூலம் தங்களுக்குச் சார்பாக ஆக்குகிறார்கள். பொருளாதாரச் சுழற்சி, பணத்தின் மீது தாக்குதல், மற்றும் கடந்த 30 வருடகாலங்களாக புதிய தாராளவாதச் சட்டகத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் வழங்கும் வாய்ப்புகள் மூலமான பிற வழிகளால் இதைச் செய்கிறார்கள்.

இப்போது நீங்கள் இதைப் பிரேசிலில் பார்க்கலாம். இந்த 'மறைமுக அரசு' 'கார்டோஸோவின் அரசிலிருந்து தங்களுக்குச் சாதகமான முடிவு கிட்டும் உறுதிகளை எதிர்பார்க்கிறது. இதிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களும் உள்ளூர் பெருவணிகரும் பெருலாபமடைய முடியும். இது மாறக்கூடாது என்பதே அவர்களின் விருப்பு. லூலா தேர்தலில் வெற்றிபெறுவார் என்பது தெரிந்தவுடன் வெளிநாட்டு முதலீட்டாளர், கடன்கொடுத்தோர், வங்கிகள், ஐ.எம்.எஃவ், உள்ளூர் முதலீட்டாளர் முதலியோர் பணக்குறைப்பு, மூலதன நகர்த்தல், மற்றும் பிறவேலைகளின் மூலம் பெரும்பான்மையினரின் எண்ணம் நிறைவேறவிடாமல் பல தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டனர்.

பிறகு அவர்கள், லூலா மரபான போக்குகளிலிருந்து மாற்றம் வராமல் உலகளாவிய தாராளவாதிகளின் போக்கிற்கு இடமளிப்பார் என்று தெரிந்தவுடன் அவரை வரவேற்றனர். லூலா 'பிரேஸில் பாதுகாப்பான நிலையில் இருக்கும் வண்ணம் மக்களிற்கு மீளுறுதியளித்துள்ளார்' என்றே அவர்கள் அதைச் சொல்லிக் கொண்டனர். இந்த வகையான சிறபபான மொழிப்பிரயோகம் இரு முகமுடையது: அவர் பொருளாதார முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்புறுதியளித்தால் அது பிரேசிலியர்களுக்கானதா? இந்த அரசு பொருளியல்வாதிகள் சொல்வதுபோல் 'இரட்டை



http://monkeyfist.com/ChomskyArchive/images

தேர்தல் தொகுதி' கொண்டது. ஒன்று மக்களுடையது, இரண்டாவது 'மறைமுக அரசினுடையது'. தான் பிரேஸிலைக் காப்பதாக லூலா தனது நாட்டிற்குச் சொன்னார். ஆனால் ஐ.எம்.எஃவ் தனது தேர்தல் தொகுதிக்கே அவரைப் பிரமாணிக்கமாயிருக்கச் சொல்கிறது. அதாவது 'மறைமுக அரசிற்கு'. லூலா தொடர்ந்த பழைய நிலையைக் கடைப்பிடித்தால் தான் தொடர்ந்து பணவரவு நடக்கும் என்பதே அவர்கள் நிலைப்பாடு. லூலா கடன் வழங்கியோரிடம் தொடர்ந்து பக்குவமாக நடக்கவேண்டும். இது தான்பொருளாதார தாராளவாக்கல் மற்றும் பிற கணிப்பீடுகள். இவை இந்த 'மறைமுக அரசினால்' மேற்கொள்ளப்படுபவை. அதாவது மக்கள் தங்கள் சொந்த நாட்டில் முடிவெடுக்கும் திறனற்று இருக்கிறார்கள். பொருளாதார தாராளவாக்கலின் ஒரு முக்கிய விளைவு தெளிவாக இருக்கிறது: இது மக்களாட்சியைச் சிதைக்கிறது.

***நோம் சோம்ஸ்கி ஐக்கிய அமெரிக்ககுடியரசில் வசித்துவரும் ஒரு கல்வியாளர். இவர் தனது தொடக்க நிலைப்புலமாக மொழியியலைத் தெரிந்திருந்தார். தற்போது இடதுசாரிச் செயற்பாட்டாளராகவும் கோட்பாட்டாளராகவும் இருந்து வருகின்றார். மாணவரிடையே மட்டுமல்லாது பொதுச் சமூகத்திலும் ஆணித்தரமான பல கருத்துகளை முன்வைத்து வருகின்றார். ஐக்கிய அமெரிக்க குடியரசின் பல முறையற்ற செயற்பாடுகளுக்கு முதன்மையான விமர்சகர் இவரே.***

***செவ்வியாளர்:*** இது இடதுசாரிகளுக்கு உலகளவில் பெரிய வெற்றி. பிரேசில் ஒரு பெரிய நாடு...

***சோம்ஸ்கி:*** எனக்கும் லூலாவிடம் நல்ல மரியாதை உள்ளது. ஆனால் அவருக்குச் செயல்பட சிறியளவு வாய்ப்பே உள்ளது. உண்மையில் அவருக்குச் சில தெரிவுகள் மட்டுமே உண்டு: அவர் ஐ.எம்.எஃவ்.இன் முன்வைப்புக்களைச் செயல்படுத்தும் ஒரு ஆளுமையாக இருக்கலாம். அல்லது அவர் சில நல்ல வழிமுறைகளை பிரேசிலுக்குச் செய்யலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவர் கொல்லப்படாமலிருந்தால் ...

***செவ்வியாளர்:*** நாங்கள் நல்லதையே நினைப்போம்...

***சோம்ஸ்கி:*** லூலா உள்நாட்டு விருத்திக்கு வளங்களைத் திருப்பக்கூடும். ஆனால் ஒழுங்கமைக்கப்படாத பொருளாதார ஓட்டம் தனிப்பட்ட அரசுகளினால் சீர்திருத்த நடவடிக்கைகளை ஏற்படுத்தவே வெகுவாக உதவும். ஏதாவது ஒரு நாடு தங்கள் பொருளாதார வளங்களை மேம்படுத்தவோ தங்கள் நாட்டின் சுகாதார நடவடிக்கைக்கோ பயன்படுத்த நினைக்குமாயின் இத்தகைய நடவடிக்கை உடனே முலதனத்தின் சாய்வோட்டம் மூலம் தடுக்கப்படும்.

***செவ்வியாளர்:*** எனக்கு இது சற்று வேறுமாதிரியாகத் தோன்றுகிறது. 'மறைமுக அரசு' என்ற கருத்தாக்கம் ஓரளவு 'நெகிரி மற்றும் ஹார்ட்டினுடைய' (Negiri's and Hart's concept of empire) பேரரசுக் கருத்தாக்கத்தைப்போல இருக்கிறது.

***சோம்ஸ்கி:*** பேரரசு. ஆமாம். ஆனால் எனக்கு அதைப் படிக்கக் கடினமாக இருந்தது என்றே கூறவேண்டும். நான் சில பகுதிகளை மட்டுமே புரிந்து கொண்டேன். ஆனால் அவையெல்லாம். வெகு சிறப்பானவகையில் எளிதாச் செர்ல்லமுடியக்கூடியவை என்றே எனக்குப் பட்டது. எப்படியோ, சில வேளை முக்கியமானவைகளை நான் விட்டிருக்கக்கூடும்.

***செவ்வியாளர்:*** ஆமாம். மேலும் அந்த நூல் உங்களுடையதைப்போன்ற அதே முடிவுக்குத்தான் வருகின்றது. ஆனால் மிகச் சிக்கலான வாசிக்கக் கடினமான வழிகளினூடாக...

***சோம்ஸ்கி:*** அதிலிருந்து மக்கள் ஏதாவது எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். நான் புரிந்து கொண்டவைகள் வெகு எளிதானவை. ஆனால் இதை ஒரு விமரிசனமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. எளிதான வழியில் சொல்ல முடியும்போது, ஒரு சிக்கலான வழியில் சொல்லவேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் பேசு பொருட்களைச் சிக்கலானதாகத் தோற்றமளிக்க வைக்கலாம். இது அறிவுசீவிகளின் விளையாட்டுக்களில் ஒன்று. பேசு பொருட்கள் சிக்கலாகத் தெரிய வேண்டும். நீங்கள் அது பற்றித் தெளிவாக இருக்கவேண்டும் என்பதில்லை. ஆனால் இது மரியாதை, அதிகாரம் தாக்குறவு என்பவற்றைப் பெறுவதற்கான ஒரு வழியாயிருக்கிறது.

***செவ்வியாளர்:*** நீங்கள் ஃபூக்கோவின் எழுத்துக்களையும் இந்த வகையில் பார்க்கிறீர்களா?

***சோம்ஸ்கி:*** ஃபூக்கோ ஆர்வமூட்டக்

படிப்பகம்

www.padippakam.com

கூடிய பேசு பொருட்களைக் கொண்டவர். அவர் நேர்மையாக அதிகாரத்தை பலமிழக்கச் செய்ய எண்ணினார். ஆனால் அவருடைய எழுத்துக்களின் வழி அவர் அதிகாரத்தை மீளக் கொண்டுவந்தார் என்றே நினைக்கிறேன். ஃபூக்கோவினைப் புரிந்து கொள்ள ஒரே வழி, நீங்கள் ஒரு பட்டதாரி மாணவராயிருக்க வேண்டும். அல்லது நீங்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து ஒரு குறித்த வகையான சொல் லாடலுக்குப் பழக்கப்பட்டிருக்க வேண்டும். இது ஒரு வகை உத்தரவாதம். இது அவருடைய நோக்கமாயிருக்காது. ஆனால் இந்தவகை உத்தரவாதத்தின் மூலம் அறிவுசீவிகள் அதிகாரத்தை, தாக்குறவை, மரியாதையைப் பெறுகிறார்கள். ஏதாவது எளிதாகச் சொல்ல முடியுமாயின் எளிதாகச் சொல்லுங்கள். அப்போதுதான் அடுத்தவீட்டு தச்சர்கூட அதைப் புரிந்து கொள்வார். மனிதனைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கான எதுவும் வெகு எளிதானதாகவே இருக்கும். நான் ஃபூக்கோவில் மிக ஆர்வமான பேசு பொருட்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் அவருடைய வெளிப்பாடு குறித்து ஐயத்துடனேயே இருக்கிறேன். நான் அவரை மீள் சமிக்ஞையாக்கம் செய்வேண்டும் என நினைக்கிறேன். நான் அப்படிச் செய்தபின் சிலவேளை சிலவற்றை விட்டுவிடவும் கூடும். ஆனால் நான் எவற்றை விட்டுவிடுகிறேன் என்பதற்கு முக்கியம் கொடுக்கவில்லை. நான் ஒருபோதும் அவர் என்ன சொல்கிறார் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. அதாவது, நான் அவருடைய பெரிய சொற்களை வாசிக்கும்போது ஒவ்வொருதடவையும் அவற்றை என்னுடைய சிறிய சொற்களில்போட்டு பார்க்க முயற்சிப்பேன். அந்த நேரங்களில் திசைமாறிப்போய் பூடகமானவையாக அவை மாறிவிடும். ஆனால் இப்படிப்பட்டவற்றை வாசிக்காது தாண்டிச் சென்றால் என்ன நடக்கும் ? ஃபூக்கோவுடனும் அவருடைய சில கோட்பாடுகளுடனும் குழப்பமடைந்தே நான் முடிக்க வேண்டியிருக்கும். உண்மையில் அவருடைய எழுத்துக்களை ஒருவராலும் எனக்கு விளக்கமளிக்க முடியவில்லை.

***செவ்வியாளர்:*** சப்பாற்றிஸ்ரக்களையோ மார்க்கோஸையோபோல அறிவுசீவிகள் கோட்பாடுகளில் இருந்து எதிர்வுப்பார்வைகளில் (visions) இருந்து, கட்டாயம் விலகிவிடவேண்டும் என்று நினைக்கிறீர்களா ?

***சோம்ஸ்கி:*** மார்க்கோஸின் சொந்தச் சிந்தனைகள் ஆர்வமூட்டக்கூடியவை. ஆனால் கோட்பாடல்லா நிலை என்று ஒன்று இல்லை. அதாவது நீங்கள் எப்போதும் ஒரு கொஞ்ச நம்பிக்கைகள், இலக்குகள், மற்றும் எதிர்வுப்பார்வைகளிற்கு ஆட்பட்டே இருக்கமுடியும். அல்லது சிலவகையான சமூக பகுப்பாய்வுகள். நீங்கள் சித்திரவதைக்கு எதிரானதும் கருத்துச் சுதந்திரத் திற்கும் ஆதரவானதும் அல்லது பிற மிகவெளிப்பைடயாக மேம்போக்காகத் தோற்றமளிக்காத பிறவற்றைப்பற்றியும் உங்கள் பார்வைகளை வெளிப்படுத் துகிறீர்கள் என்பதனால், இது உண் மையே.

***செவ்வியாளர்:*** நான் உங்கள் 'இலக்குகளும் எதிர்வுப் பார்வைகளும்' ( Goals and visions) பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். நான் நினைக்கிறேன் இலக்குகளில் கவனம் செலுத்துவதே மிக முக்கியம் என்றும் எதிர்வுப் பார்வையை விட்டுவிடலாமென்றும் நினைக்கிறனே.

***சோம்ஸ்கி:*** நீங்கள் அவற்றை மறக்கத் தேவையில்லை. அங்கே ஒரு சமநிலை இருக்கிறது. நீங்கள் உங்கள் தெரிவைச் செய்து கொள்ளவேண்டும். அதாவது என்னுடைய மிக நெருக்கமான நண்பர்கள் என்னைவிட மிக வேறுபட்ட முடிவை எடுப்பார்கள். உதாரணமாக மிக்கேல் அல்பர்ட், எதிர்வுப்பார்வைகளை வெளிக்கூறுவது மிக முக்கியம் என நினைப்பார். என்னுடைய உணர்வு என்னவென்றால் எங்களுக்கு அதைச் செய்வது எப்படி என்பது தெரியாது என்பதுதான். ஆகவே இந்தவகை எழுத்துக்கள் இலக்குகளை விட குறைவான முதன்மை வாய்த்தவை. இவை ஓரளவு முதன்மை வாய்ந்தவைகள் பற்றிய முன்கூறல்கள்தான். ஐயமில்லாமல் வேறுபட்டவர்களுக்கு வேறுபடக்கூடியவை. பொதுவான 'சரியும் பிழையும்' இங்கே இல்லை.



***செவ்வியாளர்:*** அறிவு சீவிகளின் பங்கு பற்றிக் குறிப்பிடும்போது நீங்கள் சொன்னீர்கள் 'முதற்கடமை அவரவர் நாட்டின்மீது கவனம் செலுத்துவதுதான் என்று. இந்தக் கூற்றை விளக்குவீர்களா?

***சோம்ஸ்கி:*** மிக அடிப்படையானதொரு அறம்சார் செயல்வழிமுறை எதுவென்றால் உங்களுடைய சொந்த நடவடிக்கைகளின் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பு என்பதுதான். செங்கிஸ்கானின் குற்றச்செயல்கள் பற்றிக் கதைப்பது மிக நல்லதுதான். ஆனால் அது தொடர்பாகச் செய்வதற்கு எங்களுக்கு ஒன்றும் இல்லை. சோவியத்தைச் சேர்ந்த அறிவு சீவிகள் தங்கள் சக்தி முழுவதையும் ஐ.அமெரிக்கக் குடியரசின் குற்றச் செயல்கள் பற்றி கையாள்வதற்கு முடிவெடுத்தால் அவர்கள் செய்யக்கூடியது அதை ஒன்றைத் தவிர எதுவுமில்லை. 'எனது முதல் பணி எனது நாட்டில் கவனம் செலுத்துவதே' என்று முடிவெடுப்பவர்களை நாங்கள் மதிக்க வேண்டும். இதில் சுவையானது என்னவென்றால் ஒருவரும் இந்த நடவடிக்கை பற்றிக் கேள்வி கேட்க மாட்டார்கள். ஏனென்றால் அதிகாரபூர்வமான எதிரி-களைப் (official enemies) பொறுத்தவரை செயல்வழிமுறைகள் அவ்வளவு வெளிப்படையானவை, அப்படித்தான். ஆனால் இப்படிப் பட்டவை-களைச் செயல்படுத்தம்போது அவை வாதத்துக்கு உரியவையாகவோ அல்லது முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வெட்கத்துக்கு உரியவையாகவோ இருக்கும். ஆனால் இந்த வெளிப்படையான உண்மைகள் அப்படியேதான் இருக்கும். உண்மையில் இத்தகைய உண்மைகள் எங்களுக்கு சோவியத்

அறம்சார் பொறுப்புக்களை எற்று
கொள்வது முதன்மையானது. அடிப்ப
டையான உண்மைத்தன்மை எப்போ
தும் நெருடலாகத்தான் இருக்கும்
தனிப்பட்ட வாழ்க்கையில்கூட. இதைத்
தவிர்த்துக் கடந்து வந்த பலர்
இருக்கிறார்கள்.




தைச் சேர்ந்தவர்களுக்கு இருப்பவை-களைவிட அதிகம். ஏனென்றால் நாமிருப்பது அதிகம் விடுதலையான சமூகங்கள். இங்கு ஒடுக்குதல்கள் எதிர் கொள்ளப்படுவதில்லை. மேலும் நாம் கணிப்பிடத்தகுந்த அளவு, அரசுகளின் கொள்கைகளில் தாக்குறவும் ஏற்படுத்தலாம். ஆகவே இந்த வெளிப்படை உண்மைகளை நாம் கருத்தில் கொள்வோமாயின் அதுதான் அதிகம் சக்தியுடையதாயும் கடப்பாடுமிக்கதாயும் இருக்கும். அதிகாரபூர்வமான எதிரி-களைப் பொறுத்தவரை இவை குறித்த விளக்கங்கள் இன்னும் தெளிவானவை. இந்த வெளிப்படையான செயல்வழிமுறைகள் தன்னளவில் பயன்படுத்தப்படும்போது ஒருவருக்கு வெறுப்புக்கு உரியதாயிருக்கும். இதை நாங்கள் பயங்கரவாதம் பற்றிப் பார்க்கும்போது இன்னும் அதிகமாகப் பார்க்கலாம்.

உண்மையில் ஏன் நான் ஐ.அமெரிக்கக் குடியரசிலிருக்கும் பெரும்பாலான அறிவுசீவிகளினால் முதலாவது பொது எதிரியாகக் கருதப்படுகின்றேன் என்றால், ஐ.அமெரிக்கக் குடியரசுதான் உலகிலிருக்கும் முதலாவது பாரிய பயங்கரவாத நாடு என்று நான் குறிப்பிட்டமையே. இது தெளிவான உண்மையென்ற போதிலும்கூட பல அறிவுசீவிகளினால், குறிப்பாக தாரா-ளவாத - இடதுசாரி அறிவுசீவிகள் உட்பட, ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை. ஏனென்றால் இப்படிப்பட்ட உண்மைகளை ஏற்றுக்கொண்டால் நாங்கள் பொறுப்பாயிருக்கிற இவை குறித்து எதாவது செய்தாக வேண்டும். எங்களால் பெரிதாக எதையும் செய்து விடமுடியாத, எங்களுடைய அதிகார பூர்வ எதிரிகள குறித்து பெரிதாகக் கத்துவதைவிட, அடிப்படையான வரலாற்றினூடாக அறிவுசீவிகளைப் பொறுத்தவரை இது அவர்களுடைய தொழில்முறைக்கு மிக நெருக்கமானது. அறிவுசீவிகள் பொதுவாக ஆதிக்க நிறுவனங்களுடன் கைகோர்த்தே கடந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கான முதன்மையும் தகுதியும் அதிகார மையங்களுடன் பழக்கப் படுத்திக் கொள்வதிலிருந்தே வருகின்றன. அறிவுசீவிகள் எப்போதும் ஒரு விமர்சனப் பார்வையை வைத்திருப்பார்கள். ஆனால் அது ஒரு குறுகிய எல்லைக்குள்ளாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டாக வியட்நாம் போரை விமர்சிப்பவர் ஒருவர் அதை 'ஒரு தவறு' என்று கூறுவார். இது ஓர் மறைமுக உள்ளக் கிடைக்கையைக் கொண்டது. அவர்கள் உண்மையில் சொல்ல வேண்டியது யாதெனில் "இந்தப்போர் பிழையானதும் அறமற்றதும்" என்பதாகும். இதுவே 1960 இன் பிந்திய பகுதிகளில் 70வீதமான பொது மக்களின் கருத்தும் இன்றுவரைக்குமானதும். ஆனால் ஒரு கொஞ்ச, விலக்கான சில அறிவுசீவிகள் மட்டும் தான் இந்தக் கருத்தை உடையவர்கள். இது பயங்கரவாதத்தைப் பொறுத்தவரையும் உண்மையானதே. ஏற்றுக் கொள்ளக்கூடி சொல்லாடலாக, எளிதாக காட்டக்கூடியதாக, பயங்கரவாதச் சட்டம் பற்றிப் பயன்படுத்தப்படும் சொல், "அவர்கள்" ஐ.அமெரிக்கக் குடியரசுக்கு எதிராகச் செல்படுகிறார்கள் என்பதே. ஆனால் இங்கு "நாங்கள் அவர்களுக்கு" எதிராகச் செய்பவைகள் பற்றி எதுவும் இல்லை. இது ஏறக் குறைய ஒரு வரலாற்றுப் பொதுமையாக இருக்கிறது. இன்னும் எண்ணிலடங்காப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

I'm happy to tell you that we are honored to have your journal translate the interview we made to Chomsky Lorenzo Fabbri

best wishes for your activism,
Lorenzo Fabbri
Antasofia

www.padippakam.com



# சாதீய ஆய்வுகள் நேற்றும் இன்றும்

தொ. பரமசிவன்

தெற்காசிய நாடுகளில் மரபு வழிச் சமூகங்களில் மனிதனைப் பிறப்பின் வழியே பிரித்துப் பார்க்கும் போக்கு நிலை பெற்று விட்ட ஒன்று. உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்ற இந்தப் போக்கு ஒப்பீட்டளவில் இந்திய துணைக்கண்டத்தில் மிகுதி. அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் தென்னிந்தியச் சாதி அமைப்பு முறை மிக ஆழமானது. மிக நுணுக்கமானதும் கூட. அதனால்தான் ஐரோப்பியக் காலனியவாதிகள் வட நாட்டிலும் பார்க்க தென்னாட்டின் சாதிகளைப் பற்றியும் சாதி அமைப்பு முறை பற்றியும் அறிய அதிக அக்கறை செலுத்தினர்.

காலனிய வாதிகளின் நோக்கம் வேறாக இருந்தாலும் சாதிகளைப் பற்றிய எழுத்துக்களை ஒரு படிப்புத் துறையாக மாற்றியது அவர்கள்தான். A.B. Dubai துபாய் தொடங்கி ராபர்ட்சன், இப்பட்சன், கூம்பஸ், எட்கர் தர்ஸ்டன் என்று விரிந்து து.ர். ஹட்டன் வரை இத்துறையில் ஐரோப்பியர்களின் நீண்ட பட்டியல் ஒன்று உண்டு. இவற்றில் கடைசியாகக் குறிப்பிட்ட து. ர். ஹட்டனின் Caste in India என்ற நூலை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறை பாடப்புத்தகமாகவே வைத்துள்ளது. மேல்கீழாக அடுக்கப்பட்டுள்ள சாதி முறைகளை ஐரோப்பிய கீழ்த் திசை வாணர்கள் (European orientalist) எனப்பட்ட இவர்கள் முதலில் வியப்போடுதான் பார்த்தார்கள். பின்னர் 'சாதி முறை என்பது மரபு வழி அதிகாரக் கட்டுமானம்' என்பதனை உணர்ந்தார்கள். தங்கள் காலனிய ஆட்சி அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு வந்த போது சாதி அதிகாரத்தின் உச்சியிலிருந்த முதல் இரண்டு அல் லது மூன்று சாதிகளைத் தங்களுடைய அதிகாரத்தின் பக்கம் இழுத்துக் கொண்டனர். இந்திய மேல் சாதிக் காரர்களுக்கு தொடக்கக் கட்டத்தில் ஆங்கிலேய அதிகாரத்தின் 'கோ மாமிசம்" கொஞ்சம் நெருடலாக இருந் தது. பிறகு இவர்களும் அவர்களை நோக்கி நகரத் தொடங்கினார்கள். பெரும்பான்மை மக்கள் திரள் பல்வேறு சிறுசாதிகளாகப் பிரிந்து கிடந்தது. ஆட்சியாளர்களுக்கும், மேல் சாதிக் காரர்களுக்கும் வசதியாகப் போய் விட்டது. பிராமணர்கள், பிராமணரை அடுத்த மேல் சாதி என்ற இரண்டு மேல் சாதிகளும் பெரும்பாலும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் காலனிய அரசாங்கம் தந்த பதவிகளையும் அதிகாரங்களையும் சுகங்களையும் சுவைக்கத் தொடங்கினார்கள்.

தமிழ் நாடு மட்டும் இந்தப் பொது விதியிலிருந்து கொஞ்சம் விலகியிருந்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தமிழ் நாட்டில்தான் கணிசமான அளவு சாதிப் பத்திரிகைகள் வெளி வந்தன. அந்தக் காலப் பகுதியில் பிராமணர்கள், பிராமணரை அடுத்த மேல் சாதி, இடைநிலைச் சாதியார், ஒடுக்கப்பட்ட சாதியார் என நான்கு தரப்பிலிருந்தும் பத்திரிகைகள் வெளிவந்ததனைப் பார்க்கின் றோம். பிராமணருக்கும், பிராமணரை அடுத்த மேல் சாதிக்கும் இடையில் ஒரு பெரிய முரண்பாடு தோன்றியதும் அந்த முரண்பாடு எழுத்துலகத்தில் வெளிப் பட்டதும் தமிழ் நாட்டில்தான். பிராமணருக்கும், வேளாளர்க்குமான இந்த முரண்பாடு இடைநிலைச் சாதியருக்கு தாங்கள் எழுச்சி பெறல் பேரூக்கம் அளித்தது. தங்கள் சாதிப் பெருமையினை நிலை நாட்ட எல்லாச் சாதிகளும் எழுத்துலகத்திற்குள் புகுந்தன. இதில் மிகப் பெரிய வெற்றி பெற்றவர்கள் பிராமணர்கள்தான். பிராமணர்களுக்குள் பல உட்சாதிகள் இருந்தாலும் இந்திய தேசியம் என்கிற அரசியல் அடையாளத்தையும் இந்து என்கிற மத அடையாளத்தையும் அவர்கள் தங்களுடைய சாதி அடையாளமாக மாற்றிக் கொண்டனர். அதன் விளைவாக பிராமணர்களுக்கு சாதியும், மதமும் ஒன்றாயிற்று. ஆனால் மற்ற எல்லோருக்கும் சாதி அடையாளமே முதன்மையாயிற்று 'கிறித்துவர் ஆனா லும் நாங்கள் வேளாளர்களே" என்று தங்கள் சாதி மேலாண்மையை தக்க வைத்துக் கொள்ள அவர்கள் முயற்சித் தார்கள். சீர்திருத்தச் திருச்சபையைச் சார்ந்த பாளையங்கோட்டை முத்தையா பிள்ளை 'வேளாளர் சாதி ஆசாரம் " என்ற ஒரு நூலினை வெளியிட்டார். திருச்சபைக்குள் நாடார்களை விடத் தாங்கள் பெயர்ந்த சாதியார் என்பதனைக் காட்டுவதே அதன் நோக்கமாக இருந்தது. 1907ல் எட்கர் தாஸ்டனின் புகழ் பெற்ற தொகுப்பு நூலான Castes and Tribes of Southern India ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. அவருக்கு உதவியாக இருந்தவர், ரெங்கச்சாரியார் என்ற வைணவப் பிராமணர் ஆவர். போக்குவரத்து வசதிகள், மின்வசதிகள் இல்லாத அக்காலத்தில் பெரும்பாலும் வாருவாய்த் துறை ஊழியர்களைக் கொண்டே அந் நூலுக்கான தரவுகள் திரட்டப்பட்டன. அன்று வருவாய்த் துறையில் எழுத்தறிவு பெற்ற அலுவலர்களாகப் பெரும்பாலும் உயர் சாதிக்காரர்களே இருந்தனர். கிராம நிர்வாகத்தைக் கையில் வைத்திருந்த கணக்குப் பிள்ளைகளும் மேல் சாதிக் காரர்களே. எனவே இத் தொகுப்பு நூல் ஒரு மேல் சாதிக்காரப் பார்வையிலேயே தொடுக்கப்பட்டது என்பது தெளிவு.

இந்நூலின் மற்றொரு பெரும் குறைபாடு ஒரே சாதிப் பெயரை பகிர்ந்து கொள்ளும் பல்வேறு உட்பிரிவுகளை இவை கணக்கில் எடுப்பதில்லை. வட்டார வேறுபாடுகளையம் இந்த நூல் முழுமையாகப் பேசவில்லை.



ஒரு சாதித் திரள் என்பது குறிப்பிட்ட நிலப்பகுதியோடும் தொழிலோடும் சடங்குகளோடும் தொடர்புடையது. அத்துடன் அந்த வட்டாரத்தில் வாழும் மற்ற சாதியாகும். ஒரு குறிப்பிட்ட சாதியரின் இருப்பினையும் பொருளியல் வாழ்வினையும் சமூக நிலையினையும் தீர்மானிக்கின்றனர். எனவே ஒரு குறிப்பிட்ட சாதிப்பட்டத்தினைத் தாங்கி நிற்கின்ற மக்கள் கூட்டம் தென்னிந்தியா முழுவதும் அல்லது தமிழ்நாடு முழு வதும் ஒத்த சமூக வாழ் நிலையினை உடையது என்பதே

www.padippakam.com

தவறான கருது கோளாகும். தமிழ் நாட்டின் பெரும் பான்மையான சாதி யார் மக்கள் தாய முறையினையே பின்பற்றி வருகிறார்கள் ஆனால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏதேனும் ஒரு சாதி யார் அல்லது சாதியின் உட்பிரிவினர் மருமக்கள் தாய முறையைப் பின்பற்றி வருகின்றனர். இவர்களைக் குறித்த தொகுப்பு ஆய்வோ, தனித்த ஆய்வோ இதுவரை வெளிவரவில்லை.

மின்சாரம், போக்குவரத்து, நகர வளர்ச்சி ஆகிய வசதிகள் காரணமாக கடந்த நூறு ஆண்டுகளாக தங்கள் மரபுத் தொழிலை முற்றிலுமாக இழந்து போன சாதியார் பிற சாதிகளுக்குள் கரைந்து போனார்கள். இவ்வகையான சாதிக் கரைப்பு குறித்த ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. பார்ப்பனர் வருகைக்கு முன்னரும் தமிழ் நாட்டில் சடங்கியல் தலைமை யேற்ற சாதிகள் சில இருந்தன. ஆனால் இவர்கள் அதிகாரப் பலமற்ற பூசாரிச் சாதிகள், தென் தமிழ் நாட்டில் இவ்வாறு சடங்கியல் தலைமையேற்ற (புரோகிதச்) சாதியாராக பாணர் , பறையர் கணியார் , நாவிதர் , வண் ணார் ஆகியோரைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இவ்வகையான சாதியார் இருந்தனர். காலனிய ஆட்சியின் இறுதிக்கட்டம் வரை அவர்கள் ஒவ் வொரு வட் டாரத்திலும் சிறு சிறு குழுக்காக தங்க ளது சடங்கியல் தளத் தினை தக்க வைத்துக் கொண்டனர் இவர்களைப் பற்றிய ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

இந்த இடத்தில் 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் நாட்டின் இயக்கச் செயல் பாடுகள் குறித்து சொல்ல வேண்டியுள் ளது. 1950 வரை தேசிய, பொதுவு டைமை இயக்கங்கள் தமிழ்ச் சமூக மாறுதல்களை சாதியார் நோக்கில் கணக்கிட முற்படவில்லை. இத்த னைக்கும் தஞ்சை மாவட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி 'பள்ளர் கட்சி" என்றே அடையாளம் காட்டப்பட்டது. இருந்தாலும் சாதிசார் அடை யாளத்தை மறைத்தாலே போதும் என்றுதான் பொதுவுடைமைக் கட்சிகள் செயலாற்றின. பெரியாரின் தலை மையிலான திராவிட இயக்கம் மட்டுமே சமூக எழுச்சி என்பது தமிழ்நாட்டில் சாதிச் சங்கங்களை அலகுகளாகக் கொண்டது என்ற கருத்தியலோடு இயங்கியது. ஆக இரண்டு மேல் சாதி-களைத் தவிர்த்த எல்லாச் சாதிச் சங்கங்களின் கூட்டங்களும் மாநாடுக ளும் தீர்மானங்களும் பெரியாரின் குடியரசு இதழில் செய்தியாக்கப்பட டன. அன்றைய சூழ்நிலையில் சாதி எல்லையினை மீறிய தனிநபர் இயக் கங்கள் சாத்தியமில்லை என்ற ஓர்மை அவர்களிடமிருந்தது. (இந்த சாதிச் சங்கங்களின் எழுச்சி எண்ணிக்கை சிறுத்த சாதியாரை ஓரங்கட்டிய அவலத்தை வேறொரு கட்டுரையில் காணலாம்.) 1950க்குப் பிறகே தனித்த ஒரு சாதி குறித்த நுட்பமான சில ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின. அவ்வகையில் உசிலம்பட்டி புறமலைக் கள்ளர் குறித்த லூயி துமோன் செய்த ஆய்வு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டி யது. தென் தமிழ் நாட்டின் தரகு மூல தனச் சாதியினை நாடார்கள் குறித்து ஹார்ட் கிரேவ் ஆராய்ந்தார். பின்னர் கோவை மாவட்டத்து நிலவுடைமைச் சாதிகள் பிரண்டா பெக் ஆராய்ந்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த ஆய்வில் மைக்கேல் மொபிட் , டேவிட் லீச் ஆகியோரது பங்களிப்புகளும் குறிப் பிடத்தகுந்தன.

தமிழில் 60 ஆண்டுகளுக்கு முன்னர் வேங்கட சாமி நாட்டார் எழுதியகள் ளர் சரித்திரம் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த ஒரு வரலாற்று ஆய்வு நூலாகும். பின்னர் தமிழில் வெளி வந்துள்ள நாடார் வரலாறு (மோசஸ் பொன்னையா) வரலாற்றில் வேளாண் குடிகள் தங்கராஜ் எழுதிய பள்ளர் யார்? தேவ ஆசிர்வாதம் எழு திய மூவேந்தர் யார் போன்ற நூல்கள் ஓரளவு வரலாற்று ஆய்விற்கான தரவு களைக் கொண்டுள்ளன. இவையன்றி ஒவ்வொரு வட்டாரத்திலும் வாழும் தனித் தன்மையுடைய சிறிய சாதித் திரள்கள் தங்கள் குழுவைப் பற்றிய வரலாற்று நூல்களை தமிழ் நாட்டில் நிறையவே வெளியிட்டுள்ளன.

மேற்குறித்த முயற்சிகளைத் தவிர தமிழ் நாட்டில் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளில் உருவான சமூக அரசி யல் மாற்றங்களில் சாதிக் குழுக்கள் எவ்வாறு தங்களைத் தற்காத்துக் கெண்டன அல்லது வாழ்விழந்தன என்பது குறித்த ஆய்வுகள் எதுவும் தமிழ் நாட்டில் நிகழ்த்தப்படவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளாக தமிழ் நாட்டில் ஓளரவு எண்ணிக்கை வலிமையுடைய எல்லா சாதிகளும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவீது அல்லது அதிகாரத்தில் தங்கள் பங் கை பெற்றுக் கொள்வதில் முனைப்பு காட்டி வருகின்றன. 1996 மற்றும் 2001 ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இந்த முனைப்பு வெளிப்படையாகவும் வேகமாகவும் வெளிப்பட்டிருந்தது. 2001 தேர்தலில் சாதிக்கட்சிகள் வெளிப் படையாகவே தங்களை அடையாளம் காட்டின. காலங்காலமாய் ஒடுக்கப் பட்ட மக்களின் சாதிக் கட்சியின்றி மற்ற அனைத்து சாதிக் கட்சிகளிலும் சாதி அல்லாத கட்சிகளிலும் தங்கள் சாதித் திரள் குறித்த விஞ்ஞானப் பூர்வமான பார்வையோ, செயல் திட்ட மோ இல்லை. மாறாக 'மிக விரைவா-கப் பணம் சேர்க்கும்" (easy money) வழிமுறைக்கான ஒரு கருவியாகவே இவர்களின் அரசியல் அதிகார வேட்கை அமைந்திருந்தது. மதுக் கடை உரிமம், அரசு வணிக வளாகத் தில் கடை பெறும் உரிமம், சந்தை கள், வாகன நிறுத்தங்கள், கட்டணக் கழிப்பறை அகியவற்றை ஏலம் எடுக் கும் திறன், பாலங்களில் சுங்க வரி வசூலிக்கும் உரிமம், கல் குவாரிகளில் ஏலம் எடுக்கும் உரிமை, அரசு கட்டிட அல்லது சாலை ஒப்பந்தங்கள் ஆகிய வையே குறுகிய காலத்தில் நிறையப் பணம் சம்பாதிக்கும் வழிவகைகளாக அடையாளம் காட்டப்பட்டன.

மரபு வழித் தொழிலை நவீனப்படுத்து வதிலோ, புதிய சிறு தொழில்களைத் தொடங்குவதிலோ சாதிக் கட்சி தலை வர்களுக்கு நாட்டமுமில்லை, திட்ட முமில்லை. இந்த பெரிய சாதி அலை கள் திரண்டு எழுகின்ற போது வண் ணார், மருத்துவர், பூக்கட்டுவோர் போன்ற சேவைச் சாதியார் கண் ணிற்குத் தெரியாமலேயே போய் விட் டனர். எண்ணெய் ஆட்டுபவராகிய மரபுவழித் தொழில் செய்தோர் , பெரிய மூலதன நிறுவனங்களிடம் தங்கள் வாழ்விற்கான பொருளா தாரத்தைப் பலி கொடுத்துவிட்டனர்.

நுண் அலகாக எடுத்துக் கொண்டு பேசுவதானால் தமிழ் நாடு முழுவதும் வாழும் 'வேளாளர்" (குயவர்) எனப் படும். சாதியார் தங்கள் மரபு வழி பொருளாதாரத்தை முற்றிலும் இழந்து விட்டது. இதனை விட நுண் அலகாக ஒன்றை எடுத்துப்பார்க்கலாம். ஈர்க்குப் புல், தென்னை ஈர்க்குப் பனைமரத்தின் கொளுஞ்சி, பிறவகைப் புற்கள் இவற் றைக் கொண்டு பெருக்குமாறு (விளக் குமாறு, அல்லது கூட்டுமாறு) செய்து விற்று வாழ்ந்த மக்கள் பிளாஸ்டிக் விளக்குமாறு, பெரிய நிறுவனங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதும் வறுமையின் மடியில் தள்ளப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் 'நாட்டுக்கு றவர்" எனப்படும். எளிய சாதியர். இவ்வாறு பெருமூலதன வரவுகளோடு அவற்றுக்குள் தம் வாழ்க்கையில் தொலைந்து விட்ட நூற்றுக்கணக்கான சாதியார் பற்றி தனித்தனியான ஆய்வுகள் தேவை

அண்மைக்காலமாக தமிழ் நாட்டில் தலித் இயக்கங்கள் எழுச்சி பெற்று வருகின்றன. தலித் என்ற சொல்லையே ஒடுக்கப்பட்ட மக்களில் ஒரு சாராரும். அவர்களின் அரசியல் தலைமையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் புதிய எழுச்சிக் குரலாகும். இவர்களின் முயற்சியால் அரசியல் இதழ்களும் , இலக்கிய சிற்றிதழ்களும் , நிறையவே வெளிவருகின்றன. இவற்றின் குரல்களில் இரண்டினை மட்டும் இங்கு நான் பதிவு செய்தாக வேண்டும். ஒன்று, திராவிட இயக்கத்தின் மீதும் பெரியார் மீதும் முன் வைக்கப்படும் எதிர் மறையான விமர்சனங்கள். இந்த வகையான விமர்சனங்கள் அரசியல் தலைமையிலிருந்து வரவில்லை. இலக்கியச் சிற்றிதழ்களில் மட்டும் 'அறிவு ஜீவிகளின்" குரலாக இது ஒலிக்கின்றது.

மற்றொன்று தலித் என்ற சொல்லாட்சி அல்லது கருத்தியலை ஏற்றுக் கொள்ள மறுப்பது. இந்த மறுப்பு வட்டாரம் சார்ந்ததாகவும் சாதிகளின் உட் பிரிவுகள் சார்ந்ததாகவும் அமைக-ின்றது. எண்ணிக்கைப் பெருத்த ஒன்றிரண்டு பிற்படுத்தப்பட்ட சாதிகளோடும் வட்டாரம் சார்ந்த முரண்பாட்டினை ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் தலைமைகள் முன்னிறுத்துகின்றன. இதே நேரத்தில் எண்ணிக்கை சிறுத்த, பெரிய பிற்படுத்தப்பட்ட சாதிகளோடு முரண்பாடுகள் வேண்டாம் என்ற நிலைபாட்டினையும் அவை எடுக்கின்ற ஆனால் சிற்றிதழ் அறிவு ஜீவிகள் இது குறித்து எவ்வகையான தன்னுணர்ச்சியும் கொண்டிருக்க வில்லை என்றே தோன்றுகிறது.

உலக மயமாக்கலின் காலடிகள் இந்தியப் பொரளாதாரத்தின் மீது பதிந்து விட்டன. போக்குவரத்து செய்திகள், தொடர்பு சாதன வசதிகள் மிக விரைவான வளர்ச்சியினைப் பெற்று விட்டன. பன்னாட்டு தளத்திற்கு இவையெல்லாம் மிகப் பெரிய வலிமையாகி விட்டன. நகரம், கிராமம் என்கிற பொருளியல்சார் சமூகக் கட்டமைப்புகள் உலையத் தொடங்கி விட்டன. மறுமராக கிரா[ம] புறங்களில் சாதி சார்ந்த இடப் பங்[கீடு] சிதைவுறாமல் அப்படியே தா[ன்] இருக்கின்றது. கிராமத்தின் சமூ[க] அதிகாரம் மேம்போக்காகச் சிதைவ[து] போல் தோன்றினாலும் தன்னுடை[ய] கொடுமையான முகத்தை அ[வ்] அவ்வப்போது காட்டிக் கொண்டு தா[ன்] இருக்கிறது. ஒதுக்கப்பட்ட இட[ங்] களிலேயே தலித் மக்கள் ஊராட்சி தே[ர்] தலில் போட்டியிட முடியாத நிலை[] தான் சமூக எதார்த்தம். புதிதாக[] பெறப்பட்ட அரசின் பெரிய பதவிகள் நகர்புறத்து காலணிகள் , ஆடம்ப[ர] வாழ்க்கை ஆகிய எதுவும் ஒடுக்க[ப்] பட்ட மக்களின் வாழ்க்கையிலும் அவ[ர்] கள் சந்தித்த சமூக அவமான[ங்] களிலும் பெரிய மாற்றங்கள் எதனை யும் உண்டாக்கவில்லை.

சமூக ஒடுக்குமுறை என்பது 'நாக[ரி] கமான முறையில் நவீனமயப்படுத்த[ப்] படுகிறது" எனவே இந்தக் கட்டத்தி[ல்] சாதிய ஆய்வுகளை மேற்கொள்ளு[ம்] அறிஞர்களின் முன்னால் கடுமையா[ன] பணிகள் காத்துக்கிடக்கின்றன. பி[ன்] வரும் கேள்விகளை அவை நமக்கு முன்னிறுத்துகின்றன.

1. 'பார்ப்பனீயம் என்பது மறைமுகமா[ன] அதிகாரம் சார்ந்த கருத்தியலும் ஒரு நடைமுறையும் ஆகும்" என்பது[ம்] உண்மை தானா?

2. திராவிட இயக்கத்தினை பிற்பட்ட சாதியார்போல ஒடுக்கப்பட்ட மக்கள் பயன்படுத்த முடியாமைக்கான சமூகக் காரணங்கள் யாவை?

3. பிற்பட்ட மக்களின் சாதி உணர்வுசார்ந்த சமூக உளவியல் எந்த வகையில் சிதைக்கப்படும்? அதற்கான இயக்கப் பங்களிப்பு எவ்வாறு இருக்கக் கூடும்?

4. சாதி உட்குழுக்கள் சார்ந்த உயர்குடி மனப்பான்மையினை எவ்வாறு எதிர் கொள்வது?

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் மட்டுமே சாதிய ஆய்வுகளைச் சரியான தளத்திற்கு இட்டுச் செல்லும் என்று நம்புகின்றோம்.

---


நூல்கள்:

1. Moffatt, Michael. An Untouchable Community in South India. New Jersey: Princeton, 1979.

2. David Ceidge - The Parayar of Valhira Manickam

3. Robert Hardgrave's study, The Nadars Of Tamilnadu:The political culture of a community in change (1969)

4. Homo Heirarchicus – Dumont, Louis Homo Hierarchicus: The Caste System and Its Implications. (1970)

5. A South Indian Sub-caste: Social Organization and Religion of the Pramalai Kallar, LOUIS DUMONT. Translated by MICHAEL MOFFAT, LEWIS MORTON, and ALICE MORTON, Revised by the author and A. STERN , Delhi and Oxford: Oxford University Press. 1986.

6. tWikapd; gpd;ddp - (NCBH)

7. Peasant Society in Konku: A Study of Right and Left Sub castes in South India, Brenda E.F.Beck

www.padippakam.com



# மானிடத் தோற்றம் பற்றிய புதிய ஆய்வு அணுகுமுறைகள்

முனைவர் கே.வி.எஸ். நம்பி
(மூத்த விஞ்ஞானி. (ஓய்வு) பாபா அணு ஆய்வு மையம். மும்பை)
மொழிபெயர்ப்பு: ரொனிற்றா அகஸ்ரின்

னித இனத்தின் தொடக்கம் எங்கிந்து பிறந்தது என்ற சிக்கல்கள் ற்றிய ஆய்வுக்கான ஆர்வத்தை nternational Genome Project ண்டும் வெளிக்கொணர்ந்துள்ளது. ந்த தொடர்கின்ற ஆய்வு, முதல் னிதர் எனக் கருதப்படும் ஆதாம் வாள் கிழக்கு ஆப்ரிக்காவில் தான்றி னர் என்கிறது. இது மத்திய ிழக்கு ஆசியாவில் மசபொத்தேமியாவில் மனித நாகாகம் ஆரம்பித்தது என் பதனையோ அல்லது இதற்கும் முன்பே மேரியாவில் மனித இனம் இருந்தது ன கூறப்பட்டு வந்ததையோ சந்தேகத்திற்குரியதாக்குகிறது. ஆயினும் ிலர் மனித நாகரிகம், மனித இனம் ன்பன தத்தமக்கு என தனி வரைறைகளைக் கொண்டுள்ளன என்று வாதிடுகின்றனர். இன்னொரு சிந்தனைவாதிகள் குழு, இந்தியாவின் தெற்கு முனையில் இருந்த லெமுரியா என்ற அழிந்து போன நிலப்பரப்பில் பெருமளவில் ஆரம்ப மனித இனம் வாழ்ந்தனர் என்ற கருத்தை ஆதரிக்கின்றனர். இன்று மிகவும் கேள்விக்குரியதொன்றாக இருக்கிறது. ஆதாரங்கள் அழிந்து போனமையும் கடலின் அடி அகழ்வாய்வு ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்படாமையுமே லெமுரியா கேள்விக்குரியதாக இருப்பதற்கு காரணமாகும்.



கிழக்கு ஆபிரிக்கா, சுமேரியா, லெமுரியா, ஆகிய மூன்று இடங்களுக்குமிடையே ஆதித் தமிழர் வாழ்ந்தனர் என்பதற்கான சான்றுகளைக் காட்டி நிற்பதில் உள்ள போட்டி நிலையை விளக்கவும் குறிப்பாக லெமுரியாவிலும் சுமேரியாவிலும் ஆதித் தமிழ் நாகரிகம் இருந்தது பற்றியும் இம் மூன்று இடங்களும் புவியியல் ரீதியாக ஒன்றுக்கொன்று அண்மையில் இருந்தாலும் முதல் மனித இனம் தமிழரே எனலாம்.

**கிழக்கு ஆபிரிக்க நிலை:**

கிழக்கு ஆபிரிக்காவில் மனித இனம் ஆரம்பித்தது என்பதை International Genome Project ஆதரிக்கிறது. 50 000 வருடங்களுக்கு முன்பே மனித இனத்தின் இடப்பெயர்வு கிழக்கு ஆபிரிக்காவில் ஆரம்பித்தது என்றும், முதற் பிரிவு தென் இந்தியாவை நோக்கிச் சென்றது என்றும் மனித இடப்பெயர்வை விபரிக்கும் வரைபடங்கள் காட்டி நிற்கின்றன. இதே காலகட்டத்தில் இன்னொரு பிரிவு சுமேரியாவை நோக்கிச் சென்றதாகவும் காணப்படுகிறது.

உயிர்அணுக்கள் மூலம் மனித இனத்தை கண்டுபிடிக்கும் முறையில் நிரந்தரமற்ற தன்மைகள் பல உள. முதற்கண் மனித உயிரணுக்கள் வாழும் காலம் குறிப்பிடத்தக்க ஒரு அளவையே எப்போதும் கொண்டிருப்பதில்லை. இது மனித வர்க்கத்திற்கு வர்க்கம் மாறுபடும். மாறுபடும் அளவு 30000 த்திலிருந்து 130000 வரையாகும். இரண்டாவதாக ஒரு பரம்பரையின் சாராசரி வாழும் காலத்தைக் கணிப்பிடுவதில் இருக்கும் இடர்ப்பாடுகள் பல. இதற்குக் காரணம் ஆயிரக்கணக்கான வருடங்களில் வரும் சனத்தொகை வளர்வீதத்தில் ஏற்படும் மாற்றங்களும் இடப்பெயர்வு வீதங்களில் ஏற்படும் மாற்றங்களுமே. அறிக்கைகளின் படி பரம்பரை இடைவெளி 25 வருடங்களுக்கு ஒரு முறையே நடைபெறும். கிறிஸ்து பிறப்புக் காலத்தில் உலக சனத்தொகை நூறு மில்லியனாக இருந்தது. 7000 பரம்பரையினருக்கு முன்னர் சனத்தொகை 50000 ஆக இருந்தது. ஒரு வருடத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வு சில ஆயிரம் மக்களைக் கொண்ட குழுக்களாக 300 மைல்களுக்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே இடம்பெற்றது.

பக்ரீரியாக் கிருமி மூலம் உயிரணுக்களில் ஏற்படும் மாற்றங்களைச் சில சமயங்களில் விஞ்ஞான ரீதியாகக் கூட விளக்கமுடியாமல் உள்ளது. மிகவும் பெரிய பிரச்சினையாக இருப்பது DNA சார்பானவை குறிப்பிட்ட காலத்தின் பின் மறைந்து போய்விடுவதேயாகும். ஆயினும் அமெரிக்காவிலும் இங்கி லாந்திலும் உள்ள உயிரணுவாய்வு நிலையங்கள் உமிழ்நீர் மூலம் பெற்றுக்கொண்ட DNA மாதிரிகளைக் கொண்டு ஆதாம் ஏவாளின் பத்து மகன்கள் அல்லது 18 மகள்கள் வழி வந்தவர்கள் என்று சான்றிதழ்கள் வழங்க முன்வந்துள்ளன. ஆனால் பைபிளில் கூறப்படும் ஆதாம் ஏவாளுக்கு இரண்டு பிள்ளைகளே!
மிகப்பழைய எலும்புக்கூடுகள் கிழக்கு ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டதனால் இது மற்றைய இடங்களை விட முன்னணியில் நிற்கிறது. ஆயினும் புவியியல் ரீதியான எந்த ஆதாரங்களும் இல்லை.

**சுமேரியத் தமிழர்?**

மெசபொத்தேமிய நாகரிகத்தின் ஒரு பகுதியான (கி.மு. 6000) சுமேரியாவில் கிடைக்கப்பெற்ற களிமண் தட்டுக்களே (கி.மு. 3000)ஆரம்ப கால மனித வரலாற்றின் பழமையைக் காட்டி நிற்பதாகும். அண்மைக்காலத்தில் மலேசியாவைச் சேர்ந்த பேராசிரியர். லோகநாதன் சுமேரிய பழைய இலக்கியமும் Mutaribayam of Sulgi யும் பழைய தமிழ் மொழியே என்று தன் ஆய்வூடாக கூறுகிறார். கி.மு. 1900 எனத் திகதியிடப்பட்ட கல்வெட்டு மூலம் கி.மு. 4000 - கி.மு. 1000 ஆண்டுகளில் தமிழ்ே உலக மொழியாக இருந்தது என்று கருதமுடிகிறது. குமறு என்ற குமரிநாடு பழந்தமிழரின் இடம் பற்றிய குறிப்புகளும் இதில் உண்டு. தற்போது குமரிக்கண்டம் எனப்படும் தென் இந்தியப் பிரதேசத்திற்கும் சுமேரியாவிற்கும் தொடர்பு உண்டு. இதுபற்றி யாரும் ஆச்சரியப்படத்தான் முடியும்.

Genome Project ன் புதிய அறிக்கைகளின் படி மேலே குறிப்பிட்ட பிரதேசத்தில் தான் புராதன மனித நாகரிகம் தோன்றியது என்பதை மரபு ரீதியாக மறுக்கக்கூடிய ஆதாரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மறுபக்கத்தில் மெசபோத்தேமிய பிரதேசமும் தென் இந்தியப் பிரதேசமுமே 56000 வருடங்களுக்கு முன் மனித இடப்பெயர்வு முதலில் நடைபெற்ற இடங்களாக கருதப்படுகிறது. இதில் உறுதிப்பாடற்ற நிலை நிலவுவதால் இவ்விடப்பெயர்வுகள் கிழக்கு ஆபிரிக்கா, தென் இந்தியா, அல்லது சுமேரியாவில் நடைபெற்றிருக்கலாம்.

**லெமுரியா - புராணத்திலிருந்து உண்மைக்கு:**

லெமுரியா என்ற தலைப்பே ஈர்க்கக் கூடிய ஒரு தலைப்பு. அகழ்வாராய்ச்சி பதிவுகளும் வரலாற்றுப் பதிவுகளும் இல்லாத காரணத்தால் இது ஒரு

www.padippakam.com


புராணக்கதை போல் தோன்றுகிறது. International History Project இத்தத் தலைப்பில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தியது. லெமுரியாவில் இருந்த இனம் பற்றிய அனுமானங்களின்படி இவை வாலில்லாக் குரங்கு போலும் முட்டை இடும் இனமாகவம் மூன்று கண்களை உடையவையாகவும் இருந்தன. (சிவனைப் போல்!)

பரிணாம வளர்ச்சியின் படி முதல் மனித இனம் கி.மு. 20 000 க்கும் கி. மு. 75 000 ஆண்டுகட்கும் இடையே தோன்றியிருக்கலாம். ஆங்கில் உயிரியலாளர் Phillip.L. Schlater தான் லெமுரியா என்று பெயரிட்டவர். இவர் கிழக்கு ஆபிரிக்கா, மடகஸ்கார், தென் இந்தியா, East Indian Archip elago மற்றும் primitive prmates ஆகிய இடங்களில் "லெமூர்" ("Lemurs") இருந்தனர் என்கிறார். இன்னும் இந்நிலப்பரப்புகள் இன்னும் விரிவடைந்த பிரதேசங்கள் என்றே நம்புகின்றனர். கலிபோர்னிய இந்தியர்களும் லெமுரியன்ஸ் என்று நம்பப்படுகிறது.

சன்ரா பாபராவில் (Santa Barbara) கண்டுபிடிக்கப்பட்ட ஆதி மனிதர் பற்றிய கலைப்பொருட்களில் (artefact) உள்ளவை லெமுரியர் பற்றியதாக இருக்கலாம்.

(25-000கி.மு). இவ்வாறே அவுஸ்திரேலியாவில் உள்ள ஆதிக்குடிகளும் லெமுரியத் தொடர்புடையவர்கள், சரித்திர காலத்திற்கு முந்திய தமிழராக இருக்கலாம் என்கின்றனர். சுமேரிய இலக்கியத்தோடு ஒப்பிடும் போது தமிழ் ஆவணங்கள் மிகவும் இளமையானதாகக் கருதப்படுகிறது. குறிப்புகளை மீட்டுப் பார்க்கும்போது குமரிநாட்டு தமிழ் அரசு இன்றைய கன்யா குமரியின் தெற்கில் இருந்து அவுஸ்திரேலியா வரை இருந்திருக்கிறது எனக் குறிப்பிடுகிறது. அவுஸ்திரேலிய பழங்குடியினரதும் தமிழரதும் பேச்சு வழக்கு ஒரேவகையாக இருந்திருக்கிறது. லெமூரிய சார்ந்த இடங்கள் எனக் கருதப்படும் இடங்களில் இன்றும் தமிழ் மொழி பேசப்படுவதாக மேலே குறிப்பிட்ட ஆங்கில உயிரியலாளர் குறிப்பிடுகிறார். அகழ்வாராய்ச்சியில் பெயர் பெற்ற மகாதேவன் யூன், 4, 1979 ம் ஆண்டு திகதியிடப்பட்ட ஹிந்து பத்திரிகையின் பதிப்பாசிரியருக்கு கடிதத்தில் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். அது "திராவிடப் புராணம் இனி வேண்டாம்". ("No more A Dravidan Myth") இவர் மிகவும் ஸ்திரமாக திராவிட நாகரிகம் உலகில் பழமையானது என்றும் முதல் மனிதர் தமிழரே என்றும் கூறுகிறார். திராவிட அரச வம்சத்தை திகதி ரீதியாக கி.மு. 30 000 ஆண்டளவில் இருந்து ஒழுங்கு படுத்தியும் இருக்கிறார். (தென் மதுரைச் சங்கம் முத்தாளம் நிலந்தரு திருவீர பாண்டியன் அரசனுக்குக் கீழ் இருந்த காலம்)

இவர் மேலும் கூறுவதாவது கிழக்கு ஆபிரிக்க நீக்ரோக்கள் தமிழ்நாட்டை கி.மு. 16 500 லிருந்து 16 000 வரை ஆண்டனர் என்றும் இக்காலத்திய முக்கிய அரசர்கள் உடுகண்ணன், மாறைக்கண்ணன், அரிவிதமாலியும் திருபற்றுக்கால் ஆகியோர். (கடைச்சங்கம்) கி.பி. 235 காலம் வரையான ஒழுங்குபடுத்தப்பட்ட அரச வம்சத்தின சரித்திர நிகழ்வுகளுடனும் திகதிகளுடனும் வானியலாளர் கலாநிதி. சீனிவாச ராகவனும் உடன் பட்டுள்ளார். அகழ்வாராய்ச்சியாளர் மகாதேவன் எழுதிய கடிதத்திற்கு உலகெங்கும் இருந்த அறிஞர்களிடமிருந்து கருத்துகள் வெளிவந்தன. அதில் பெரும்பாலானோர் மகாதேவனின் கருத்துடன் உடன்பட்டனர்.



## முடிவுரை:

ஆதாம் ஏவாள் தமிழரா? ஆபிரிக்கரா? என்று விவாதிப்பதற்கு முன் மனித இனம் குறிப்பிட்ட ஒரு தனிச் சோடியிலிருந்து ஆரம்பித்ததா அல்லது உலகின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றியதா என்று பார்ப்பது நல்லது. இது ஓரே நேராக இல்லாமலும் இருந்திருக்கலாம். பல்வேறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தத்துவ ரீதியாக எல்லா மனிதரும் "நல்லது" "கூடாது" என்பது பற்றி கிட்டத்தட்ட ஓரே கருத்துக்களையே கொண்டுள்ளனர். எல்லோரும் தமக்கு மேற்பட்ட ஒரு சக்தி விண்வெளியில் (Space) ல் உண்டு என்று நம்புகின்றனர். பரம்பரை பரம்பரையாக வரும் கதைகளும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.

உதாரணமாக நோவாவின் கதை பைபிளிலும் குர்ரானிலும் உள்ளது போலல்லாமல் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது. Sulgi, இந்து சமய நாலாயிர திவ்வியபிரபந்தம் போன்றவற்றிலும் இவ்வாறு கதை வேறுபாடுகள் உண்டு. எல்லா மொழி எழுத்து வடிவங்களிலும் முதலாவது எழுத்து ("a") "அ" என்ற சத்தத்துட

மற்றொரு பக்கத்தில் விஞ்ஞான சிந்தனைகளின் அடிப்படையில் உயிரியல்-இரசாயனவியல் அடிப்படையில் பரிணாம வளர்ச்சி பல்வேறு இடங்களில் பல்வேறு காலங்களில் மனித இனம் தோன்றியிருக்கலாம் அந்தந்த இடத்தின் காலநிலைக்கு ஏற்ப என்ற கருத்தும் கவனத்திற்குரியதாகிறது. உலகிலுள்ள சமய இலக்கியங்கள் யாவும் குறிப்பிடக்கூடிய பரிணாம வளர்ச்சிப் போக்காக மீனினம், தரையிலும் நிலத்திலும் வாழும் உயிரினம், பாலூட்டுவன, குரங்கினம் போன்ற சகல விலங்குகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. வெப்ப வலய நாடுகள் இவ்வாறான விலங்குகளுக்கு ஏற்ற காலநிலையை கொண்டிருந்திருக்கும். இதனால்தான் ஆபிரிக்கா- இந்தியா போன்ற இடங்கள் முதல் மனிதன் தோன்றக் கூடிய இடமாக கருதக் கூடியதாக இருந்தது.

மில்லியன் ஆண்டுகளுக்கு முன், புவியியல் இடைவெளிகள் கிழக்கு ஆபிரிக்கா, சுமேரியா, லெமுரியா போன்ற இடங்களைப் பெரிதளவில் பிரித்து வைக்கவில்லை. உயிரணு ரீதியான வரைபடங்களை காலத்தால் பின்நோக்கிப் பார்க்கும் போதும் இந்த ஆய்வுகளில் உறுதியற்ற தன்மைகள்

னேயே ஆரம்பிக்கிறது. யானைத் தலையை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறைகளும் உலகின் பல பாகங்களில் உண்டு. இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

அடிப்படைக் கருத்து என்னவென்றால் பல்வேறு பாகங்களில் இருக்கும் இனமக்களின் சிந்தனை ஒரு பொதுத் தன்மையை கொண்டிருக்கிறது என்பதாகும்.

நிலவுவதாலும் இம்மூன்று இடங்களில் ஒன்றிலேயே மூலத்தோற்றம் தோன்றியிருக்கலாம். இதுவரை வந்த வெளியீடுகளின் அடிப்படையில் இந்தியா, சீனா ஆகியவை சனத்தொகையில் கூடிய உலக நாடுகளாக திகழ்கின்றன என்ற உணர்வை எவரும் மறுக்கமுடியாது. ஒரு கைப்பிடியளவு ஆந்திர பிரதேச மக்களே உயிரணு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்வாய்வுகள் அவுஸ்திரேலிய பழங்குடியினர், இந்திய தமிழ்நாட்டினர், நீலகிரியின் தோடா இன மக்கள், நரிக்குறவர் போன்றோரிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். மடகாஸ்கார், மொறிசியஸ், லட்சத்தீவு, அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் இனங்களை கண்டுபிடிப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உயிரணு வரைபட முடிவுகளுக்கு வருவதற்கு இது சம்பந்தமான தரவுகளை, குழு ரீதியான எண்ணிக்கை ஆகியவற்றை சேகரித்த பின்பே எமது முன்னோரின் தொடர்புகள் பற்றிய முடிவுகளுக்கு வரமுடியும். மிகவும் தீர்க்கமான உணர்வு லெமுரியத் தமிழர்தான் புராதன மனித இனம் என்று கூறக்கூடியதாக இருக்கிறது. ஆவணங்களும் புழங்குபொருள்சார் ஆதாரங்களும் இல்லாத காரணத்தால் இவற்றை நாம் மறுக்க முடியாது. இனப்பிரச்சினைகளில் பழைய குமரிக் கண்ட- லெமூரிய பற்றிய விலைமதிப்பற்ற ஆவ்வணங்கள் பதிவுகள் அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கைத் தமிழர் கவலயுடன் கூறிவருகின்றனர். இது தொடர்பான கடலடி ஆய்வுகளை இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் தெற்கே செய்வதற்கு சர்வதேச அளவில் முனைப்புகள் உள்ளன. ◘

(குறிப்பு: ஆங்கிலக் கடடுரையில் சான்றுகளைப் பார்க்கவும்.)

படிப்பகம்

www.padippakam.com



# மழைச் செம்புச் சடங்கும் மூதேவி வழிபாடும்

மிழ்நாடு போன்ற வறண்ட வெப்ப ண்டல நாடுகளில் உள்ள மக்கள், றிப்பாக உழவர்கள் மழை வேண்டிப் ல சடங்குகளைச் செய்கின்றனர். மழைச் செம்பு எடுத்தல்,மழைக்கஞ்சி ாய்ச்சுதல்,கொடும்பாவி கட்டி ரித்தல், ஒப்பாரி வைத்தல், கழுதை ளுக்கு மணம் செய்து வைத்தல் ான்றன அவற்றுள் சில பொது வாக, ழைச் சடங்குகள் என்பன மந்திரச் டங்குகள் (MAGICAL RITUALS) ஆகும். இங்கே அது ஒத்த மந்திரச் டங்காக (IMITATIVE MAGIC) அல்லது பாவனை மந்திரச் சடங்காக கழ்த்திக் காட்டப்படுகிறது. "ஒத்தது த்ததை உருவாக்கும்" என்பதே ம்மந்திரச் சடங்கின் அடிப்படை ாகும். அதாவது ஏற்பட வேண்டிய ிளைவும் அதனை அடையச் சய்யும் செயலும் ஒத்திருக்கும்.

ங்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் காள்வது,நெல்லை மாவட்டம் சங்கரன் கோவில் - புளியங்குடி தன்மைச் சாலையிலுள்ள) முள்ளி ளம் என்னும் சிற்றூரில் நடக்கும் மழைச் செம்புச் சடங்கையே நெல்லை ாவட்டத்தின் வறண்ட பகுதிகளுள் ங்கரன் கோவில் பகுதியும் ஒன்று ன்பது நினைவில் கொள்ளத்தக்கது.

மழைக்குரிய காலமாகிய ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மழை பெய்யாத போது இச்சடங்கு நிகழ்த்தப் படுகின்றது. ஏதாவது ஒரு செவ்வாய் அல்லது வெள்ளிக் கிழமையில் மாலை வேளையில் இது நடை பெறுகின்றது.

இச்சடங்கை முன்னின்று செய்பவர் கள் பெண்களே. பூப்பெய்தாத மூன்று சிறுமிகள் செம்புகளில் தண்ணீர் நிரப்பி அவற்றை எருக்கலங் குழை பால் மூடி எடுத்து வருவர். அச்செம்பு களுக்கு முறையே 'மழை" (அ) குளச்செம்பு", வெள்ளாமைச் செம்பு", பஞ்ச செம்பு" என்று பெயர் கொடுப்பர். பின்னர் அவற்றை ஊர்ப்பொது இடத்தில் வைப்பர். அவற்றின் அருகே நிறைநாழிக்கு மாற்றாக முக்கால்வாசி நெல் நிரப்பிய நாழி ஒன்று வைக்கப் பட்டிருக்கும். அதில் பெண்கள் தங் கள் தலையில் இருந்து ஒரு பேனை எடுத்து விடுவர். பின்னர் நாழியை முழுவதும் நெல்லால் நிரப்புவர். அதன் மீது எருத்துண்டு,மஞ்சள் துண்டு, கரித்துண்டு மூன்றையும் வைப்பர். பின்னர் செம்புகளில் உள்ள தண்ணீரில் விளக்கெண்ணையைச் சொட்டுச் சொட்டாக மூன்று முறை விடுவர். அப்படி ஒவ்வொரு செம்பி லும் விடும்பொது மழை! மழை! (அ) குளம்! குளம்! என்று ஒரு சொட்டும் வெள்ளாமை! வெள்ளாமை! என்று ஒரு சொட்டும்,பஞ்சம்! பஞ்சம்!என்று ஒரு சொட்டும் சொல்லிக் கொண்டே விடுவர்! பின்னர் செம்புகளை மீண்டும் எருக்கலங்குழையால் மூடிவிடுவசர். பிறகு 7 (அ) 9 வீடுகளில் பழஞ்சோறு வாங்கி அதை அவ்வூரைச் சேர்ந்த வண்ணார் சமூகப் பெண்ணிடம் (வண்ணாத்தியிடம்) கொடுப்பர். அதன் பின்பு அந்தப் பெண்ணை எருக் கலங்குச்சி ஒன்றினால் அடித்து விரட்டுவது போன்று பாவனை செய்வர். அந்தப் பெண் மழை! மழை!என்று சத்தமிட்டபடியே ஊரின் வடக்குத் திசையை நோக்கி ஓடிப் போய் விடுவார்.

பின்னர் 'பஞ்சம" என்ற பெயர் கொடுக்கப்பட்ட செம்பை ஊருக்கு வெளியே வடக்கில் உள்ள ஒரு முச்சந்தியில் கொண்டு விட்டு விட்டுத் திரும்பிப் பாராமல் வந்துவிடுவர். மற்ற இரண்டு செம்புகளில் உள்ள நீரையும் ஊருக்கு நடுவில் அல்லது கிழக்கு, தெற்கு திசைகளில் விடுவர். மேற்குத் திசையில் விடுவதில்லை. ஊருக்கு மேற்கே மழைநீர் கொண்டு வரும் மேற்கு மலைத் தொடர் இருப்பது குறிக் கத்தக்கது. பின்னர் சடங்கு நடை பெறும் ஊர்ப் பொது இடத்தில் பொங் கல் வைத்து அனைவரும் பகிர்ந்துண் ணுவர்.

இச்சடங்கில் நெல்லில் விடப்பட்ட பேன் ஊர்ந்து எருவின் மீது ஏறினால் 'மிகுந்த செழிப்பு". மஞ்சளின் மீது ஏறினால் 'விளைச்சல் உறுதி". கரிய ின் மீது ஏறினால் 'நிலமும் கரியாகி விடும்" என்பதும் ஒவ்வொரு செம்பி லும் உள்ள 'பஞ்சச் சொட்டு" மற்ற இரண்டுடனும் சேராது தனித்து இருந் தால் மழை பெய்யும். சேர்ந்துவிட்டால் மழைபெய்யாது என்பதும் இச் சடங்கின் வழி பெறப்படும் நம்பிக்கை ஆகும்.

இங்கே மழைவேண்டிச் செய்யப்படும் இத்தகைய நிறை நாழிப் பேன் சடங்கு தென்மாவட்டங்களில் வேறு சில இடங்களில் பெண் வீட்டாரால் மாப் பிள்ளையைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்படுகிறது எனத் தெரிகிறது. இச்சடங்கில், மழைச் செம்புச் சடங் கில் இடம் பெறும் எருத்துண்டுக்குப் பதிலாக தங்க நகை வைக்கப்படும். நெல்லில் விடப்படும் மணப் பெண்ணின் தலைப்பேன் மஞ்சளில் ஏறினால் அந்தச் சம்பந்தம் மிகச் சிறந்தது. தங்க நகையில் ஏறினால் பெண்ணைக் கொடுக்கலாம். கரித்துண் டில் ஏறினால் மண உறவு நடை பெறாது என்பது இச்சடங்கின் மூலம் பெறப்படும் நம்பிக்கையாகும்.

மழைச்சடங்கு போன்றதொரு நாட்டார் சடங்கை, சமூக இயல் நோக்கில் ஆராயும் போது, அதில் பங்கு பெறும் சாதிகளையே முதலில் கணக்கில் கொள்ள வேண்டும். அவ்வகையில் முள்ளிகுளம் சிற்றூரில் நடைபெறும் சடங்கில் இரண்டு சாதியினர் பங்கு பெறுகின்றனர். முதலாமவர், அச் சடங்கை நடத்துகின்ற கோனார் சாத ியினர். இவர்களே அந்த ஊரில் ஆதிக்கச் சாதியினராகவும் நில வுடைமைச் சாதியினராகவும் உள் ளனர். இரண்டாமவர், அடித்தட்டு மற் றும் சேவைச் சாதியினரான வண்ணார் சாதியினர்.

சமூக இயல் ஆய்வுகளில் அடித்தட்டு மக்களின் சமூக வரலாற்றுப் பாத்தி ரத்தை முதன்மைப்படுத்தி ஆராயும் போக்கு தற்போது வளர்ந்து வருகின் றது. இவ்வகையில் இச்சடங்கில் இடம் பெறும் வண்ணார் சாதியினரை, அவர் கள் இச்சடங்கில் பெறும் இடத்தின் காரணமாக, அச்சாதியினருடைய வழி பாடு மற்றும் தொல் சமயச் சடங்கியல் தொடர்புகள் குறித்து கவனமாக ஆராய்வது இங்கே அவசியமாகிறது.

வண்ணார் சாதி போன்ற அடித்தட்டு மற்றும் அவைதீகச் சாதிகளிடையே இன்றுள்ள சூழலில் எல்லாத் தெய் வங்களையும் வழிபடும் வழக்கம் உள் ளது. எனினும் சாதிய நிலையில் அவற்றோடு குறிப்பான உறவுடை யவை எனக் கற்பிக்கப்பட்ட சில நாட் டார் தெய்வங்களை அல்லது அவை திகத் தெய்வங்களை நம்மால் பட்டிய லிட இயலும். இதைப் பறையர் - காத் தவராயன், சக்கிலியர் - மதுரைவீரன், கொல்லாரிகள் - உலைக்கூடத்தான் (முள்ளிகுளம்), வேளாளர் - கருப் பசாமி , நாடார்கள் - பத்திரகாளியம் மன் என்கிறவாறு நாம் காணலாம். தெளிவான வரையறை இல்லாத காரணத்தால் வண்ணார் சாதியும் அதற்குரிய தெய்வமும் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.

ஆனால் நாம் ஏலவே விவரித்த மழைச் செம்புச் சடங்கும்,அதில் வண்ணார் சாதி பெறும் இடமும் அச்சாதிக் குரியதாகக் கற்பிக்கப்பட்ட தெய்வம் இன்னது என்பதைக் குறியீட்டு மற்றும் சடங்கு அடிப்படையில் வரையறை செய்ய உதவுகின்றன. இக்குறியீடு களையும் சடங்குகளையும் ஆராய் வதற்கு ஏதுவாக இச்சடங்கோடு தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட அவைதீகப் பெண் தெய்வத்தைப் பற்றி அறிவது அவசியமாகிறது. அவ் வகையில் மூத்த தேவி எனப்படும் மூதேவி பற்றிச் சில் செய்திகளை ஒருங்கு திரட்டிக் காண வேண்டும்.

'முத்தவள்" என்று பொருள்படும் பெயர் கொண்ட மூதேவி, இனக்குழு காலத்திய வளமை மற்றும் தாய்த் தெய்வம் ஆகும். வடமொழியில் 'ஜேஷ்டா" என இவளை அழைப்பர். ஜேஷ்டா என்றால் மூத்த என்று பொருள். தமிழ் நாட்டில் குறிப்பாக வட தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திய மூதேவிச் சிற்பங்கள் தற்போது பெருமளவில் கண்டறியப்பட்டுள்ளன. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்ல வர் படைப்பான காஞ்சிபுரம் கைலாசந ாதர் கோவிலில் உள்ள ஐம்பத்தெட்டுச் சுற்றுக் கோவில்களில்,ஜேஷ்டா தேவிக்கு மூன்று கோவில்கள் உள் ளன. நெல்லை மாவட்டத்தில் ஆய்வா ளருக்குத் தெரிந்து ஊர்க்காட்டுச் சிற் றூரில் இத்தெய்வத்துக்குச் சிலை இருக்கிறது. இதனைக் கண்டறிந்த தொல்லியல் அறிஞர் மா. செந்தில் செல்வக்குமரன்,உருவ இயல் அமைதி கொண்டு இதன் காலம் கி. பி. 10 - ஆம் நூற்றாண்டு என வரையறை செய்துள்ளார்.

## திருநீலகண்டன்

பெருத்த வயிறும்,பருத்துச் சரிந்து காணப்படும் மார்பகங்களும் இத் தெய்வச் சிலையின் பொது இயல் பாகும். இது இவள் வளமை காட்டும் தாய்த் தெய்வம் என்பதை உறுதிப் படுத்தும். அமர்ந்த கோலத்தில் வலது கை அபய முத்திரையுடனும், இடது கை தொடை மீது பதிந்தும் காணப் படும். சில இடங்களில் வலது கையில் நீலோற்பல மலரும், இடது கை இருக்கை மீதும் காணப்படும். இவள் கரிய நிறமுடையவள். என விஷ்ணு தர்மோத்திர புராணம் குறிப்பிடுகிறது. மாட்டுமுகம் கொண்டு,வலது கையில் தண்டமும்,இடது கையில் கயிறும் ஏந்தியவாறு மூதேவியின் வலப்புறம் காணப்படும் ஒரு ஆண்உருவம் இவ ளது மகனாகக் கருதப்படுகிறது. 'மாந்திகன்" என இவன் அழைக்கப் படுகிறான். இவளின் இடப்புறம் காணப் படும் பெண் உருவம் இவளது மகள் எனக் கருதப்படுகிறது. இவள் 'மாந்தி" என அழைக்கப்படுகிறாள். மூதேவி யின் கொடி காக்கைக் கொடி, வாகனம் கழுதை,கைக்கருவி விளக்கு மாறு.

மூதேவியின் தோற்றம் பற்றி விஷ்ணு தர்மோத்திர புராணம் குறிப்பிடும் போது, 'பாற்கடலைத் தேவர்களும் - அசுரர்களும் கடையும் போது அதி லிருந்து பல பொருட்களும், உயிர்க ளும் தோன்றின. அவற்றுள் லட்சுமி தேவியும் தோன்றினாள். அவளுக்கு முன்பு தோன்றியவள் தான் மூதேவி"

www.padippakam.com

என்கிறது லிங்க புராணம். இவள் தோற்றம் பற்றிக் கூறும் போது," பாற் கடலில் காலகூடம் எனும் உலகையே அழிக்கும் நஞ்சு தோன்றியது. அதனைத் தொடர்ந்து மூதேவி தோன்றினாள்" என்கிறது, மேலும், (வேதமரபுக்கு எதிரான) பவுத்தர்கள் வாழும் இடங்களும்,வைதீகமல்லாத சடங்குகள் நடைபெறும் இடங்களும் மூதேவி விரும்பி வாழும் இடங்கள் என்கிறது. இவற்றோடு அரசமரத்தின் நிழல், விளாமரத்தின் அடி,விளக்கின் நிழல், மனிதர் நிழல், இருள், ஆசாரமில்லாத அந்தணன் நிழல், உண்ட நீரின் எச்சில், ஆடை துவைத்த நீர், விளக்குமாற்றின் புழுதி, வெந்த சாம்பல், வேகாத கரிப்புழுதி, ஆட்டுத் தூசு ஆகியனவும் மூதேவி வாழிடங்களில் சிலவாக குறிப்பிடப்படுகின்றன. மேலும், அவள் தனது கணவனான துசாக முனிவரால் கைவிடப்பட்டவளாகவும் உணவு, உறைவிடத்துக்காக அலைந்து திரிபவள் எனவும், விஷ்ணுவின் கருணையைப் பெற்ற பின் விஷ்ணு பக்தர்களாலும், பெண்களாலும் உணவு படைக்கப்படுபவள் எனவும் லிங்க புராணம் விவரிக்கிறது.

தமிழ் நிகண்டுகள் இவளைத் தவ்வை, காலடி, மூதேவி, காக்கைக் கொடியாள்,கழுதை வாகனத்தாள், முகடி, ஏகவேணி (ஒற்றைச் சடையாள்) என பல பெயர்களால் சுட்டுகின்றன. லிங்க புராணம் இவளை 'லட்சுமி அல்லாதவள்" என்று பொருள்பட "அலெட்சுமி" என்றும் அழைக்கிறது. தமிழ் நிகண்டுகள் இவளைத் திருவின் முன் செமுங்கடற் பிறந்தாள். திருவினுக்கு மூத்தாள் என்றும் அழைக்கின்றன. இதே போன்று மூதேவியை லட்சுமிக்கு எதிர்வாகவும்,சோம்பலின் வழவாகவுமே வள்ளுவரும் பார்க்கிறார்,

மடிஉள்ளாள் மாமுகடி என்ப மடி இலான்
தாள் உளாள் தாமரையினாள்
(அதி-62 ஆள்வினையுடைமை)

பார்ப்பனர்கள் துஷ்டர்களாக இருந்தாலும் வணங்கத் தக்கவர்களே. மாறாக அடித்தள மக்களான சூத்திரர்கள் நல்லவர்களாக இருந்தாலும் கீழ் மக்களே" என்பதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் கற்பிக்க முயலும் பராசர ஸ்மிருதி.

'பசுவொன்று துஷ்டத்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறது குட்டி போட்ட கழுதையொன்று சாதுவாகவும் வீட்டிலிருக்கிறது. இவ்விரு மிருகங்களில் அறிஞன் பசுவை விட்டுவிட்டு கழுதையைக் கறந்து

பாலைக் கிரகிப்பானா?"

என்று கேட்கிறது. இங்கே மேட்டிமையின் குறியீடாகக் காட்டப்படும் பசுவுக்கு எதிராக அடித்தள மக்களின் சார்பில் குட்டி போட்ட பெண் கழுதை காட்டப்படுகிறது. மூதேவியின் வாகனம் கழுதை என்பதே இதற்குக் காரணம் ஆகும்.

மேலும் போரில் தோற்ற பகை அரசனை இழிவுபடுத்த வேண்டி அவனது நாட்டைக் கழுதை ஏர் பூட்டி உழுத இலக்கியச் செய்திகளும்,குற்றம் செய்தவர்களை இழிவுபடுத்தித் தண்டிப்பதற்காக அவர்களைக் கழுதை மீது ஏற்றி ஊர்வலமாக அழைத்து வருவது அன்மைக்காலம் வரை வழக்கமாக இருந்தது என்பதும்,அத்தகைய தண்டனை பெறுபவர்கள் ஊர்ச்சபையின் வாரியப் பெருமக்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்று கூறும் உத்திரமேரூர் கல்வெட்டுச் செய்தியும் இங்கு நினைவுகூரத்தக்கன.

தமிழ் நிகண்டுகள் மூதேவியைக் கேட்டை,கெடலணங்கு,கேடி என அழைப்பதால் துன்பத்துக்கும், துரதிருஷ்டத்திற்கும், சோம்பலுக்கும், தீட்டு, கண்ணேறு ஆகியவற்றுக்கும், அழுக்கிற்கும், அழகின்மைக்கும் குறியீடாக இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கும் இத் தெய்வம் ஒரு காலத்தில் மக்களால் பரவலாக வழிபடப் பெற்றதாகும். பொதுவாக வழிபாட்டுச் சடங்குகளை இருவிதமாகப் பகுக்கின்றனர். மானுடனவியல் அறிஞர்கள் ஒன்று 'வேண்டுதல் வழிபாடு" மற்றொன்று 'விலக்குதல் வழிபாடு". 'மூதேவியே எங்களுக்குத் தீமை, சோம்பல்,வறுமை,நோய் இவைகளை வழங்காதே" என்று வேண்டிக் கொள்வதற்கே இவ்வழிபாட்டு முறை அமைந்ததாகும். மேலும் சிறந்த கடவுளான திருமால் இருக்கையில் மூதேவியே எங்களுக்குத் தீமை, சோம்பல், வறுமை, நோய் இவைகளை வழங்காதே" என்று வேண்டிக் கொள்வதற்கே இவ்வழிபாட்டு முறை அமைந்ததாகும். மேலும் சிறந்த கடவுளான திருமால் இருக்கையில் மூதேவியே வழிபடும் மக்களின் செய்கையைத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் கேலி செய்வதிலிருந்தும்

சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே! (தொண்டரடிப் பொடி திருமாலை - 881) இதனை நாம் அறிந்து கொள்ளலாம். துர்க்கைக்கும், ஜேஷ்டா தேவிக்கும் கி. பி. 773 அளவில் திருப்பரங்குன்றத்தில் நக்கன் கொற்றி என்ற பெண்ணால் தனித் தனிக் கோயில்கள் எடுக்கப்பட்டன என்ற கல்வெட்டுச் செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

கி. பி. 8ம் நூற்றாண்டு வரை (கி. பி. 10,11ஆம் நூற்றாண்டு வரை - புலவர் செ. இராசு) மக்களால் இத்தெய்வம் வழிபடப்பட்டு வந்தது. சிவாலயங்களில் பரிவார தேவதையாக எங்கு அமைக்க வேண்டும். ஊரில் தனியாக மூதேவி கேயில் எங்கு அமைக்க வேண்டும் எனத் தனியாக சிற்ப சாத்திர நூல்கள் விரிவாகக் வறுகின்ற அளவுக்கு இத்தெய்வ வழிபாடு கி. பி. 10,11- ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாடெங்கும் பரவலாக இருந்தது. அதன் பின்னர் இத்தெய்வத்தின் நேரடி வழிபாடு பெருமளவு மறைந்தது. தற்போது ஒரு சில இடங்களில் மூதேவியின் கற்பிக்கப்பட்ட தன்மை தெரியாமல் வழிபடப்படுகிறது. சில இடங்களில் இத்தெய்வம் மூதேவியாக அறியப்படாமல் பல்வேறு உள்ளூர்ப் பெயர்களால் வழிபடப்படுகிறது. இன்னும் சில இடங்களில் இது உருமாற்றம் பெற்று கிராமத்துப்பந்தித் தெய்வப் பரிவாரங்களோடு ஒன்றாக ஆக்கப்பட்டு (ஐயனார் பரிவாரம் போன்றன.) வழிபடப்படுகிறது. இவ்வாறு உருமாற்றம் பெற்ற ஒரு மூதேவி தெய்வம் 'மாகாளி சேஷ்டா தேவி" என்ற பெயரில் தூத்துக்குடி மாவட்டம் முடி வைத்தானேந்தலில் வழிபடப்படுகிறது. எனினும் துரதிஷ்டத்திற்கும்,தீட்டுக்கும். திருஷ்டிக்கும்,சோம்பலுக்கும்,அழகின்மைக்கும் குறியீடாகக் கற்பிக்கப்பட்ட இத் தெய்வத்தின் நேரடியான (எதிர்மறை) வழிபாடு தற்போது சமூக உளவியலில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு விட்டது என்றே கூற வேண்டும்.

தமிழ் நாட்டிலேயே மிகப் பழைய மூதேவி சிற்பமாகக் கருதப்படுவது செங்கற்பட்டு அருகில் உள்ள வல்லம் ஊரில் காணப்படுகிறது. இங்கு கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மகேந்திரவர்ம பல்லவனால் அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலில், இச்சிற்பம் காணப்படுகிறது. அங்கு நடுவில் சிவலிங்கமும் அதன் ஒரு புறம் பிள்ளையாரும் மறுபுறம் மூதேவியுமாக அச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. மூதேவியைப் போலவே விநோதமான உருவமும் கிட்டத்தட்ட ஒத்த தன்மையும் உடைய தெய்வமே 'விக்கினாசுவரன்" என்ற கணபதி ஆகும். மூதேவிக்கும் வட 'விக்கினா பார்சாதா" (VICHNAPARSHADA) என்ற பெயர் உண்டு. மூதேவியின் வழிபாடு, செல்வாக்கிழந்து விட்ட இன்றைய நிலையில் கணபதி வழிபாடு பெருந்தெய்வ நெறிக்குள் (வைதீக நெறி) புகுந்து, மிகுந்த செல்வாக்குடன் திகழ்வதும், மூதேவி - கணபதி ஆகிய தெய்வங்களின் உறவும் தனி ஆய்வுக்குரியன.

வைதீக எழுச்சிக்கு முன் வழிபடப்பட்ட வல வளமைத் தெய்வங்கள், பேரரசுகளின் உருவாக்கத்தின் போது வைதீகம் (அ) சமஸ்கிருத மரபுகளால் அழிக்கப்பட்டன அல்லது தமதாக்கிக் கொள்ளப்பட்டன. இத்தகைய சமஸ்கிருத மயமாதலுக்கு ஆட்படாத தெய்வங்கள் இழிவுடுத்தப்பட்டன. மூதேவியும் இவ்விதமே இழிவு படுத்தப்பட்டிருக்க வேண்டும். இத்தெய்வத்தின் சிலைகளில் முப்புரி நூல் காணப்படாததும், கச்சை இல்லாத திரண்ட மார்பகங்களும் இவள் சமஸ்கிருத மரபை ஏற்காத திராவிடத் தொல்குடிகளின் வளமைத் தெய்வம் என்பதை தெரிவிக்கின்றன. மேலும் இத் தெய்வம் வேதமரபுகளை ஏற்காததால் பௌத்தம் போன்ற அவைதீக மரபுக்குச் சென்றிருக்க வேண்டும். பின்னாளில் அரசுகளின் ஆதரவுடன் வைதீகம் நடத்திய மூர்க்கமான பண்பாட்டுத் தாக்குதலால் அவைதீக மரபுகள் செல்வாக்கிழந்த போது மூதேவி தெய்வமும் இழிவுக்குள்ளாகியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இத் தெய்வம் வைதீக மரபுகளை ஏற்காது என்ற லிங்க புராணச் செய்தி போன்றன இதனை உறுதிப்படுத்துகின்றன.

இன்றைய வாழ்வியலில் கழுதை என்பது வண்ணார் சாதியாரின் தொழிலோடு உறவுடைய உயிரினமாக மட்டுமே கருதப்படுகிறது. மேலும் வண்ணார்கள் தங்கள் தொழிற்கலமான வெள்ளாவி அடுப்புக்கும் பொங்கல் வைக்கும் பழக்கம் உடையவர்கள். பழைய கற்சிலைகளில் மூதேவியின் உருவத்தோடு மாட்டு முகம் கொண்ட ஆண் உருவம் இருப்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இதுவே வண்ணார்கள் வழிபடும் 'மாடனாக" இருக்கலாம். மேலும் முள்ளிக் குளத்தில் வண்ணார் சமூகப் பெண்கள் மத்தியில் 'மாடத்தி" ' நல்ல மாடத்தி" என்ற பெயர்கள் இன்றும் பெரு வழக்கமாக உள்ளன. மேலும் வண்ணார்கள் எ
படும் மாடனை 'வண்ணார மாட
எனப் பரவலாக அழைக்கின்றன
இவ்வாறு வேறு சாதிப்பெயர்க
மாடன் தெய்வத்துக்கு முன்னொட்ட
வருவது தென் தமிழகத்தில் கான
படவில்லை என்பது குறிப்பிடத்தக்க

சமூக மோதல்களில் கொலையுண்ட
களையே மாடன் என வழிபடுகின்றன
என்பது நாட்டார் வழக்காற்றிய
அறிஞர் ஆ. சிவசுப்பிரமணிய
போன்றவர்களின் கருத்து ஆகு
மாடன்வகைத் தெய்வங்களே 31க்கு
மேற்பட்டு உள்ளன. இவற்றைச் சி
பொதுவான காரணங்கள் கொண்
வகைப்படுத்தலாதம்.

'1.சுடலைமாடன் வில்லிசை
கதையில் வருவன.

2.ஊரின் பெயரை வைத்து அழைக்க
படுவன.

3.கொலை,விபத்து போன்
காரணங்களால் சுடலை மாடனா
குறிக்கப்படுவன என்று மூன்
வகையாகப் பேரா. அ. க. பெருமா
இத் தெய்வங்களை வரையறை செய்
முயல்கிறார்.

மேற்குறிப்பிட்ட வகைப்பாட்டுக்குள்
அடங்காத தெய்வமாக வண்ணா
மாடனை இவ்வாய்வு கருதுகிறது
மெலும் வண்ணார்களே ஆ
கடவுளான புலை மாடன் தொடங்
தளவாய் மாடன், சுடலை மாடன்
சப்பாணி மாடன் போன்ற பல மாட
தெய்வங்களை வழிபடுகின் றன
என்பதும் கள ஆய்வில் தெரிய வந்தது
எனவே,மாடன் வகைகளுள்
வண்ணர்கள் வழிபடும் மாட்டுத்தலை
கொண்ட வண்ணார மாடனே
மூதேவியுடன் மாட்டுத் தலையுடன்
காணப்படும் அவள் மகன் மாந்திகன
ாக இருக்கலாம் என இந்த ஆய்வு
கருதுகிறது. மேலும், 'வெள்ளாவிப்
பொங்கல்" பற்றிக் கூறும் வண்ணார்
சமூகத்தவர் ஒருவர்,'வெள்ளாவிப்
பொங்கல் என்பது மாடசாமிக்குத்தான்,
வண்ணார மாடன் என்பதும் அது
தான்" எனக் குறிப்பிடுவது இக்கருது
கோளை உறுதிப்படுத்துகிறது.

மேலும் வன்னிக்கானேந்தல் அருகில் உள்ள வண்ணார்கள் வழிபடும் சுடலை மாடன் கோயில் வளாகத்தில் கழுதை வாகனம் கொண்ட பெண் தெய்வத்தின் சிலை உள்ளது என்றும், எப்போதும் வென்றான் அருகே உள்ள அருகன் குளத்தில் வண்ணார மாடசாமி கோயிலில் விழாக்காலங்களில் கழுதை முகம் கொண்ட பெண் தெய்வம் வழிபடப்படுகிறது என்றும். மேலச்சாத்தான்குளம் அருகில் விஜயரங்கபுரத்தில் அழுக்கு மூட்டை சுமந்தபடி ஒரு வண்ணார மாடத்தியின் உருவம் ஓவியமாக உள்ளது என்றும் தகவலாளிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழில் வண்ணம் என்றால் அழகு என்று பொருள் 'அழுக்கானவற்றை வண்ணமாக்குவது என்ற பொருளில் தான் சலவைத் தொழிலாளருக்கு வண்ணார் என்று பெயர் வந்ததாக" எச். ஏ. ஸ்டுவர்ட் குறிப்பிடுகிறார். புராணக் கதைகளின்படி பிரஜாபதியான தட்சன் சிவனை மதிக்காமல் நடத்திய யாகத்தைத் தடை செய்யும் பொது

www.padippakam.com



பலரைக் கொன்றதால் அந்தப் பாவத் துக்கு கழுவாயாக வீரபத்திரனைச் சிவன் மனிதர்களின் உடைகளைச் சுத்தம் செய்யச் சொன்னார். தமிழ் வண்ணார்களின் பெயர்களில் 'வீர பத்திரன " என்ற பெயர் அதிகமாகக் காணப்படுவதனை இக்கதையுடன் தொடர்புபடுத்திக் காண வேண்டும்.

வண்ணார் சாதி அடித்தளச் சாதி களுள் ஒன்றாகவும்,சேவைச் சாதியாக வும் கற்பிக்கப்ட்டுள்ளது. ஊர்மக்களின் அழுக்கு உடைகளைச் சுத்தம் செய்வ தோடு அல்லாமல் தீட்டுக்குரியனவா கக் கருதப்படும் பூப்பெய்திய பெண் கள், பிள்ளை பெற்ற பெண்கள், இறந்தவர்கள் ஆகியோரின் உடை-களைச் சுத்தம் செய்வது போன்ற இவர்களின் மீதான வைதீக ஒடுக்கு முறை இவர்களைச் சில நிலைகளில் தீட்டுக்குரிய சாதியனராக இழிவுபடுத் துகின்றது. இவர் களில் ஒரு பிரிவினர் 'தீண்டத்தகாத மக்கள்" எனக் கற்பிக் கப்ட்டுள்ள அடித் தள மக்களின் துணி களைச் சுத்தம் செய்பவர்களாக உள்ள னர். இவர்கள் 'புரதவண்ணார்" என அழைக்கப்பட்டு பார்க்கவும், அணுக வும் கூடாதவர் களாகக் கற்பிக்கப்பட்டு வண்ணார்களிலேயே கீழ்சாதியினராக வும் கருதப்பட்டு வந்தனர். சுருக்கமா கச் சொல்லப் போனால்,வருணாச்சிரம சமூக அடுக்கில் இன்னமும் வைதீக மயமாககத, சாதிய மதிப்பைப் பெறாத அடித்தள மக்களின் சாதிகளுள் வண் ணார் சாதியும் ஒன்று.

மழைச் சடங்குகளையும்,குறிப்பாக முள்ளிக்குளம் மழைச் செம்புச் சடங்கையும், பொதுவாக வண்ணார் சாதியையும், குறிப்பாக இம்மழைச் செம்புச் சடங்கில் அவர்களின் பங்கையும் மூதேவி என்கிற வளமைத் தெய்வத்தின் தன்மைகளையும் தொகுத்து ஆராய்கின்றபோது வண் ணார் சாதிக்கும்,மூதேவி எனும் தெய்வத்துக்கும் கற்பிக்கப்பட்ட ஒரு உறவுநிலை இருப்பதாகத் தோன்று கிறது. வேறு சில ஆதாரங்களும் இக் கருத்தை அரண் செய்கின்றன.

அழகின்மையின் குறியீடாகவும், புனி தமற்றதாகவும்,கண்ணேறு கழிப்புக் குரிய உருவமாகவும், சில நிலைகளில் இழவுக்குறிப்பாகவும்,சில இடங்களில் மழை வேண்டிச் செய்யப்படும் சடங்கில் பயன்படுத்துவதுமாகிய கழுதை, மூதேவியின் வாகனம் என்பதும் தொழில் அடிப்படையில் அது வண்ணார் சமூகத்துடன் மட்டுமே பெருமளவு தொடர்புடையது என்பதும் குறிக்கத்தக்கன. இவ்வாய்வாளரின் கள ஆய்வின் போது வண்ணார் சமூகத்தவர் சிலர் கழுதையைப் பற்றிக் குறிப்பிடும் போது, கழுதையை ஒரு வாகனம் என்றனர். மேலும், தேவர் சமூகப் பெரியவர் ஒருவரும், 'கழுதை ஒரு வானம் எனவே அதை அடிக்கக் கூடாது" என்றார். ஆனால் அது எந்தத் தெய்வத்தின் வாகனம் என் பது அவர்களுக்குத் தெரியவில்லை. வாகனம் என்பது பொது நிலையில் ஊர்திகளையும், சமயநிலையில் தெய் வங்கள் ஏறிவரும் ஊர்திகளையும் குறிக்கப்பயன்படும் சொல், என்பது இங்கு கவனிக்கத்தக்கது. மேலும், கள ஆய்வின் போது வண்ணார் சமூகப் பெரியவர் ஒருவர் கழுதையின் அதிர்ஷ்டச் சிற்பபுகளை விவரிக்கும் போது. 'அவ (கழுதை) எதுக்க வந் தாலே சீதேவி தான்" என்றார். துரதிருஷ்டத்துக்கு உரியவளான மூதேவியின் வாகனமான கழுதையை இங்கு பெண்ணாகப் பார்ப்பதும் எதிர்க் கலாச்சார அடிப்படையில் சீதேவி யாகப் பார்ப்பதும் குறிக்கத்தக்கன. குடும்ப நிகழ்வுகளின் போதும், உரையாடலின் போதும் கழுதை கத்தினால் நல்ல சகுனம் என்பதும் எல்லா சாதி மக்களிடமும் காணப்படும் நம்பிக்கையாகும். மேலும் வண்ணார் மாடன் கோயில் குறித்துப் பிறசாதி மக்களிடைய அச்ச உணர்வு நிலவு வதைக் கள ஆய்வில் பார்க்க முடிந் தது. சில இடங்களில் (வண்ணார்) மாடனின் முன்னொட்டாக வரும் 'நல்லமாடன்" என்ற பெயரையும் இங்கு எதிர்க்கலாச்சார அடிப் படையில் பார்க்க இயலும்.

மூதேவியின் கொடியான காக்கை அபிதான சிந்தாமணியாலும், பொது வழக்கிலும் துப்புரவுப் பணியோடு தொடர்புப்படுத்தப்பட்டு 'ஊர்த்தோட்டி" என அழைக்கப்படுகிறது.

மூதேவியின் பல பெயர்களுள் 'ஏக வேணி" என்பதும் ஒன்று. ஏகவேணி என்றால் ஒற்றைச் சடையாள் என்று பொருள். வண்ணார்களுக்கு 'ஏகா லிகள்" என்ற பெயரும் உண்டு. ஒற்றைக்கால் என்பது இதன் பொருள் ஒத்தச்சடை, இரட்டைச்சடை என் பதைப் பொது வழக்காக ஒத்தைக் கால், இரட்டைக்கால் என்று வழங்கு வதை நோக்க வேண்டும்.

வண்ணார்கள் தங்களின் துணிகள் வெள்ளாவியில் எரிந்து போகாமல் இருக்கவும், மழை பெய்து வளம் பெருகவும் வெள்ளாவி அடுப்புக்கு முன் வெள்ளாவிப்பொங்கல் இடும் வழக்கம் கொண்டவர்கள். மூதேவிக்கு 'ஜலமாயா" என்ற பெயர் உண்டு என்பதும்,மூதேவி வாழிடங்களில் ஆடை துவைத்த நீரும் ஒன்று என்பதும் நோக்கத்தக்கது. கள ஆய்வில் வண்ணார் சமூகப் பெரியவர் ஒருவர் 'வெள்ளாவிப் பொங்கல்" என்பது மாடசாமிக்குத்தான். வண் ணாரமாடன் என்பதும் அந்த மாட சாமிதான். என்றது மீளவும் இங்கு நினைக்கத்தக்கது. இதன் தொடர்பில் 'வெள்ளாவிப் பொங்கலும்" தனி ஆய்வுக்குரியது.

மழைச் சடங்குகளில் ஒன்றான கொடும்பாவி கட்டி எரித்தலில்,இதன் தொடர்பில் ஒரு புதிய ஐயம் எழுந்துள்ளது. கொடும்பாவி என்பது யாரைக் குறிக்கின்றது? என்பதே அது.

கொடும்பாவி சாகாளோ
கோடிமழை பெய்யாதோ!
கொடும்பாவி சண்டாளி
ஒரு மழை பெய்யாதோ!

என்று வருகிற கொடும்பாவி எரிப்புப் பாடல்களின் மூலம் கொடும்பாவியைப் பெண்ணாகவே பார்க்கின்றனர் என்பதும்

கொடும்பாவி சாகாளோ
கோடிமழை பெய்யாதோ!
நாசகாரி சாகாளோ
நல்லமழை பெய்யாதோ!
மூதேவி சாகாளோ
முழுவெள்ளம் பாயாதோ!

என்ற மழைச்சடங்குப்பாட்டின் மூலம் இது போன்ற பாடல்களில் பெண் ணாகச் சுட்டப்படுபவள் மூதேவியே என்பதும் தெரியவருகிறது.

கோவில்பட்டி அருகே வானரமுட்டி என்னும் ஊரில் கொடும்பாவியைக் கட்டி விளக்குமாற்றால் அடித்து இழுத்து மயானத்தில் வைத்து எரித்துப்பின்னர்அதோடு தொடர்புடைய சடங்குப் பொருட்கள் மற்றும் துணி முதலியவற்றை வண்ணாருக்குக் கொடுக்கின்றனர் என்பது தகவலா-ளிகள் மூலம் தெரிய வருகிறது.

நெல்லை ராமையன்பட்டி அரு கேயுள்ள சேதுராயன் புதூரில் நடைபெறும் கொடும்பாவி எரிப்பு மழைச்சடங்கில், கொடும்பாவியை எரித்த பின்னர், கழுதையின் காதில் தேங்காய்ச் சிரட்டையைக் கவ்வக் கொடுப்பர். அதனால் அது கத்திக் கொண்டே ஓடும். இவ்வூரில் கணி சமான மக்கள் தலித்துக்கள் இவர்க ளுக்குச் சேவைச் சாதியினராக இருப் பவர்கள் தாழ்த்தப்பட்ட சாதிகளின் வண்ணார்களான 'தீண்டா வண்ணார்" எனப்படும் புரதவண்ணார் ஆவர். கொடும்பாவி எரிப்பு முடிந்ததும் ஊர்மக்கள் பகிர்ந்து கொண்டது போக மீதமுள்ள ஊர்ச் சோற்றை இப்புரத வண்ணார்களே எடுத்துக் கொள்கின் றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோவில்பட்டி அருகே கீழ வைப்பாறு ஊரில் மழைச் சடங்கில் பாடப்படும் பாடல் ஒன்று.

'எங்க காட்டுக்கும் பெய்யும் மழை
எருக்கலங்காட்டுக்கும் பெய்யும் மழை
வண்ணாத்தி வாசலிலே
வந்து வளத்தோடு பெய்யும் மழை!"

என்கிறது.

எருக்கு (அ) கள்ளி என்பது ஒரு நிலையில் வறட்சியோடும், பஞ்சத் தோடும், வெறுமையோடும் தொடர் புடையது. முள்ளிக்குளம் மழைச் செம்புச் சடங்கிலும்,கீழ வைப்பாறு மழைச் சடங்குப் பாட்டிலும் எருக்குக் காணப்படுவதோடு, அது வண்ணார் சமூகப் பெண்ணோடும் தொடர்புபடுத் தப்படுவது குறிக்கத்தக்கது. குமரி மாவட்டம் குளச்சல் கடற்கரையில் உள்ள மீனவர் பகுதிகளில், தோசம் பிடித்த (மீன்) வலையைக் கடற்கரையில் வைத்து நடு இரவில் எருக்கம் இலையை எடுத்து வயது வந்த ஆண்கள் நிர்வாணமாக நின்று கெட்ட வார்த்தைகள் ஏசி வலையை சுற்றி சுற்றி அடிப்பார்கள். இதனால் வலையைப் பிடித்த தோசம் நீங்கிவிடுவதாக நம்புகின்றாரக்ள என்ற செய்தியும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

முள்ளிக்குளம் மழைச் செம்புச் சடங்கில் பெண்கள் மட்டுமே பங்கு பெறுவதும்,அதில் பங்கெடுக்கும் வண் ணார் சமூகத்தைச் சேர்ந்தவரும் பெண் ணாகவே இருப்பதும் குறிப்பிடத்தக் கது. மேலும்,அச்சடங்கின் ஒரு பகுதி யாக அப்பெண் எருக்கலங்குச்சியால் அடித்து விரட்டப்படுவது போன்ற பாவனைக்கு உள்ளாகி வடதிசை நோக்கி போய்விடுவார் என்பதை முன்பே கண்டோம். மூதேவிக்கு உரிய திசை வடமேற்கு திசையாகும். சிவன் கோயில் பிரகாரங்கள் சிலவற்றில் அவளுக்கு வடமேற்கு மூலையில் தான் சன்னதி அமைந்திருக்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. மேலும், வடமேற்கு திசைக்கு உரியவள் என்று பொருள்படும் 'நிருதி" என்ற பெயரும் மூதேவிக்கு உண்டு என்று புராணச் செய்தியையும் மழைச் செம்புச் சடங்கில் நிகழ்த்தப்படும் பாவனையை யும் ஒப்பு நோக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தின் சில பகுதி களில் அளவுக்கு அதிகமான மழை பெய்தால்,மழையை நிறுத்த வேண்டி யும் சில சடங்குகள் செய்யப்படுகின் றன. அப்போது பெண்கள் விளக்குமா றுகளை வானத்தை நோக்கிக் காட் டுகின்றனர். விளக்குமாறு மூதேவியின் வெயிலுடனும், சீதேவியை மழையுட னும் தொடர்புபடுத்தி பல நாள் மூதேவியைத்தாங்கலாம். ஒரு நாள் சீதேவியைத் தாங்க முடியாது என வழங்கும் நாட்டார் நம்பிக்கையும் இங்கு கருதத்தக்கது.

முள்ளிக்குளம் மழைச் செம்புச் சடங்கில் எருக்கலங்குச்சியால் அடித்து விரட்டப்படுவது போன்ற பாவனைக்கு உள்ளாகின்ற வண்ணார் சமூகப் பெண். மூதேவியின் கற்பிக் கப்ட்ட பதிலியே என இவ்வாய்வு கருதுகிறது. இதன் மூலம் சமூகப் புறக்கணிப்பு செய்யப்பட்ட அவைதீகப் பெண் தெய்வமான மூதேவி சமூக இழிவுக்குள்ளான,இன்னமும் முழுமையாக வைதீகமயமாகாத அடித்தளச் சாதிகளுள் ஒன்றான வண்ணார் சாதியோடு தொடர்புடைய தாகக் கற்பிக்கப்பட்டுள்ளது என்ற புதிய கருத்தை உறுதிப்படுத்துகிறது.

கற்பிக்கப்பட்ட மூதேவி - வண்ணார் சமூகத் தொடர்பு என்பது நேரடியாக அல்லாமல் குறியீட்டு அளவிலும், சடங்கு வடிவத்திலும் காணப்படுகிறது.

மழைச் செம்புச் சடங்கும், அதில்வண் ணார் சமூகப் பெண் பெறும் இடமும், அவைதீக தெய்வமான மூதேவியின் தன்மையும்,அவைதீக சாதியான வண்ணார் பற்றிய செய்திகளும் அம் மூன்றுக்கும் உள்ள சடங்கு மற்றும் குறியீட்டு அடிப்படையிலான கற்பிக்கப் பட்ட உறவை வெளிப்படுத்துகின்றன.

மூதேவியின் வாகனமும்,வண்ணார்கள் தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்தவது மாகயி கழுதை அவைதீக தெய் வத்தின் வாகனம் என்பதால் வைதீக மரபால் இழிவுபடுத்தப்பட்டிருப்பது தெரிகிறது. மழைச் சடங்கில் இழிவு படுத்தப்பட்டு எரிக்கப்படும் 'கொடும் பாவி" என்பது மூதேவியே என்று சில புதிய கருத்துக்களையும் இவ்வாய்வு நிறுவுகின்றது. இப்புதிய செய்திக ளுடன் தமிழ்நாட்டில் சில இடங்களில் மூதேவி தெய்வமானது உருமாற்றத்துக் குள்ளாகி காளி போன்ற நாட்டார் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டு இன்றும் வழிபாட்டில் உள்ளது. என்ற செய்தியையும் இங்கு இணைத்துப் பார்ப்பது என்பது. 'தமிழ் நிலப் பகுதிகளில் நாட்டார் பண்பாட்டில் ஜேஷ்டா தேவியின் தோற்றம் குறித்து ஏதுமில்லை. எனவே நாட்டார் தெய் வங்களுக்கிடையே அவள் உருவமும் காணப்படவில்லை." என்கிற பேரா. ஆர். வெங்கட்ராமனின் கருத்து தவறானது என்ற முடிவுக்கே நம்மை இட்டுச் செல்கின்றன. கள ஆய்வுக ளும் திரட்டப்பட்ட தகவல்களும்

படிப்பகம்

இதனையே உறுதி செய்கின்றன.

இனக்குழுக் கால வளமைத் தெய்வங்களில் பல பின்னர் தோன்றிய நிலவுடைமைச் சமூகத்தில் தேவையற்றதாக உணரப்பட்டன. எனவே அவை புறந்தள்ளப்பட்டு, இழிவுக்குள்ளாக்கப்பட்டன. இந்தியச் சூழலில் நிலவுடைமையின் தோற்றத்தோடு பிறந்ததும்,அதனை நியாயப்படுத்தும் தத்துவ அரணாக விளங்குவதும் வருணாசிரம மரபே ஆகும். இம்மரபே இங்கு நிலவிய இனக்குழு, வளமைத் தெய்வங்களைத் தன் காலடியின் கீழ் கொண்டு வந்தது. மேலும் வருணாசிரம மயமாதலுக்கு உள்ளாகாத தெய்வங்களை இழிவுபடுத்தியது என்பன போன்ற வரலாற்றுச் செய்திகள் இங்கு உறுதிபடுத்தப் பட்டுள்ளன. அதே வேளையில் அடித்தள வெகு மக்கள் மரபை ஒரு ஆதிக்க மரபு ஒடுக்கும் போது ஒடுக்கப்படுகின்ற மரபானது அதன் அடையாளங்களை முற்றிலும் இழந்து விடுவதில்லை. அதன் எச்சங்கள் சில ஆங்காங்கே வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். இங்கே வருணாசிரம ஆதிக்க மரபின் ஒடுக்கு முறைகள் உள்ளான,அவைதீக மரபான மூதேவி வழிபாடு,முற்றிலும் தன் அடையாளங்களை இழந்து விடவில்லை. மாறாக மழைச் செம்புச் சடங்கு, கொடும்பாவி எரிப்பு என்பன போன்ற நாட்டார் சடங்குகளிலும், குறியீடுகளிலும் இன்னமும் வாழ்ந்து கொண்டுள்ளது என்பதும் இவ்வாய்வின் மூலம் நிறுவப்பட்டுள்ளது.

வைதீக மரபு,சமூக மனிதனைத் தனிமனிதனாக மாற்றுவதன் மூலம் அவனை வைதீக மயப்படுத்துகிறது. அவைதீக மரபு இனக் குழு மரபின் தொடர்ச்சியான கூட்டு வழிபாட்டைப் பேணுவதன் மூலம் சமூக உணர்வைத் தனி மனிதர்களிடம் ஏற்படுத்துகிறது என்கிற வரலாற்று உண்மைக்கும் இம்மழைச் செம்பு சடங்கு - மூதேவி வழிபாடு சான்றாக இருக்கிறது.

வருணாசிரமம் அழுக்கின் பிரதிநிதியாக மூதேவியையும்,தூய்மை (அ) செழிப்பின் (சுத்தம்,விருத்தி) பிரதிநிதியாக லட்சுமியையும் இன்று எதிரெதிராக நிறுத்தியுள்ளது. ஆனால் ஒரு காலத்தில்,அழுக்கின் தெய்வமாக இப்போது கருதப்படும் மூதேவியே வளமையின் மூலத் தெய்வமாகவும் இருந்துள்ளது. மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் கழிவுகளே அழுக்கு என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. 'அழுக்கு" என்ற சொல் அழுகச் செய்யப்படுவது என்ற பொருளையே உணர்த்துவதாகும். இந்த 'அழுகல்" என்ற நிகழ்வு மண்ணும் மற்ற இயக்கச் சக்திகளும், காலம் என்கிற பரிமாணத்தோடு கூடி அழுக்குகளின் மீது நிகழ்த்தும் வேதியியல் வினையாகும். இந்த வேதியியல் வினையின் விளைவாக மண்ணின் மூலவளம் (சாரம்) தன்னைக் காத்துக் கொள்கிறது. பெருக்கிக் கொள்கிறது. மண்ணின் மூல வளமாகிய உரச்சாரமே பயிர்களின் பெருக்கத்திற்கும் பிற அசை உயிர்களின் பெருக்கத்திற்கும் காரணமாக அமைகின்றது. வேறு வகையில் சொல்வதானால் பயிர்களும், உயிர்களுமாகிய செல்வங்களின் (WEALTH) மூலவடிவம் உரமாகும். உரத்தின் மூல வடிவம் அழுக்காகும். பழஞ்சமூகம் வேளாண் உற்பத்தியை மையமிட்ட நிலமானிய மதிப்பீடுகளைக் கொண்டதாகும். பழைய தெய்வங்களும் நிலமானிய உற்பத்தி முறைகளின் வெளிப்பாடுகளாகத் தான் அமைகின்றன. எனவே உயிர் வளர்ச்சியினையும்,பயிர் வளர்ச்சியினையும் உருவாக்கும் - அடையாளப்படுத்தும் திரு (அ) லட்சுமியினைத் தங்கையாக்கி அதற்குரிய மூல வளம் சேர்க்கும் உரத்தின் தெய்வத்தை தமக்கையாக (மூத்த தேவி) மூதேவி என்று அடையாளப்படுத்தினர். இது 'காலம்" என்ற உறுதிப் பொருளினை (பிரமாணத்தை) அடிப்படையாகக் கொண்டதாகும். உரம் பயிராகும் கால இடைவெளியே தமக்கைக்கும், தங்கைக்கும் - மூத்த தேவிக்கும்,. இளையதேவிக்கும் - அலெட்சுமிக்கும் லெட்சுமிக்கும் இடையிலுள்ள வேறுபாடாகும். எனவே இந்த ஆராய்ச்சி முடிவின் படி மூதேவியை அழுக்கின் தெய்வம் என்றதை எழுத்து மரபு சார்ந்த பார்ப்பனிய ஒடுக்கு முறைக் கருத்தியலாகவே பார்க்க முடிகின்றது. எனவேதான் பல்லவ அரசின் தொடக்கக் காலத்தில் மூதேவி பெருந் தெய்வக் கோயில்களில் பரிவாரத் தேவையாக இருந்த போதிலும் பின்னர். சோழர்களின் பேரரசு தோன்றிய போது வைதீக நெறியாளர்களால் கோவிலுக்கு புறமாகத் தள்ளப்பட்டது என்பதே வரலாற்று உண்மை.

இதனை உறுதி செய்யும் சில சான்றுகளையும் கள ஆய்வில் காண முடிகின்றது. கார்த்திகைத் திரு விழாவின் போது பாண்டிச்சேரி - தென்னார்காடு பகுதிகளில் சில இடங்களில் 'உரக்குழி" எனப்படும் குப்பைக் கிடங்குகளில் அகல்விளக்குகளை ஏற்றி அதனைக் குப்பை நாச்சியார் என்ற பெயரில் வழிபடுகின்றனர். நாச்சியர் என்ற பெயர் உயர்குடிப் பெண்களையும் திருமகளின் குறியீடான திருவிளக்கையும் குறிக்க வழங்கப்படுவது கவனிக்கத்தக்கது. மேலும், செயங்கொண்டம் அருகில் உள்ள உதயநத்தம் என்ற ஊரில் 'குப்பைக் குழியில்" விளக்கு வைத்து வழிபடுவதுடன் பெண் பார்க்கவரும் மாப்பிள்ளை வீட்டார் பெண் விட்டின் குப்பை குழியைப் பார்த்து அவர்களின் செல்வ மதிப்பை அளவிடும் வழக்கமும் உள்ளது. மேலும் முள்ளிகுளத்தில் நடைபெறும் மழைச்செம்புச் சடங்கில் எருத்துண்டு (வறட்டி) இடம் பெறுவதும் அவ்வூரில் 'குப்பைமுத்து 'குப்பை" என்ற பெயர்கள் பெண்ணுக்கு வழங்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது. மேலும் 'குப்பம்மாள்" 'குப்பச்சி" என்ற பெயர்கள் நெல்லை மாவட்டத்தில் வழக்கில் உள்ளவை ஆகும்.

இயற்கையின் இயங்கியல் போக்கில் ஏற்படுகின்ற இத்தகைய சிதைவு மற்றும் வளர்ச்சிப் போக்கினை வருணாசிரமம் உள்வாங்கிக் கொண்டது. அதனை அழுக்கு X தூய்மை என்கிற எதிர்வாக கற்பித்தது ஒன்றுக்கொன்று தொடர்ச்சியான - இசைவான இடப் போக்கினை தன் ஆதிக்கத்தினை நிலைநாட்டும் பொருட்டே ஒன்றுக் கொன்று எதிர்வானதாகக் கற்பித்தது.

அழுக்கு X தூய்மை என்ற இந்த எதிர்வினை, காலநியமம், தேச (இட) நியமம், அதிகாரி (பிறப்புவழி மேன்மை) நியமம், பல (வலிமை) நியமம் ஆகியவற்றைக் கொண்டு உடலுழைப்பை இழிவானதாகக் கருதும் சமூக உளவியலை உருவாக்கப் பயன்படுத்தியது. மூதேவி வழிபாட்டின் மறைவு அதனைத் தெளிவாக உணர்த்துகின்றது.

நாட்டார் தெய்வங்களை சமஸ்கிருத மயமாக்கும் பண்பாட்டு வன்முறைகள் ஆதிக்க சக்திகளால் முனைப்புடன் நடத்தப்பட்டு வரும் இந்நாளில் அவைதீகத் தெய்வங்கள் மற்றும் அடித்தள - அவைதீகச் சாதிகளின் உறவும், தொடர்பும் விரிந்த ஆய்வுக் குரியன.

ஒரு பரந்துபட்ட களத்தின் அடிப் படையிலேயே இக்கட்டுரை உருவாக் கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வட்டாரம் அல்லது ஒரு குறிப்பிட்ட சாதியை வரையறுத்துக் கொண்டு இந்த ஆய்வு தொடரப்படுமானால் பல புதிய உண்மைகள் வெளிவரக்கூடும்.

---

# J.M.கோயற்சி

இந்த ஆண்டுக்கான நோபல்பரிசு இலக்கி யத்துக்கு ஒரு உரிய எழுத்தாளருக்கு தரப்பட்டிருக்கிறது. J.M.Coetzee என்ற இவர் தென் ஆப்பிரிக்காவில் பிறந்து அவஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்.

இவருடைய 'Disgrace' நாவல் வாசிப்புக்கும் அது தரும் அனுபவத்திற்கும் பல பரிமாணங் களைத் திறந்துவிட வல்லது. கா∴ப்காவை வாசிக்கும் உணர்வு கிடைக்கும் எழுத்துக்கள் இவருடையவை. இதுவரை இரு தடவை புக்கர்பரிசு வென்றவர். தன்னுடைய "The Life and Times of Michael K" *(1983)*இ "Disgrace"*(1999)*. புக்கர் இருதடவைகள் வழங்கப்பட்டது இவர் ஒருவருக்குத்தான். நாடின் கோடிமருக்குப் பின்னனர் *(1991)* இப்போதுதான் ஒரு தென் ஆப்பிரிக்கருக்கு நோபல் பரிசு வழங்கப் படுகின்றது.

Disgrace இல் இவர் தொடும் கரு, அந்த வகையில் முதலில் எனலாம். நிறவெறி ஒடுக்குமுறை சட்ட வகையிலேனும் முடிவு பெற்றபின்னர் அநதக் காலகட்டத்தைப் பற்றி எழுந்த முதல் நாவல். எடுத்தால் வைக்க முடியாதபடிக்கு வாசிப்போரை இழுத்துச்செல்லக்கூடியது. இனம் மொழி நிறம் வேறுபாடற்று ஒருவரை ஒரவர் தெற்ற முடியாச் சூழ்நிலையை மனித உறவுகளின் முரண்களை அது சொல்கிறது.



டேவிட் லேரி என்கிற அந்தக் கதாபாத்திரம் ஒரு பேராசிரியர். வயதானவர். ஆனாலும் அவருக்கு ஒரு மாணவியின் மூலமாக விளையும் நெருக்கடி அதிக முரண்பாடுடைய வாழ்க்கைநிலைக்கு அவரைத் தள்ள, அவர் வாழ்க்கையின் பல முகங்களைக் காண்கிறார். இது அவருடைய பிற இரு நாவல்களிலும் வரும் அடியோட்டம்.

ஒரு வெள்ளைத் தோட்டக்காரன் போலப் பல நேரங்களில், விலங்குகளின் வைத்தியர் ஒருவருடன் ஏற்படும் நட்பு, இவ்வாறு கதைபோகிறது. கதையில் இல்லை அதன் சுவை. விலங்குகளுக்கு மனிதர் ஏற்படுத்தும் கொடுமை, அதே போல் மேற்குலகம் காட்டும் கொடுமை, கறுப்பு இனத்தவருடனான வெள்ளையரின் புதிய காலத்து உறவு முரண்கள், வந்துபோகும் ஊடாட்டம், மனித உறவுகளுக்கிடையே எழும் வகை வகையான முரண்கள் எனக் கதை நகரும்.

ஆசிரியராயிருந்து எழுத்தாளரான இவரது எழுத்திற்கான இந்தப் பரிசு மிகச் சரியானது என்றே அவரை வாசிப்பவர்கள் சொல்வார்கள். 'எலிஸபெத் காஸ்ரெல்லோ' என்ற ஒரு நாவல் இந்த ஆண்டு வந்துள்ளது.

ஜெர்மனிய மூலத்தையுடைய இவருடைய நாவல்கள் ஜெர்மன் மொழியிலும் உடனுக்குடன் மொழி பெயர்க்கப்பட்டுவிடும். இவருடைய மொழிநடை தற்கால ஆங்கில மொழிநடைகளில் உயர்வகை யானது என்பர்.

www.padippakam.com



# உரை மொழிவு

## Urai Mozhivu

தொகுதி: 1 எண்: 1 | ஒக்ரோபர் - நவம்பர் 2003 | விலை: 2 கனடிய டொலர்

ஒரு புதிய வேகம்கொண்ட பார்வையுடையோர்களின் தொகுப்புப் பணியின் விளைவு இந்த 'உரைமொழிவு' இதழ். ஒரு கருத்துநிலை குறிப்பாக, நிச்சயமாக இருக்கின்றது. ஆனால் இதைப் பறைசாற்றிக்கொள்ள எந்தத் தேவையுமில்லை. இதழின் தொடர்ந்த செயற்பாட்டின் விளைவு அதுவாக இருக்கும். இந்த இதழின் பாடங்களும் அதைச் சொல்லக்கூடும். பொதுவான சமூக அக்கறையுடையவர்களிடம் தவிர்க்கமுடியாதபடி இருப்பது இடதுசாரித்தன்மை. இதற்கு எல்லைகள், நீட்சிகள் உண்டு. அது இந்தக் குழுவினருக்கும் உண்டு.

புதிய, வேறுபட்ட, இணைச் சிந்தனைகளைக் சேர்த்துக் கொண்டு வருவதே உரைமொழிவின் நோக்கம். ஆதலால் நாங்கள் சமூகத்தைப் புரட்டிப்போட வருகிறோம் என்பது பொருளல்ல. இது சமூக அறிவியலிற்குள்ளால் உடனடியாக நடைமுறைக்கு வருவதுமல்ல. பல சிந்தனை மையங்களைக் கொண்டு ஒரு புள்ளியில் உரையாட வைப்பதுதான் அடிப்படை. ஆனால் கொஞ்சம் தெளிவான, பலவற்றையும் பகுத்துப்பார்த்துப் பேசும் சொல்லாடல்களிற்கு முதன்மை.

இந்த இதழ் எண்ணியவை அனைத்தையும் கொண்டுவருவதல்ல. ஒரேயொரு இதழ் அதனைச் செய்ய முடியாததென்பதும் தெளிவு. சில பக்கக் கட்டுப்பாடுகளும் பணக் கட்டுப்பாடுகளும் வகுக்கும் எல்லைகளும் உலகமுழுதும் விரிந்து வாழும் தமிழை ஒருங்கிணைப்பதில் உண்டாகும் நேரச் செலவும் தொடரும் இதழ்களில் மெதுவாகக் கோர்க்க முடியும் என்ற உறுதிப்பாட்டை அளிக்கிறது.

பல்வேறு வகைக் கருத்துகள், உரையாடல்கள், தரவுகள் வைக்கப்படும். அவைகள் அவரவர் பார்வை. அது குறித்து எங்களுக்கான, 'உரை மொழி'வுக்கான மாற்றுக் கருத்துக்கள் இருப்பினும் அவற்றை வெளியிடுவதில் தடையில்லை. நேரடியான கட்சி அரசியல்தவிர, அது எக்காலத்திலும் "Pandora's box" ஆக இருக்கிறபடியால், பிற வகையான சமூகம் குறித்த உரையாடல் அனைத்துக்கும் உரையாடிச் செல்ல இடமுண்டு.

புலப்பெயர்வின் விளைவுகள் இன்னும் முறையாக வெளிவராத நிலை. அவை குறித்த முன்னோக்குகளுடன் இன்னும் சமூக அறிவியற் துறையில் படிப்புக்கள் நம்மவர்களால் தொடங்கப்படாத நிலை. ஒவ்வொருவரும் அவரவர் கல்லை எடுத்துப் போடவேண்டிய நேரம் எப்போதோ தொடங்கிவிட்டது. உள்ளிருந்து வெளியே, வெளியிருந்து உள்ளேயென மொழிபெயர்ப்புகளும் பரிமாற்றங்களும் தேவை.

மறைந்துகொண்டும் அழிந்துகொண்டும் இருக்கும் வரலாற்று மெய்மைகளையும், கண்முன்னால் இருந்து கொண்டிருக்கும் பண்பாட்டுக் கூறுகளின் மாற்றங்களையும், பதிவாகவோ ஆய்வாகவோ கொண்டுவரும் பல முன்னெடுப்புக்களில் ஒன்று.

புத்தாக்கத்துக்கும் பழமைக்கும் இடையே, எம்நாட்டுக்கும் வெளி நாட்டிற்குமிடையே, தமிழுக்கும் பிற மொழிகளுக்குமிடையே, பண்பாடுகளுக்குமிடையே பாலங்கட்ட முயற்சிக்கின்றோம். தொடர்ந்த செயல்பாடும் ஒருங்கிணைப்புமே நோக்கம். ஒதுங்குவதும் ஒதுக்குவதும் ஒருவகைப் பாசிசத்தின் வடிவம் என்பது மிக நன்றாகத் தெரிந்து ஓர்மம் இருக்கும் வரை அதை மூளையில் வைத்திருக்கும் உறுதியுடன் !

இவற்றிற்கான முயற்சியில் பலருடைய நட்புதவியுடனும் வெளிவருகின்றது.

கேட்டவுடன் தங்கள் இனிய நல் உள்ளத்தையும் கருத்துக்களையும் வழங்கிய எனது மதிப்பிற்குரிய ஆசிரியர்களிலிருந்து நண்பர்கள், மாணவர் வரை அனைவருக்கும் நன்றி.

**கட்டுரைகளும் கண்ணோட்டங்களும் கருத்துரைகளும் செய்தி ஆய்வுகள், நூல் திறனாய்வுகளும் வரவேற்கப்படுகின்றன.**

கட்டுரைகளுக்கு குறிப்புக்களும் சான்றுகளும் தருதல் வரவேற்கப்படும். 2500 சொற்கள் வரை இருக்கலாம். e.mail இற்கு அல்லது தபாலில் அனுப்பலாம். கணனியில் தட்டச்சுச் செய்யப்பட்டு அதன் மென்பிரதி அனுப்பி வைக்கப்படல் வேண்டும். "பாமினி" எழுத்தைச் சார்ந்த எழுத்துக்களில் எழுதவும். பெயர் குறிப்பிடாத பாடங்களுக்கு இதழே பொறுப்பு.

P.O.Box # 63617
1571 Sandhurst Circle., Scarborough, Ontario, Canada, M1V 1V0
Tel: 416-703-5620 E-Mail: uraimozhvu@santhi.net

உரை மொழிவு

Urai Mozhivu

**பதிப்பாளர்:**

உரை மொழிவு பதிப்பகம்
'Urai Mozhivu' Publications

**மதிப்பிற்குரிய மதியுரையாளர்:**

முனைவர் அம்மன்கிளி முருகதாஸ்
Dr. AMMANKILI MURUGADAS
திரு. சண்முகம் குகதாசன்
Mr. Shanmugam Kugathasan
முனைவர் ஆ.செல்லப்பெருமாள்
Dr.A.Chellaperumal
முனைவர் சேரன் உருத்திரமூர்த்தி
Dr.Cheran Uruthiramurthy
முனைவர் தொ. பரமசிவன்
Dr.Tho.Paramasivan
முனைவர் தே. லூர்து
Dr.Lourdu
முனைவர் வீ. அரசு
Dr.V.Arasu

**ஆசிரியர்**

சந்தியாப்பிள்ளை R.A.V
Chantiapillai R.A.V

**ஆசிரிய உதவியாளர்:**

சித்திரா மணிவண்ணன்
Chithra Manivannan
சிவா . ச
Siva . S
தேன்மொழியாள் கங்காதரன்
Thenmoliyal Kangatharan
பேரி . விஜயநாதன்
Peri . Wijayanathan

**ஒருங்கிணைப்பாளர்:**

இலங்கை / Sri Lanka

தயாளினி உதயராஜ் B.A.(Hon)
Thayalini uthayaraj B.A (Hon)

தமிழ்நாடு / Tamilnadu

பே. சாந்தி M.A(Folklore), M.A(Communication), B.Ed.
P. Shanthi

**மொழிபெயர்ப்பு , தட்டச்சு, மெய்ப்பு:**

கௌசலா - Kavusala
ரொனிற்றா அகஸ்ரின் - Tonita Augustine

**விளம்பரம் வணிகத்தொடர்பு:**

இராசையா மகிந்தன்
Rasaiya Mahindan

**வடிவமைப்பு:**


த.சுகந்தன்
T. Suganthan

www.padippakam.com

**COMMENTRY**
**கருத்துரை**

# புலம்பெயர் மண்ணிலும் நிலம்பெயரா நாட்டுக்கூத்துக்கள்

எந்த ஒரு தகவலுக்கும் ஒரு வரலாற்றுப் போக்கு இருப்பது போல, ஈழத்துக் கூத்துக் கலைக்கும் பாரம்பரிய வரலாறுண்டு. கூத்தின் விளைநிலம் பற்றி அறுதியான தரவுகள் யாரும் நிறுவாவிடினும், கிடைத்த நாட்டார் வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு அவற்றின் தொன்மையை உணரலாம். நவீன நாகரிக அழுத்தத்தினால், கிராம வாழ்வின் உயிர்நாடியாம் நாட்டுக்கூத்து நலிவுற்ற போதிலும் அழிந்து போய்விடவில்லை.



**சித்திரா மணிவண்ணன்**

கூத்து வடநாட்டிலிருந்தோ, தமிழகத்திலிருந்தோ ஈழத்திற்கு வந்து சேர்ந்திருந்தாலும், ஈழத்துக் கூத்துகள் தனிப் பண்புகளைக் கொண்டு வளர்ச்சியுற்றன. இவ்வாறு ஈழத்தில் வளர்ச்சியுற்றிருந்த நாட்டுக்கூத்து, காலங்காலமாக கூத்துக் கலைஞர்களால் பேணப்பட்டு வந்துள்ளன. போர் அரக்கனின் பிடிக்குள் ஈழம் சிக்கித் தவித்த காலத்தில் கூட கலைகள் மூர்ச்சையுற்றுப் போகவில்லை. கலைகள் கூட ஈழ மண்ணின் ஆயுதங்களாகப் பயன்பட்டன. போரும் பொருளாதாரத் தேவையும் ஈழத்தவரை உலகெங்கும் சிதற வைத்தாலும், அவர்கள் தம் கலைச் சொத்தை தாயகத்திலேயே கழற்றி விடவில்லை. புலம்பெயர் மண்ணிலும் வெளிப்படுத்துவதில் தயக்கமடையவில்லை. ஈழத்தவரின் காற்பதிப்போடு கலைகளும் அந்தந்த நாடுகளில் வேரூன்றப்பட்டன.

கனடிய மண்ணில் 90களின் பின் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துகள் பற்றிய தரவுகளைத் தருகிறேன்.

*2003*
காத்தவராயன்
சிந்து நடைக்கூத்து
கனடா கந்தசுவாமி கோயில்
வில்லிசை கலைமாமணி சின்னமணி

*2002*
வேங்கை நாட்டு வேந்தன்
தென்மோடிக்கூத்து
தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி பத்தாவது ஆண்டுவிழா
கதை, நெறியாள்கை:
அண்ணாவியார் எஸ். அந்தோனிப்பிள்ளை

*1999*
கண்ணகி
தென்மோடிக்கூத்து
ஆறாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு
(1994 நூல் வெளியீட்டு விழா)
கதை, றெியாள்கை: அண்ணாவியார் மிக்கேல்தாஸ்

*1999*
காத்தவராயன்
சிந்துநடைக் கூத்து
பூங்காவனம்
வன்னிமரபுக் கலைஞர் திரு. யோகர்

*1998*
சிங்கராஜா தர்பார்
தென்மோடிக்கூத்து
மாவீரர் தின நிகழ்வு
கதை, நெறியாள்கை:
அண்ணாவியார் எஸ் அந்தோனிப்பிள்ளை

*1997*
கனடா வந்த கண்ணம்மை
வடமோடிக்கூத்து
கலைபண்பாட்டுக் கழக நிளழ்வு
கதை, நெறியாள்கை:
அண்ணாவியார் வேள் கணபதிப்பிள்ளை

*1997*
குன்றில் எழுந்த குரல்
தென்மோடிக்கூத்து
யேசுராகம் கலைநிகழ்ச்சி
கதை: அண்ணாவியார் யேசுதாசன்
நெறியாள்கை: அண்ணாவியார் எஸ். அந்தோனிப்பிள்ளை

*1995*
ஒடுக்கப்பட்ட ஒதியமலை
வடமோடிக்கூத்து
வன்னிவிழா
கதை: திரு. பாலா
நெறியாள்கை: அண்ணாவியார் வேள் கணபதிப்பிள்ளை

*1994*
சிறுமை
தென்மோடிக்கூத்து (சமூக நாடகம் தழுவியது)
அன்னை பூபதி நினைவு விழா
கதை, நெறியாள்கை: அண்ணாவியார் மிக்கேல்தாஸ்

*1994*
வில் விஜயன்
வடமோடிக்கூத்து
மொன்றியலிலும், ஒட்டாவா பல்கலைக் கழகத்திலும் மேடையேறியது.
கதை, நெறியாள்கை: திரு. கனகசபாபதி (கல்கிதாசன்)

*1994*
கண்ணகி
தென்மோடிக்கூத்து
நூல் வெளியீட்டு விழா
கதை, றெியாள்கை: அண்ணாவியார் மிக்கேல்தாஸ்

இந்தத்தரவுகளின் அடிப்படையில் இந்தக் கூத்துக்கள் பற்றிய ஆய்வு நோக்கிலான கட்டுரை அடுத்த இதழில் வெளியாகும். தரவுகள் திரட்டப் படுகின்றன.
இக்கூத்துக்கள் பற்றியோ அல்லது வேறு கூத்துக்கள் பற்றியோ மேலும் தகவல் திரட்டப் படுகிறது.


Canadian Scholarship Trust Plan (Since 1960)
Exclusively Distributed by the CST Consultants Inc.
FIRST & LARGEST RESP (OVER $1.5 Billion in Deposit) 416.540.6599

- இலாபநோக்கற்ற நிறுவனம் (Non-Profit Organization. No Share holders)
- கனடா அரசு வழங்கும் உயர்கல்விக்கான உதவிப்பணம் (CESG) வருடா வருடம் $400 மொத்தம் $7,200 வரை*
- உங்கள் முதலீடு முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்டு அல்லது அரசு உத்தரவாதம் செய்யப்பட்டு உள்ளது.




தியோ அன்ரனி
Branch Manager /ED

# காந்தியின் தென்னாபிரிக்கா பயணமும் தலித்துகளின் உள்ளூர் பயணமும்

**கோ. ரகுபதி**

வரலாறு கட்டமைப்பதில் முக்கியமான தலைவர்களின் வாழ்க்கை வரலாறு புனிதமானதாக எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு எழுதப்பட்டுள்ள தலைவர்களின் வரலாற்றில், தங்கள் வாழ்க்கையில் அவர்கள் செய்த சாதனைகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. அதேபோல் அவர்கள் சந்தித்த இடர்ப்பாடு, இழிவு, கீழ்மைப்படுத்தல் போன்ற வரலாறும் விரிவாகவே எழுதப்பட்டுள்ளன.

அவ்வாறு வாழ்க்கை வரலாறு எழுதப்பட்ட தலைவர்களில் மகாத்மா காந்தி குறிப்பிடத்தக்கவர். இந்தியாவிலிருந்து வெள்ளையர்களை வெளியேற்ற நடந்த போராட்ட வரலாற்றில் மகாத்மா காந்தி இந்திய மக்களின் தலைவராக எழுதப்பட்டார். அதே போல் அவர் தென்னாப்பிரிக்காவில் வெள்ளைக்காரர்களால் ஒடுக்குமுறைக்கு உள்ளான வரலாறு விரிவாக எழுதப்பட்டுள்ளது. அவர் வாழ்க்கை வரலாற்றினை எழுதிய வின்செனட் ஷீன் காந்தி தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டதை கீழ்க் கண்டவாறு எழுதியுள்ளார்.

"நேட்டாலை விட டிரான்ஸ்வாலில் இந்தியர் நிலைமை மோசமாக இருந்தது, பயணம் நெடியது, பிரிட்டோரியாவில் காந்தி எங்கு தங்குவது என்ற பிரச்சனையும் எழுந்தது. பிரச்சனைகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் முதல் வகுப்பு பயணச்சீட்டுடன் காந்தி ரயிலில் பயணமானார். வண்டி நேட்டாலின் தலைநகரான மாரிட்ஸ்பர்க்கை அடைந்தவுடன் பெட்டிக்குள் வந்த ஒரு வெள்ளைக்கார பயணி காந்தியைக் கண்டார். அங்கிருந்து சென்ற அவர்,இரயில்வே அதிகாரிகள் சிலரை அழைத்து வந்தார். இந்தியர்கள் வழக்கமாக பயணம் செய்யும் சாதாரண பெட்டிக்கு செல்லுமாறு அவர்கள் காந்திக்கு ஆணை இட்டனர். அவர் மறுத்தார். காவலர் ஒருவர் உதவியுடன் அவரை வலுக் கட்டாயமாக முதல் வகுப்பு பெட்டியிலிருந்து வெளியேற்றி னார்கள்" என எழுதியுள்ளார். இதே போல் அவருக்கு, குதிரை வண்டியில் பயணம் செய்ய வண்டி ஏஜெண்ட் மறுத்தார். பின்னர் வண்டியின் உட்புறம் இதர பயணிகளுடன் அமரக்கூடாது என நிர்ப்பந்தம் செய்யப்பட்டார். பெட்டிக்கு வெளியே வண்டிக்காரன் பக்கத்தில் தான் இருக்க வைக்கப் பட்டார். இது போன்று காந்தி தென்னாப்பிரிக்காவில் சந்தித்த ஒடுக்குமுறைகள் பல்வேறு வரலாற்று அறிஞர்களால் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இத்தகைய வரலாறு காந்தியின் மீது மதிப்பையும் அதே சமயத்தில் வெள்ளையர்கள் மீதான எதிர்ப் புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இன்று தென்னாப்பிரிக் காவிலோ அல்லது பிரிட்டனிலோ இந்திய மக்கள் அவர்கள் விரும்பும் பிரிவில் ரயிலில் பயணம் செய்ய முடியும். ஆனால் இந்தியாவில் தீண் டத்தகாத சாதியினைச் சேர்ந்த மக்கள் பேருந்தில் அமர்ந்து செல்லமுடியாத அவலம் இன்று வரை பல்வேறு வடிவங்களில் நடைமுறையில் உள்ளன.

வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்ட பொழுது இங்கு ரயிலில் பயணம் செய்ய இருப்பிடம் ஓய்வறை உணவு ஆகியன கிடைப்பதில் தீண்டத்தகாத சாதியினர் பாதிப்புக்குள்ளாயினர். இந்தியாவில் இயக்கப்பட்ட இரயில்களில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு என பிரிக்கப்பட்டிருந்தது. முதல் இரண்டு வகுப்புகளும் ஆங்கிலேயர்கள் மட்டுமே பயணம் செய்ய ஒதுக்கப் பட்டது. மூன்றாம் வகுப்புகளில் ஒன்றுக்கு மேல் பெடடிகளில் ஐரோப்பியர்கள் யுரேசியன் மற்றும் இந்தியாவில் சில சாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என எழுதி ஒட்டப்பட்டிருக்கும். ஆனால் பெரும்பாலான நேரங்களில் அவ்விரண்டு பெட்டிகளும் காலியாகவே இருந்துள்ளது. மேலும் இந்தியர்களுக்கு ஓய்வு அறைகள் காலியாக இருந்தாலும் அவ்வறைகள் அவர்க ளுக்குத் தரப்படவில்லை. தலித் மக்களுக்கு இருப்பிடம் ஓய்வறை உணவு ஆகியன கிடைப்பது இல்லை. ரயில் பயணிகளிடையே நிலவும் இனப்பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வரும் தீர்மானம் 1921,மார்ச் மாதம் 5-ந் தேதி சென்னை மாகாணத்தில் நிறைவேற்றப்படுகிறது. அப்போது ரயில் நிர்வாகமானாது ஆங்கிலேய அரசாங்கத்திடம் இருந்தது.

இன மற்றும் சாதிப்பாகுபாடு ரயிலில் மட்டுமல்ல படகுப் பயணத்திலும் கூட நடந்தது. பயணிகளின் படகிற்கான விதி எண் 16ல் பயணிகளின் படகிற்கான உரிமம் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு என இருக்க வேண்டும். முதல் வகுப்பு படகு உரிமையாளர். சில சாதி அல்லது சாதிகளை அவர் விருப்பப்படி ஏற்றிச் செல்லலாம். இரண்டாம் வகுப்பு படகு உரிமையாளர் எந்த விதமான சாதிப் பாகு பாடுமின்றி அனைத்து சாதியினரையும் ஏற்றிச் செல்ல வேண்டும். இதில் முதல் வகுப்பு படகு சில சாதிகளை ஏற்றிச் செல்லலாம் என்பது பல சாதிகளை ஒதுக்கியே வைத்துள்ளது என்பது தெரிகிறது. மேலும் டெல்டா மாவட்டங்களில் இந்திய கிறித்தவப் பயணிகள் படகில் பயணம் செய்யும் போது அவர்களின் மனம் புண்படுத்தப் பட்டுள்ளது. கால்வாய் மற்றும் ஆறுகளில் உயர் சாதியினர் பயணம் செய்யும் போது அவர்கள் விரும்பிய இலக்கினை அடைந்த பின்னரே தீண்டத் தகாதோர் படகில் பயணம் செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்கிற எழுதப்படாதவிதி உயர் சாதி இந்துக்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிலையில் 1924ம் ஆண்டு சென்னை மாகாணத்தில் பொதுநலம் கருதி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் படி, எந்தச் சாதியையோ அல்லது வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் பொதுப்பாதையில் நடக்கலாம் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கலாம் என்பது போன்ற உரிமைகள் வழங்கப்பட்டது. ஆனால் 1925 மே மாதம் 21ந் தேதி திருவண்ணாமலை முதல் சாமல் பட்டி வரைச் செல்லும் பச்சையப்பன் மோட்டார் சர்வீஸ் கம்பெனி இரண்டு தலித்துகள் பயணச் சீட்டு பெற்றிருந்தும் அவர்களை பேருந்தில் ஏற்றிச் செல்ல ஓட்டுநரும் நடத்துனரும் மறுத்துள்ளனர். செங்கம் காவல் நிலைய அதிகாரிகள் மூலமாக தலித்துகள் வாங்கிய பயணச் சீட்டிற்கான பணத்தை அவர்களிடம் திருப்பி அளித்துள்ளனர். சென்னை மாகாண உறுப்பினர் சு. வீரைய்யன் 1925 மே மாதம் 30-ந் தேதி அரசாங்கத்திடம் புகார் செய்கிறார். இச்சம்பவம் குறித்து விசாரணை செய்த அரசாங்கம் பயணச் சீட்டு பெற்றிருந்தும் அவ்விரு தலித்துகளை பேருந்தில் ஏற்க மறுத்தது உண்மை என்பதை உறுதி செய்கிறது. மோட்டார் வாகனச் சட்டத்தில் 1924ல் பிரிவு புல் 2-யு நிபந்தனையானது,ஆதி திராவிடர் அல்லது ஆதி - ஆந்திரரிடமிருந்து பயணச்சீட்டிற்கு பணம் வாங்க நடத்துனர் அல்லது ஓட்டுநர் மறுப்பது என்பது மோட்டார் வாகனச் சட்டத்தினை மீறுவதாகும் என்கிறது. இச்சட்டத்தினை பச்சையப்பன் மோட்டார் சர்வீஸ் கம்பெனி மீறியுள்ளது. இக்கம்பெனியின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக கூறியது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை.

சேலத்தை தலைமையிடமாக கொண்டது நல்லிப் பாளையம் தண்டபாணி மோட்டார் சர்வீஸ். இதன் உரிமையாளர் எம். ஆர். ஆர்ஓய். கே. கே. வீரப்பா கவுண்டர் ஆவார். சேலம் மாவட்ட ஆணையம் நல்லிப் பாளையம் தண்டபாணி மோட்டார் சர்வீஸ் நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்துள்ளது. ஆனால் இக்கம்பெனி மோட்டார் வாகனச் சட்டத்தையும் மீறி,பேருந்திற்கான பயணச் சீட்டில் "பஞ்சமர்களுக்கும் பெருவியாதிஸ்தர்களுக்கும் இடம் கிடைக்கப்படமாட்டாது",என அச்சிட்டுள்ளனர். இது குறித்து விசாரணை செய்த சேலம் மாவட்ட ஆணையத் தலைவர் பு.கு.கு பௌக்கஸ் பயணச்சீட்டில் பஞ்சமர்களுக்கும் பெருவியாதிஸ்தர்களுக்கும் இடம் கிடைக்கப்பட மாட்டாது என்ற நிபந்தனை அச்சிடப்பட்டதை உறுதி செய்து 1925 செப்டம்பர் மாதம் 13ந் தேதி உள்துறை அமைச்சகத்திற்கு கடிதம் எழுதினார். அதே சமயத்தில் பேருந்து உரிமையாளருக்கு மோட்டார் வாகனச் சட்டத்தை மீறியதற்காக ரூ. 50 தண்டமும் ,அப்பணத்தை கடிதம் கிடைத்த 7 நாட்களுக்குள் அம்மாவட்ட கருவூலத்தில் கட்ட வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் பயணச் சீட்டில் அந்த நிபந்தனைகளை அழிக்க வேண்டுமென்றும் எதிர் காலத்தில் இது போன்று நடந்தால் நடவடிக்கை எடுப்பதாகவும் எச்சரித்தார். இதே போல் ஈரோடு முதல் தாராபுரம் வரையும் காங்கேயம் முதல் ஊத்துக் குழி வரையும் இயங்கிய ஸ்ரீனிவாசா லட்சுமி மோட்டார சர்வீஸ் 1926ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தை மீறி தலித்துகளை தங்கள் பேருந்தில் ஏற்ற மறுத்துள்ளது.

1938ம் ஆண்டு மார்ச் மாதம், இச்சமூகம் தலித் மக்களை ஒடுக்குவதிலிருந்து விடுவிக்க ராவ் பகதூர் எம். சி. ராஜா அவர்களால் சென்னை மகாணத்தில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு அம்மசோதா நிறை வேற்றப்படுகிறது. இது Removal of Social disability Act,1938 என்று அழைக்கப்பட்டது. இச்சட்டம் கொண்டு வந்த பின்னரும் தலித் மக்களை பேருந்தில் ஏற்றிச் செல்வதை பேருந்து நிர்வாகத்தினர் மறுத்தே வந்தனர். மீணடும் Removal of Social disabilities act 1938 ஐ நடைமுறைபடுத்துவதற் கான மசோதா 1947ல் நிறைவேற்றப்ப டுகிறது. இருப்பினும் ஆங்கிலேய அரசிடமிருந்து இந்தியா விடுதலை அடைந்த சில மாதங்களில் உதகமண் டலத்தில் தலித் மக்களை பேருந்தில் ஏற்றிச் செல்ல வில்லை.

சுதந்திர இந்தியாவில் தலித்துகளை பேருந்தில் ஏற்றிச் செல்ல மறுக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடக்கிறது. சுதந்திர இந்தியாவுக்கான அரசியல் சாசனத்தில் தீண்டாமை ஒழிக் கப்பட்டதாக அறிவிக்கிறது. மேலும் தீண்டாமையினை கடைபிடிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறது. 1986ம் ஆண்டு தமிழகத்தில் நீண்டகால இடைவெளிக்கு பின்னர் உள்ளாட்சி தேர்தல் நடக்கிறது. இத்தேர்தலில் தலித் மக்களும் போட் டியிட மனுதாக்கல் செய்கின்றனர். திருநெல்வேலி மாவட்டம் சிவந்திபட்டி

www.padippakam.com

மற்றும் முத்துார் பஞ்சாயத்திற்கு தலித் மற்றும் தேவர் சாதியினர் மனுத் தாக்கல் செய்கின்றனர். தலித் மக்கள் தங்களின் உரிமையினை அடைய முயற்சி செய்த போது, காலம் காலமாக தலித் மக்களை ஒடுக்கி வந்த தேவர் சாதியினர் தங்களின் சாதீய ஆதிக்கத்தின் வெறியினை வெளிப்படுத்தவே, தேவர்களுக்கும் தலித்துகளுக்கும் மோதல் ஏற்படுகிறது.

இந்த பஞ்சாயத்து தேர்தல் ஆரம்பிக்கும் வரை சிவந்திபட்டிக்கு சென்று வந்த பேருந்துகளுக்கு அரிசி ஆலை நிறுத்தமே கடைசி நிறுத்தம் ஆகும். அரிசி ஆலையானது தலித் மக்கள் வசிக்கின்ற பகுதிக்கு மிக அருகில் உள்ளது. சிவந்திபட்டிக்கு திருநெல்வேலியிலிருந்து செல்லும் பேருந்துகள் சிவந்திபட்டியில் உள்ள ஆதிக்கச் சாதியினர் வாழும் பகுதியினைக் கடந்து சென்று அரிசி ஆலை முன் நிறுத்தப்படும். பின்னர் அங்கிருந்து திருநெல்வேலிக்கு புறப்பட்டுச் செல்லும். பேருந்து புறப்படும் பகுதி தலித் மக்கள் வசிப்பிடம் என்பதாலும் அவர்கள் முதலிலேயே இருக்கையில் அமர்ந்து விடுவார்கள் என்பதாலும் ஆதிக்கச் சாதியினர் அவர்கள் வாழும் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்திலேயே ஏறி இருக்கையில் அமர்ந்து கொண்டும் அரிசி ஆலை பேருந்து நிறுத்தம் வரைச் சென்று பின்னர் அங்கிருந்தே திருநெல்வேலிக்கு அதே பேருந்தில் சென்றனர். இதனால் அரிசி ஆலை பேருந்து நிறுத்தத்தில் ஏறும் தலித் மக்களுக்கு இருக்கை கிடைக்காது என்பது மட்டுமல்ல காலியாக உள்ள முன்பே ஏறியிருந்த ஆதிக்கச் சாதியினர் தலித் மக்களை இருக்கையில் அமர விடாமல் தடுத்தனர். பின்னர் அக்காலியான இருக்கையில் ஆதிக்கச் சாதியினர் அவர்களுடைய பேருந்து நிறுத்தத்தில் ஏறி இருக்கையினை நிரப்புவர். ஆனால் இருக்கை காலியான இருந்தும் ஆதிக்கச் சாதியினரின் சாதிவெறியால் தலித் மக்கள் பேருந்தில் நின்றே பயணம் செய்தனர்.

இந்நிகழ்ச்சி 1986ம் ஆண்டு பஞ்சாயத்து தேர்தல் வரை நடந்தது. இத்தேர்தலில் தங்களின் உரிமையினை அடைய முயற்சி செய்த சிவந்திப்பட்டி தலித் மக்கள் பேருந்திலும் அமர்ந்து செல்ல முயற்சி செய்ததிலிருந்தே தங்கள் உரிமைக்கான போராட்டத்தை ஆரம்பித்தனர் எனலாம். இப்போராட்டமானது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இந்தியா ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு 40 ஆண்டுகள் கடந்த பின்னரும் திருநெல்வேலி மாவட்டம் வல்லவன் கோட்டை என்ற ஊருக்கு பேருந்து வசதியின்றியே அப்பகுதி மக்கள் வாழ்ந்தனர். அவ்வூரில் வசிக்கும் அனைவரும் தலித் மக்களே. 1987-ஆம் ஆண்டு நடந்த இடைத் தேர்தலின் போது ஆளும் கட்சியின் வெற்றிக்காக (ஆர். எம். வீரப்பன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.) வல்லவன் கோட்டைக்கு எம். பி. ஆர். என்ற தனியார் பேருந்து விடப்பட்டது. அவ்வூரிலிருந்து திரும்பி திருநெல்வேலிக்கு செல்கிறபோது அப்பேருந்து வெள்ளாளன் குளம் என்ற பெரும்பாலும் ஆதிக்கச்சாதியினர் வாழும் பகுதி வழியாக சென்று வரும். வல்லவன் கோட்டையிலேயே அப்பேருந்தின் இருக்கையில் தலித் மக்கள் அமர்ந்து விடுவதால் ஆதிக்கச் சாதியினர் உட்கார சில இருக்கைகள் மட்டும் இருக்கும். இதனால் தலித் மக்கள் பேருந்து இருக்கையில் அமர்ந்து வர ஆதிக்கச் சாதியினர் நின்று வருவதை விரும்பாத அவர்கள் அப்பேருந்து வல்லவன் கோட்டைக்கு செல்வதை தடுத்து விட்டனர். அப்பேருந்து ஓரிரு நாட்கள் மட்டுமே வல்லவன் கோட்டைக்கு சென்று வந்தது. இதனால் மீண்டும் அப்பகுதி தலித் மக்களுக்கு பேருந்து வசதி மறுக்கப்பட்டது. சில ஆண்டுகள் கடந்த பின்னர் வல்லவன் கோட்டைக்கு அரசுப் பேருந்து இயக்கப்பட்டது.

1990 களில் தலித் மக்கள் தங்களின் சமூக விடுதலைக்கான போராட்டத்தை நடத்தினர். இச்சமயத்தில் தமிழக அரசாங்கம் ஆங்கிலேயர்களை வெளியேற்ற நடந்த போரில் உயிர்த்தியாகம் செய்த வீரன் சுந்தரலிங்கம் பெயரில் 1997ம் ஆண்டு ஒரு போக்குவரத்து கழகத்தை விருதுநகரை தலைமையிடமாகக் கொண்டு தொடங்கியது. உலகத் தொழிலாளர் தினமான மே 1ந் தேதி இயக்கப்பட்ட அப்போக்குவரத்துக் கழகத்திற்கு எதிராக ஆதிக்கச் சாதியினர் கலவரம் செய்தனர். தலித் ஒருவரின் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கபட்ட போது தான் அப்பேருந்தில் ஏறிச் செல்ல ஆதிக்கச் சாதியினரின் சாதி வெறி இடம் கொடுக்கவில்லை. இதனால் பேருந்து எரிப்பு, சிலை உடைப்பு என கலவரம் நீடித்ததின் விளைவு அனைத்து போக்குவரத்து கழகங்களின் பெயர்களும் நீக்கப்பட்டன.

இச்சம்பவங்கள் நடப்பதற்கு முன்னதாக சிவந்திபட்டியில் அவ்வப்போது தலித்துகளுக்கும் தேவர்களுக்கும் மோதல்கள் நடந்தன. 1995ம் ஆண்டு இம்மோதல் வலுவாக மாற்றம் பெறுகிறது. இதன் உச்சகட்டமாக சபாபதி என்ற தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர் தேவர்களால் 28.6.96 ல் படுகொலை செய்யப்பட்டார் பின்னர் ஆறுமுகத் தேவர் என்பவர் கொலை செய்யப்படுகிறார். இந்தச் சம்பவம் நடக்கின்ற வரை பேருந்துகள் தலித் மக்கள் வசிக்கும் பகுதியான அரிசியாலை வரை சென்று வந்தது. இக்கொலைகளுக்கு பின்னரே பேருந்து புதிதாக திறக்கப்பட்ட காவல் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. இக்காவல் நிலையமானது ஆதிக்கச் சாதியினர் வாழும் பகுதிக்கு மிக அருகாமையிலேயே உள்ளது. இதனால் இவர்கள் வீட்டிலிருந்து தாமதமாகவே புறப்பட்டு பேருந்தில் இருக்கையில் அமர்ந்து கொள்கின்றனர். மேலும் சிவந்திபட்டி வழியாக செல்லும் பேருந்துகளும் அரிசி ஆலை நிறுத்தத்தில் நிற்பதில்லை.

திருநெல்வேலிக்கும் சிவந்திபட்டிக்கும் இடையில் சென்று வரும் பேருந்துகள் காலை 5.15 மணி முதல் இரவு 10.30 வரை 25 முறை சென்று வரும். இப்பேருந்துகளின் எல்லையானது தலித் பகுதி மக்கள் வாழும் அரிசி ஆலை ஆகும். அரசாங்கம் அவ்விடத்தில் ஒரு நிரந்தரமான நிழற்கூடத்தையும் அமைத்துள்ளது. அரிசி ஆலைப் பகுதிகளில் வாழும் தலித் மக்களில் விவசாயிகளும் விவசாய மற்றும் இதர தொழிலாளர் களாகவும் உள்ளனர். விவசாய உற்பத்தி பொருட்களை அப்பேருந்து களில் தான் ஏற்றிச் செல்வர். தற் போது அப்பேருந்து நிலையம் காவல் நிலையத்திற்கு மாற்றியதன் விளை வாக அரிசி ஆலைப்பகுதி தலித் மக்கள் பேருந்துக்காக சுமார் 2 கி. மீ தூரம் நடக்கின்றனர். இதனால் அப் பகுதி தலித் மக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாயினர். சிவந்திபட்டி தலித் மக்கள் அரிசி ஆலையில் பஸ்நிறுத்தம் கேட்டு 3.7.1999ல் பேரணி நடத்தினர். இதற்குப்பின் சிவந்திப்பட்டி வழியாக செல்லும் கொடிக்குளம் பேருந்து ஒரே ஒரு முறை மட்டும் அரிசி ஆலையில் நின்று சென்றதும் அன்று மாலை முதல் மீண்டும் அப்பேருந்து நிறுத்தப்படவில்லை. இதனால் பேருந்து நிலையத்தை பழைய அரிசி ஆலைப் பகுதிக்கு மாற்றம் செய்யக் கோரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர். கிருஷ்ணன் (வாசுதேவநல்லூர் தொகுதி) சென்னை உயர்நீதி மன்றத்தில் 1999ம் ஆண்டு டிசம்பர் மாதம் மனுதாக்கல் செய்துள்ளார். இதற்கு தமிழக அரசாங்கம் சார்பில் எஸ். ஜோசப் ஸ்டீபன் என்பவர் 2001ம் ஆண்டு ஜூலை மாதம் பதில் மனுத் தாக்கல் செய்துள்ளார். அதில், பேருந்து நிலையத்தை அரிசி ஆலைப் பகுதிக்கு மாற்றம் செய்வது சட்டம் ஒழுங்குப் பிரச்சனைக்கு பாதகம் செய்யும் அதே சமயத்தில் பொது நலத்திற்கு எதிராக இருப்பதாகவும் கூறியுள்ளார். மேலும் பொது நலத்தை கணக்கில் எடுக்கும் போது மக்கள் (தலித் மக்கள்) நடக்கும் துாரமானது ஒரு பொருட்டல்ல என்றும் அரசாங்கம் சார்பில் தெரிவித்துள்ளார். ஆனால் அம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் ஆகியும் உச்சநீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படாமலேயே உள்ளது. சிவந்திப்பட்டி தலித் மக்கள் தினமும் சுமார் 2 கி. மீ நடந்து சென்றே பேருந்தில் ஏறி நின்று கொண்டே பயணம் செய்கிறார்கள். அரசாங்கத்தின் பொதுநலம் என்பது ஆதிக்கச் சாதியினரின் நலமாகவே உள்ளது. இந்தப் பொது நலம் தலித் மக்களுக்கு பாதகமாகவே உள்ளது.

காந்தியின் தென்னாப்பிரிக்கா ரயில் பயணத்தில் உள்ள நிறவேறு பாடு இந்தியாவில் ஆங்கிலேயர்களால் இங்குள்ள இந்திய மக்கள் மீது கபை பிடிக்கப்பட்டவைதான். இதில் அதிகமாக தலித் மக்களும் பாதிக்கப் பட் டனர். ஆனால் இன்று ஒரு இந்தியர் ஆப்பிரிக்காவிலோ அல்லது வெள்ளைக்காரர் நாடுகளிளோ ரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்ய முடியும். காந்தியின் ரயில் பயண நிறவேறுபாட்டு பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. தீர்க்கப் படாதது தலித் மக்களின் பேருந்து பயணங்களே. தலித் மக்களை 1947க்கு முன் பேருந்தில் ஏற்ற மறுத்தனர். 1947க்குப்பின் பேருந்தில் உட்கார மறுக்கப்படுகின்றனர். சமூக ஒடுக்கு முறைகளையும் தீண்டாமையும் ஒழிக்க சட்டங்கள் இயற்றப்பட்டாலும் பேருந்து பயணத்தில் இன்றும் தீண்டாமை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ■

# இலங்கை அரச குடும்பமும் பிரித்தானிய அரச குடும்பமும்

இலங்கையில் ஆங்கிலேயர்களினால் இடம்பெயர்க்கப்பட்ட கடைசி மன்னனான விக்கிரம ராசசிங்ககன் தனது கடைசிக்காலத்தை தமிழ் நாட்டிலுள்ள வேலுார் சிறையில் கழித்தார். அவரது வழித்தோன்றல் இன்று வேலுார்ப் பகுதியில் திரையரங்கில் நுாழைவாயிலில் நின்று சீட்டுக் கிழித்துக் கொண்டிருக்கிறாராம். அவருக்கு அமைதி வந்தால் இலங்கை திரும்ப ஆசை.

அதே வேளை கொழும்பிலிருக்கும் அருங்காட்சியகத்தில் கடைசி ராணியின் பொருட்களும் ஆடைகளும் சிறப்புக் காட்ச்சியாக இடம்பெறுகின்றன.

இங்கு முரண்பாடு யாதெனில் இரட்டைத் தரம்பார்த்தல் எங்களிடம் எப்போதும் உள்ளது. இங்கு ராணிக்கும் ராசாவுக்கும் நடந்த நிலைப் பார்த்தால் பெரிதாக இதில் கவலைப்பட என்ன இருககிறது என்ற கேள்வி வரும்.

ஆனால் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வரும் நாளிதழ் வார இதழ்களில் பிரித்தானிய அரச குடும்பத்தைப் பற்றிய செய்திகள், அடிமைத்தனம் விட்டுப்போனபின்னும் இன்னும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. என்ன இருந்தாலும் வெள்ளைக்காரத் துரையென்றால் சும்மாவா. கருப்பென்றால் ராசாவாவது ராணியாவது. ஆனால் பிரித்தானிய ராணியின் மகனின் கள்ளக்காதலிபற்றி எல்லாருக்கும் அக்குவேறு ஆணிவேராகத் தெரியும். இந்த நிலை மாறி எங்களுக்குள் இருப்பவைகளைப் பார்க்கப்பழக வேண்டும்.

www.padippakam.com



# தமிழ் நாட்டில் தமிழ்ப்பணி புரிந்த இலங்கை அறிஞர்கள் - ஓர் அடைவு

ப. கணேசலிங்கம்.
(மூத்த விரிவுரையாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.)

இலங்கை புவியியல் அடிப்படையில் தனிப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் அதன் பண்பாடு, சமயம், தமிழ் மொழிவளர்ச்சி, வரலாறு ஆகியன பெருமளவுக்கு இந்தியாவுடன் தொடர்பு கொண்டு வளர்ந்ததைக் கடந்த கால ஆய்வு நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தியாவிற்கும் ஈழநாட்டிற்கு மிடையே உள்ள தொடர்பு எக்காலத்தில் உற்பத்தியானதென்று எவராலுஞ் சொல்ல முடியாதெனலாம். இருநாட்டிற்குமிடையேயுள்ள தொடர்பு ஒன்றல்ல, இரண்டல்ல பலவாகும். இருநாட்டின் நில அமைப்பு, சாதியா சாரம், சமயாசாரம், தேசாசாரம், மொழிகளின் கொள்கை, கலைத்திறன், ஊடாட்டம், வியாபாரம், தீர்த்தயாத்திரை, தலயாத்திரை ஆகிய இன்னோரன்ன பல தொடர்புகள் அன்று தொட்டு இன்று வரையும் உள்ளன. இக்காரணம் பற்றியே ஈழநாட்டில் வாழும் தமிழ் மக்களாகிய நாம் இந்தியாவைத் தாய் நாடென்கிறோம்.

இரு நாடுகளுக்குமிடையேயுள்ள பலவகையான தொடர்புகளும் கல்வித் தொடர்பும், சமயத் தொடர்புமே முக்கியமானவையெனலாம். இந்த இரண்டினுள்ளும் கல்வித் தொடர்பே மிகமிக முக்கியமானது. இத்தொடர்பின்றிச் சமய தொடர்பு இருநாளுக்குமிடையே பெரிதும் விருத்தியாதல் அரிதாகும்.

இந்துப்பண்பாட்டு மரபிலே காலத் திற்குக் காலம் சமயவளர்ச்சி,தமிழ்மொழி வளர்ச்சி, தத்துவவளர்ச்சி ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து வளர்த்து வந்தோர்களை, ரிஷிகள், ஞானிகள், முனிவர்கள், அருளாளர்கள், பக்தி நெறியாளர்கள், அனுபூதிமான்கள், மறைஞானிகள், இறையருளர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சான்றோர்கள், ஆச்சாரியார்கள், சித்தர்கள், பக்தர்கள், அறிஞர்கள், பெரியோர்கள், சீர்திருத்த சிந்தனையாளர்கள், புதுநோக்காளர்கள் என்று பல்வேறு சொற்களினால் சுட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

சைவ சமயமும் தமிழும் எமது பண்பாட்டின் இரு கண்களாகும். இந்திய வரலாற்றில் இலங்கை வரலாற்றிலும் சைவசமயமும் தமிழும் இணைந்து வளர்த்த வரலாற்றினைக் காண முடிகின்றது. சைவ சமயமின்றித் தமிழ் மொழி இல்லை. தமிழ் மொழியின்றி சைவ சமயம் இல்லை என்ற நிலையே காணப்படுகின்றது. தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்த அறிஞர்கள் பலர் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்த அறிஞர்கள் பலர் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். இவ்வறிஞர் பெருமக்கள் தமிழ் மொழி,வடமொழி,ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கியிருக்கிறார்கள். சில அறிஞர்கள் தமிழ் மொழி,வடமொழி ஆகிய இருமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் சைவத் தமிழ் வளர்ச்சிக்கு காலந்தோறும் பணியாற்றிய அறிஞர் பெருமக்களை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

1. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றி சைவ சமய வளர்ச்சிக் காலத் தத்தமது புலமைகளை நிலைநாட்டிப் புகழீட்டியோர்கள்.

2.இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று சைவ சமயப் பணிகள் புரிந்து



புகழீட்டியோர்கள்.

3. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றி சைவ சமய வளர்ச்சிக்காகத் தத்தமது புலமைகளை நிலைநாட்டிப் புகழீட்டியோர்கள்.

4. இந்தியாவிலிருந்து இலங்கை நாடு வந்து சைவ சமயப்பணிகள் புரிந்து, புகழீட்டியோர்கள்.

இலங்கை நாட்டு மக்களும் தென்னிந்தியாவிற்கு வந்து இங்குள்ள ஆதீனங்களிலும் மற்றைய வித்தியாதானங்களிலும் வடமொழி, தென்மொழிகளைத் தனித்தனி வளர்த்துவந்த பண்டிதப் புலவர்களிடத்தும் கல்வி பயின்று திறமை பெற்று மீண்டு இலங்கை நாட்டிற்கு வந்து, தாங்கள் ஆசிரியர்களாக விருந்து பலர்கருக் கல்வி பயிற்றி வந்தார்கள். இலங்கையிலே பிற தானமாக

யாழ்ப்பாணத்திலேயிருந்து அறிஞரால் இந்தியாவிற்குச் சென்று அந்நாட்டிலே சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்த்த அறிஞரின் தொகை அதிகமோ, இன்றேல் இந்தியாவிலிருந்து இலங்கை நாட்டிற்கு வந்து மேலே சொல்லப்பட்ட இரண்டினையும் வளர்த்த் அறிஞர்களின் தொகை அதிகமோ என உற்று ஆராயுமிடத்து, இலங்கையிலிருந்து சென்று இந்தியாவில் புகழீட்டிய அறிஞர் பெருமக்களின் தொகையே அதிகமெனில் புலப்படக்கிடைக்கின்றது.

இந்தியாவிலிருந்து இலங்கை நாட்டிற்கு வந்து சைவத் தமிழ்ப் பணிகள் புரிந்தோர்கள் வரிசையில் சிவஸ்ரீ. பொன்னம்பல தீஷிதர் (1216 - 1621), கூழங்கைத்தம்பிரான் (கூழங்கையர்), கனக சபாபதி யோகி (1699-1795), சிவஸ்ரீ. பா. கணபதி ஐயர் (1709 - 1784),சிவஸ்ரீ. சந்திர சேகர சாஸ்திரிகள், கொச்சிக் கணேசய்யர, சிவஸ்ரீ. அருணாசலக் குருக்கள், சிவஸ்ரீ. சுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ. கணபதிக்குருக்கள், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார் (1884 - 1951) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்து, சைவத்தமிழ் பணி புரிந்தோர்களாாக, ஈழத்துப் பூதந்தேவனார் (சங்ககாலம்), திருநெல்வேலி. சுவாமி ஞானப்பிரகாச சுவாமிகள் (1658 - 1796), அளவெட்டி தில்லை நாத தம்பிரான் (வரணியூர் தில்லைநாதர்), நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (1716 - 1780), மாதகல். மயில்வாகனப்புலவர் (1779 - 1816), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாநுலர் (1822 - 1879), சிவஸ்ரீ. சிவ சங்கர பண்டிதர் (1831 - 1871) ஆறுமுகத்தம்பிரான், உடுப்பிட்டி. சிவசம்புப் புலவர் (1829 - 1910), வித்துவ சிரோமணி. ந. ச. பொன்னம்லப்பிள்ளை (1837 - 1897), தெல்லிப்பழை. க. மயில்வாகனப்புலவர் (1875 - 1918), நல்லூர். சிற். கைலாச பிள்ளை வட்டுக்கோட்டை, நாககேச ஐயர் (1809 - 1857), நல்லூர். ம. சரவணமுத்துப் புலவர், காரை நகர். மு. கார்த்திகேயப் புலவர் (1819-1898), வடகோவை. சு. சபாபதி நாவலர் (1843 - 1903),

தொடர்ச்சி 19ம் பக்கம்

www.padippakam.com

# குடும்பம் சீர்வரிசை, நிகழ்த்துதல்

பெருந்தெய்வக் கோயில் என்பது வழிபடும் இடம் மட்டுமன்று. அது சமூகத்தின் சாதி, குடும்பம் போன்ற அமைப்பினை கட்டிக்காக்கும் ஒரு சொத்துடமை நிறுவனமாகும். அந்த நிறுவனம் தன்னுடைய இருப்பினை விழாக்களாலும் சடங்குகளினாலும் வெளிப்படுத்திக் கொள்கின்றது. கோயில்களில் பல பெரிய விழாக்கள் ஆண்டுக்கு ஒரு முறை 9, 10, 11 நாட்களில் நடைபெறுகின்றன. மன்னர்களின் காலத்திலேயே இவ்வகையான விழாக்கள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டன. இவ்விழாக்கள் யாவும் பெரும் பொருட் செலவிலேயே நடத்தப்படுகின்றன. மேலும் இவ்வகையான விழாக்கள் யாவும் நிலமானியச் சொத்தினைப் பின்னணியாகக் கொண்டே நிகழ்த்தப்படுவனவாகும்.

பெருந்தெய்வக் கோயில்களில் பெரிய திருவிழாக்கள் மட்டுமல்லாமல் சிறிய அளவிலான உள்ளூர் மரபு சார்ந்த சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய சிறிய அளவிலான உள்ளூர் மரபு சார்ந்த சடங்குகளே அப்பகுதி மக்களை கோயிலோடு உணர்வு பூர்வமாக கட்டி வைப்பனவாக உள்ளன. பெரும் திருவிழாக்களே சுற்று வட்டார மக்களை கோயிலோடு இணைப்பனவாக இருந்தால் சிறிய அளவிலான சடங்குகளோ உள்ளூர் மக்களை கோயிலோடு இணைப்பனவாக அமைகின்றன. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட வைணவப் பெருந்தெய்வக் கோயில்களில் நடைபெறும் இரண்டு சடங்கு நிகழ்வுகள் மட்டும் இக்கட்டுரையில் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான வைணவக் கோயில்களில் தைப் பொங்கல் தினத்திற்கு மறு நாள் 'கனு உற்சவம்' என்னும் திருவிழா நடத்தப்படுகிறது. இந்த கனு உற்சவம் என்ற திருவிழாவும் திருநெல்வேலி மாவட்டம் - நான்குநேரி வானுமாமலை கோயிலில் மட்டுமே ஆண்டு தோறும் நடைபெறும் "சீர் வரிசை" கொடுத்தல் என்ற சடங்கும் இங்கு விளக்கப்படுகின்றன.

பெருந்தெய்வக் கோயில்களில் சைவக் கோயிலாயின் அக் கோயிலின்

ச. நவநீத கிருஸ்ணன்

தலைமை பெண் தெய்வத்தை அதாவது இறைவனின் மனைவியான இறைவியை மக்கள் பொதுவாக 'அம்மன்' எனவும் வைணவக் கோயிலாயின் 'தாயார்' எனவும் அழைப்பது வழக்கம். இக்கட்டுரையில் இறைவியை குறிக்க கோயில் அடியவர்கள் பயன்படுத்தும் "தாயார்" என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது. இறைவனை முறையே "சாமி", "பெருமாள" என அழைப்பதால் அச் சொற்களே இங்கும் பயன்படுத்தப் படுகின்றன.

**கனு உற்சவம்:**

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் கோயில் ஒரு வைணவத் தலமாகும். இக்கோயிலின் பெருமாள் ஆதிநாதர் ஆவார். தாயார் குருகூர் நாச்சியார் ஆவார். இக்கோயிலின் குருகூர் தாயார் தைப் பொங்கல் திருநாளுக்கு மறுதினம் காலை உடையவர் சன்னதியில் எழுந்தருளுகின்றார். அங்கு அவருக்கு கரும்பு, மஞ்சள் குலை, சித்ரான்னம் ஆகியவை சீதனமாக வழங்கப்படுகின்றன. அவள் அதனை பெற்றுக் கொண்டு கோயில் வீதிகளுக்கு வலம் வருகிறாள். வலம் வரும் போது அடியவர்கள் தாயாருக்கு மஞ்சள், குலை, கரும்பு ஆகியனவற்றை அன்று சீதனமாக வழங்குகின்றனர். அவள் அதனை பெற்றுக் கொண்டு கோயிலுக்குச் செல்கிறாள். இன்று வழங்கப்படும் பொருட்கள் யாவும் பிற நாட்களில் வணங்கப்படும் படையலைப் போன்று கருதப்படுவதில்லை. அதாவது பிற நாட்கள் போன்று தாயாருக்கு தேங்காய், கற்கண்டு படைத்து தாங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்வதுபோல் இன்று எடுத்துச் செல்வதில்லை. மாறாக, தாயாருக்கு தங்கள் வீடுகளிலிருந்து மஞ்சள், குலை,கரும்பு ஆகியனவற்றை சீதனமாக வழங்குகின்றனர். அதனை தாயரும் தன்னுடன் தன்னுடைய புகுந்த வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர். இந்த மனநிலையே இன்று அடியவர்களிடம் காணப்படுகின்றது. வைணவ மரபு படி உடையவர் சன்னதியே அக் கோயில் தாயாருக்கு தாய் வீடாகும். தாயார் குடியிருக்கும் இடம் புகுந்த வீடு அதாவது கணவர் குடியிருப்பாகும். அதாவது இன்று அத்தாயார் தன் தாய் வீடு சென்று தனக்கான பொங்கல் சீரினை (மஞ்சள் குலை, கரும்பு, அரிசி ஆகியனவற்றை) பெற்றுவருகின்றாள். இத்தகைய நிகழ்வே வைணவக் கோயில்களில் குறிப்பாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டக் கோயில்களில் "கனு உற்சவம்" என்னும் பெயரில் நிகழ்த்தப் படுகின்றது.

**"சீர்வரிசை கொடுத்தல்"**

இரண்டாவதான "சீர்வரிசை கொடுத்தல்" என்னும் சடங்கினை காண்போம் திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரி வானுமாமலை கோயில் ஒரு வைணவதலமாகும். இக்கோயிலின் பெருமாள் வானுமாமலை,தாயார் ஸ்ரீவரமங்கை. இக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் பிரம்மோற்சவத் திருவிழா நடைபெறுகிறது. இது 11 நாள் திருவிழாவாகும். இத்திருவிழாவில் ஒன்பதாம் நாள் காலையில் "சீர்வரிசை கொடுத்தல" என்னும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது.

அதாவது அன்று காலை இக்கோயிலின் ஜீயர் மடத்துத் திண்ணையில் கோயிலின் வெள்ளி, பித்தளை மற்றும் தங்க உலோகப் பாத்திரங்களான பானை, சட்டி, பக்கா, கரண்டி வகைகளும் உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு, உப்பு, காய்கறி வகைகளும் கருவேப்பிலையும் பார்வைக்காக வைக்கப்படுகின்றன. கருவேப்பிலை மட்டும் அளவில் மிகக் குறைவாக வைக்கப்படுகின்றது. கோயிலின் உட்புறத்திலிருந்து "ஸ்ரீவரமங்கை தாயார்" எழுந்தருளிப்பு செய்து ஜீயர் மடத்துக்கு அருகில் வருகின்றார். அச்சமயத்தில் தாயார் எழுந்தருளிப்பு செய்த சப்பரத்தை விரைவாகக் ஜீயர் மடத்திலிருந்து கொண்டு சென்று விடுகின்றனர். இந்த நிகழ்வினை காணும் அடியவர்கள் சீர்வரிசையில் கருவேப்பிலை குறைவாக இருப்பதால் தாயார் கோபப்பட்டு போவதாக தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர். மீண்டும் கோயில் அர்ச்சகர் ஒருவர் தாயார் நிற்கும் இடத்திற்குச் சென்று சமாதானம் செய்ய தாயார் மீண்டும் ஜீயர் மடத்திற்கு எழுந்தருளிப்பு செய்கின்றார். அப்பொழுது கருவேப்பிலையின் அளவு சரி செய்யப்படுகின்றது. பின்னர் ஸ்ரீவரமங்கை தாயார் ஜீயர் மடத்திற்கு எழுந்தருளிப்பு செய்கின்றார். அங்கு அவருக்கு அனைத்து நகைகளும் அணியப்பெற்று மகரகண்டி சேவை எனப்படும் வழிபாடும் செய்யப்படுகின்றன. இங்கு கோயிலின் அர்ச்சகர் தாயார் அருகில் செல்லுதல் என்பது ஜீயருக்குப் பதிலியாக ஒருவர் சென்று தாயாரை சமாதானப்படுத்துவதாக அடியவர்களால் அர்த்தம் கொள்ளப்படுகிறது.

இக்கோயில் ஸ்ரீவரமங்கை தாயாருக்கு ஜீயர் மடமே தாயார் இல்லமாகும். ஜீயரே தாயாரின் தந்தையாவர். இந்த மகள் - தந்தை உறவினை விளக்கும் ஒரு கதையும் இப்பகுதி மக்களிடம் வழக்கில் காணப்படுகின்றது அதாவது

நான்குநேரி வானுமாமலை கோயிலுள்ள ஸ்ரீவரமங்கை தாயார் ஒரு முறை காணாமல் போய் விடுகிறார். இத் தாயார், கோயில் முதல் ஜீயர் கனவில் தோன்றி, தாம் திருப்பதியில் இருப்பதாகவும் தன்னை இக் கோயிலின் இறைவன் தெய்வநாயகத்திற்கு திருமணம் செய்து வைக்கும்படியும் அறிவிக்கிறார். ஜீயர் கனவிலிருந்து எழுந்து தெய்வநாயகம் தனியாக இருப்பதை விரும்பாமல் திருப்பதி சென்று ஸ்ரீவரமங்கை தாயாரை அழைத்துவந்து தெய்வநாயகத்திற்கு திருமணம் செய்து வைக்கின்றார். இவ்வாறு ஜீயரே திருமணம் செய்து வைத்தமையால் ஜீயர் தாயாருக்கு தந்தை உறவாகவும் பெருமாளுக்கு மாமனார் உறவாகவும் அமைகின்றார். இந்த கதை இப்பகுதி மக்களால் கோயில் குறித்து அறியப்பட்ட ஓர் செய்தியாகும். இக்கதையினை நினைவூட்டும் வகையிலேயே மேற்குறிப்பிட்ட சீர்வரிசை சடங்கும் நிகழ்த்தப்படுகிறது எனலாம்.

தென் தமிழகம் குறிப்பாக திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்ட மக்கள் ஒரு பெண்ணிற்கு தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு "பொங்கப்படி" என அழைக்கப்படும் சீர்வரிசை கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அதாவது ஒரு பெண் திருமணமானவுடன் அப் பெண்ணிற்கு தாய்வீட்டார் முதல் ஆண்டு மட்டுமோ அல்லது முதல் மூன்று ஆண்டுகளோ "பொங்கப்படி" வழங்க வேண்டும் என்பதனை கட்டாய வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். சில சமுதாயங்களில் ஒரு பெண் உயிரோடு இருக்கும் வரை அவருக்கு சீர்வரிசை வழங்க வேண்டும் என்பதனை கட்டாய வழக்காக வைத்துள்ளனர். அப்பெண்ணின் தந்தை தாய் இறந்துவிடினும் அப்பெண்ணின் சகோதரர்கள் அந்தக் கடமையினை ஏற்றுக் கொண்டு தன் அனைத்து சகோதரிகளுக்கும் "பொங்கல்படி" வழங்குவது வழக்கிலுள்ளது. சகோதரன் இறப்பின் சகோதரனின் மகன் சீர்வரிசை வழங்க வேண்டும் என்பதும் உள்ளது. இந்த பொங்கல் படியின் முதன்மையான பொருட்களாக அரிசி,பருப்பு,மஞ்சள் குலை,கரும்பு ஆகியன அமையும். இது குறித்து தன் தாய் வீட்டின் மீது கோபப்படவும்,உரிமை கொள்ளவும் ஒரு பெண்ணிற்கு சமூகத்தில் உரிமை உண்டு.

இத்தகைய சமூக வழக்கத்தினையே கோயிலும் தன் வழியில் பிரதிபலிக்கின்றது எனலாம். அதாவது தாயார் ஸ்ரீவரமங்கை தன் தாய் வீட்டு சீர்வரிசையில் அன்றாடம் காய்ந்து போகும்,சமையலில் சிறிதளவே பயன்படுத்தும் வாசனைக்காக மட்டும் பயன்படுத்தும் ஓர் அற்பப் பொருள் மீது கூட கோபப்படும் அல்லது உரிமை கொள்ளும் தகுதியினை படைத்தவர் என்பதையே அச்சடங்கு வெளிக்காட்டுகின்றது எனலாம். இது ஒரு தமிழ்ப் பெண் தன் தாய் வீட்டின் மீதான உரிமையினை காட்டுகின்றது எனலாம்.

ஆகம விதிகளிலிருந்து விலகிய இத்தகைய பண்பாட்டுக் கூறுகளை பெருந்தெய்வக் கோயில்கள் ஏன் ஏற்றுக் கொண்டுள்ளன அல்லது சடங்குகளாக நிகழத்துகின்றன என வரலாற்று ரீதியிலும் பண்பாட்டு ரீதியிலும் காண வேண்டியதுள்ளது. கி. பி. ஆறாம் நூற்றாண்டில் பிறந்த பக்தி இயக்கத்தின் பின் விளைவாக தமிழகத்தின் கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை கற்களை அடுக்கி கட்டப்படும் பெரும் கோயில்கள் உருவாயின. சைவ,வைணவ மையங்கள் உருவாக்கிய பக்தி இயக்கங்கள் பெண்கள் பற்றியப் பார்வையினை சற்றே தளர்த்திக் கொண்டன. அதாவது சமண, பௌத்த சமயங்களால் இறுக்கமடைந்திருந்த பெண்கள்

படிப்பகம்

பற்றிய பார்வைகள் சற்று நெகிழ்ச்சி யடைந்தன. அதன் விளைவாகவே பக்தி இலக்கியங்கள் தோன்றின. கோயிலின் இறைவனுக்கு மனைவியர் கற்பிக்கப்பட்டனர். இக்கற்பிதம் வைதீக மரபுகளோடும் நாட்டார் மரபுக ளோடும் இணைக்கப்பட்டது. முதலாம் இராசராசன் கி. பி. 1012 ல் கட்டி முடித்த தஞ்சை பெரும் கோயிலின் தோற்றம் வரை தமிழகத்து சைவ, வைணவ பெருங்கோயில்களில் இறை வனின் மனைவிக்கு (இறைவிக்கு) தனிச் சன்னதி எதுவும் அமைக்கப் படவில்லை. ஆனால் தமிழ் நாட்டின் வட பகுதியில் பல்லவர்கள் எழுப்பிய கோயில்களில் கருவறையின் பின்புறச் சுவரில் உட்புறமாக சிவன், உமை, குழந்தையாக முருகன் ஆகியோர் அமர்ந்த கோலத்தில் இருக்கும் சோமாஸ் கந்த மூர்த்தங்கள் அமைக் கப்பட்டன என்பதையும் நாம் இங்கு அறிய வேண்டியுள்ளது.

கணவன் மனைவி குழந்தை ஆகிய குடும்ப அமைப்பைக் காட்டும் சோமாஸ் கந்த மூர்த்தம் திருநாவுக் கரசரால் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் அவரது தேவாரத்தில் கொண்டாடப் பெற்றது. அவரே பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரனை சமணத்திலி ருந்து சைவத்திற்கு மதமாற்றம் செய்த வராவர். எனவே தொண்டை மண் டலத்து பல்லவர் கோயில்களிலேயே சோமாஸ் கந்த மூர்த்தம் முதன் முதலாக நிறுவப்பட்டது எனலாம்.

தமிழ் நாட்டின் நடுப்பகுதி கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் இராசேந்திரன் காலத்தில் தான் இறைவிக் கென்று தனி சன்னதி அமைக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் தோற்றம் பெற்றது.

இறைவியின் சன்னதி இறைவனின் சன்னதிக்கு வலப்புறமாக (அதாவது கிழக்கு நோக்கிய கோயில்களில் தென் பக்கமாக) சுற்றுப் பின் தள்ளியே அமைக்கப்பட்டன. பின்னர் திரு விழாக்களில் இறைவனோடு ஊர் வலமாக எடுத்துச் செல்ல இறைவிக் கென்ற வெண்கலத் திருமேனிகள் உருவாக்கப்பட்டன. கோயில் என்ற நிறுவனம் தலைவன், தலைவி, குழந்தை ஆகிய கூறுகளையுடைய குடும்பம் என்ற சிறு நிறுவனத்தை தனக்குள்ளாக நிலைப்படுத்தியமை ஆகம நெறிகளில் அக் காலங்களில் அங்கீகரிக்கப்படவில்லை. ஏனெனில் சைவ, வைணவ ஆகம நெறிகள் ஒரு கடவுள் கோட்பாட்டினை உடையன. அங்கு இறைவனுக்கு மட்டுமே இடம் உண்டு இறைவிக்கு அதாவது மற்றொருவருக்கு இடம் கிடையாது. இருப்பினும் கோயில்கள் வழிபடும் இடம் என்ற எல்லையினைத் தாண்டி சொத்துடைமை நிறுவனமாக வளர்ச்சி பெற்றவுடன் தான் உயிருடன் வாழ்வதற்காக உள்ளூர் சமூகத்தோடு சமரசம் செய்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆகம நெறிகளை அறியாத வழிபடும் அடியவர்களோடு பொருளாதார ரீதியிலோ, தத்துவார்த்த ரீதியிலோ சமூகச் சட்டங்களை மீறியோ உடன்பாடு செய்ய இயலாதபோது கோயில்கள் மக்களோடு பண்பாட்டுச் சமரசம் செய்து கொள்ள நினைத்தன. இத்தகைய பண்பாட்டுச் சமரசங்கள் யாவும் சடங்கியல் ரீதியிலேயே நிலை நிறுத்தப்பட்டன. மேலும் அச்சடங்கு கள் புனிதப்படுத்தவும் பட்டன. இத்தகைய பண்பாட்டுச் சமரசங்களில் முதன்மையானது குடும்பம் என்ற அமைப்பினை அங்கீகரித்ததாகும். அதாவது சமூகத்திலுள்ள குடும்பம் என்ற தலைவன்,தலைவி அமைப்பி னையும் அதன் செயல்பாட்டினையும் கோயில் தன்னுடைய சடங்கியல் நிகழ்த்துதல்களில் ஏற்றுக் கொண்டதா கும். இத்தகைய சடங்குகளே வழிபடும் அடியவர்களுக்கும் கோயில் என்ற நிறுவனத்திற்கும் இடையில் உளவி யல் ரீதியிலான நெருக்கத்தை, பிணைப்பை ஏற்படுத்துகின்றன. இதுவே மேற்குறித்த இரண்டு கோயில்களின் சடங்குகளில் வெளிப் படுவதை காணலாம்.

17ம் பக்கத் தொடர்ச்சி

# தமிழ் நாட்டில்...

குப்பிளான். காசி. வாசி. செந்திநாதை- யர் (1848 - 1924), சிறுப்பிட்டி. சி. வை. தாமோதரன் பிள்ளை (1832 - 1901), சி. வை. சின்னப்பா பிள்ளை,நல்லூர். வை. திருஞான சம்பந்தபிள்ளை அளவெட்டி. வே கனக சபா பிள்ளை (1829-1873) அச்சுவேலி. அ. வேள் மயில் வாகனப் புலவர் (1788 - 1835), வட்டுக்கோட்டை - சிதகனகேணி - ஆ. அம்பலவாணிந- ாவலர் (1855-1932), வண்ணை. சி. சுவாமிநாத பண்டிதர் (1800-1937), வண்ணை. கனேச பண்டிதர் (1843- 1881), சுன்னாகம். அ. குமாரசுவாமிப்புலவர். (1855-1932), மாதகல். சிற்றம்பலப்புலவர், மானிப்பாய். அ. சுமாமி நாதர் (1765- 1824), அளவெட்டி. சுப்பிரமணிய தம்பிரான், சுன்னாகம் - பூ. முருகேச பண்டிதர் (1830-1900), வல்வை. வைத்தியலிங்கப்பிள்ளை (1852-1901) கோவில் பண்டிதர், வ. கணபதிப் பிள்ளை (1845-1895), கோவில் நா. கதிரைவேற்பிள்ளை (1874-1907), மட்டுவில். க. வேற்பிள்ளை (1846- 1930), இணுவில். நடராசையர், வேலணை. வி. கந்தப் பிள்ளை(1840- 1914), ஊரெழு. சு. சரவணமுத்துப்பிள்ளை (1848-1916), தெல்லிப்பிழை. பின்னலை. வித்துவான். ச. சிவானந்தையர் (1873- 1916), கொக்குவில் குகதாசர். ச. சயாரத்தின முதலியார் (1858-1922), திருகோணமலை, தி.த. கனகசுந்தரம்பிள்ளை (1863-1922), வல்வெட்டி. க. ஏகாம்பரம், வல்வெட்டிதுறை நா. ஏகாம்பரம். (1844-1877), மட்டக்களப்பு - புளியந்தீவு. ச. பூபால பிள்ளை (1855-1920), தாவடி- சோமாஸ்கந்த பண்டிதர், வதிரி. சி. தாமோதரம்பிள்ளை, மட்டக்களப்பு- சுவாமி விபுலாநந்தர் (1892-1947), வண்ணை. முத்துக்குமார சுவாமித் தம்பிரான் (இலக்கண சுவாமி), உடுவில், அ. சந்திர சேகர பண்டிதர் (1800-1879) வேலணை வே. க. இராமலிங்கம் பிள்ளை (1868-1918) வட்டுக்கோட்டை சுவாமி சங்கர சுப்பிரமணிய சச்சிதானந்த ராசயோகி (1864-1944) ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1855-1917), சி. கணேசையர் (1878- 1958), சுன்னாகம். தி. சதாசிவஐயர், தென் கோவை பண்டிதர்,ச. கந்தையாபிள்ளை (1880-1958) சுழிபுரம். சு. சிவபாத சுந்தரம் (1878-1953),ச. நடேசபிள்ளை (1895-1965), பூவேலி பொ. வைத்தியலிங்க தேசிகர், உடுவில் வ. மு. இரத்தினேசுவர ஐயர், வதிரி. சி. நாகலிங்கம் பிள்ளை (1882- 1952), காரை நகர். ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசகர் (1886-1970) ஆகியோர் விளக்குகின்றனர்.

இந்தியாவில் தத்தமது புலமைகள் மூலம் புகழீட்டிய சான்றோர்கள் வரிசையில் ஈழத்துப் பூதன் தேவனார், சுவாமி ஞானப் பிரகாசார், தில்லை நாத தம்பிரான், நல்லூர் சின்னத் தும்பில் புலவர், மயில்வாகனப் புலவர், வைத்தியநாத தம்பிரான், நாகேச ஐயர், சரவண முத்துப் புலவர், கார்த்திகேயப் புலவர், ஆறுமுக நாவலர், சிவ சங்கர பண்டிதர், வித்துவசிரோமணி, ந. ச. பொன்னம்பலபிள்ளை, சபாபதி நாவலர், ஆறுமுகத்தம்பிரான், சிவசம்புப் புலவர், காசிவாசி, செந்திநாதையார், சி. வை. தாமோதரம் பிள்ளை, சி. வை. சின்னப்பாபிள்ளை, திருஞான சம்பந்தப்பிள்ளை, பண்டிதர். வ. கணபதிப்பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள்.


இந்தியாவில் சைவத் தமிழ் பணிகள் புரிந்த அறிஞர்கள் பண்டிதர் என்றும் புலவர் என்றும் வித்துவான் என்றும் வழங்கியமையோடு மகா வித்துவான், வித்துவ சிரோமணி, சைவப் பெரி- யார், தர்க்கசோடாரி, அட்டாவதானி, சதாவதானி, உரையாசிரியர், நாவலர், என்றெல்லாம் பெரும் பட்டங்களாலும் அழைக்கப்படலாயினர். இலங்கை நாட்டு அறிஞர்கள் தமிழ் நாட்டுப் புலவர்களுக்கும் வழிகாட்டிகளாய் வன்முறை காட்டியவர்களால், மரபு வழி நூல்களைச் செய்தும் முன்னோடிகளாயும் வாழ்ந்தனர்

இந்தியாவிலிருந்து காலந்தோறும் தமிழகம் வந்து சென்ற தமிழறிஞர் பெருமக்கள் இலங்கை தமிழகப் பண்பாட்டு உறவுகளைப் பேணி வளர்ப்பதிலே அதிக அக்கறை காட்டியதை அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் மூலம் அறிய முடிகின்றது. இந்திய நாட்டை தாயகமாக வைத்தே சைவத் தமிழ்ப்பணிகள் மேற் கொள்ளப்பட்டன.

திருநெல்வேலி - சுவாமி ஞானப்பிரகாசகர், ஆறுமுக நாவலர் ஆகியோர்களது தமிழக வருகையைத் தொடர்ந்து, இலங்கை நாட்டு அறிஞர் பெருமக்கள் பலர் தமிழகம் சென்று பல சைவத் தமிழ்ப் பணிகளை அவ்வப்பொழுது மேற்கொண்டு வந்ததை அறிய முடிகின்றது. அந்நிய ஆதிக்கத்தினின்றும் சைவப் பண்பாட்டினைக் காக்க பல தடவைகள் தமிழகம் சென்ற நாவலர், அங்கே சைவ சமயமே மெய்ச்சமயம் என்பதை நிறுவினார். தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரியாக நாவலர் விளங்குகின்றார்.

இலங்கை நாட்டு அறிஞர் பெருமக்களால் தமிழகத்தில் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகளை பின்வருமாறு வகுத்து நோக்கலாம். இந்து சமய தத்துவ நூல்களை ஆக்கியளித்தமை, இந்து சமயம் சார்ந்த வடமொழியில் உள்ள நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்தமை, இந்து சமய தத்துவ நூல்களுக்கு உரைகள் வகுத்தமை, திருக்கோயில்கள், வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றை முதன்மைப் பொருளாக வைத்துப் பல தல இலக்கியங்களை ஆக்கியமை, இந்து சமயக் கருத்துக்களை இலகு தமிழிலும் வினாவிடைகளிலும் விளக்கியமை, இந்து சமயத்தின் உண்மைகளையும்,பெருமைகளையும் துண்டுப் பிரசுரங்கள், சிறிய சிறிய புத்தகங்கள், பிரகாசங்கள், சொற்பொழிவுகள் மூலம் வெளிப்படுத்தியமை இந்து சமய வளர்ச்சிக்கு ஆலயங்கள், மடங்கள், சபைகள், கல்விநிலையங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியமை, இந்து சமயச் சிந்தனைகளில் பல்வேறு •'த்திரிக்கைகள், சஞ்சிகைகள் வாயிலாக மக்களுக்கு விளங்கப்படுத்தியமை, கிறிஸ்தவ மத ஆட்சியாளர்களின் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமை, இந்து சமய தர்மங்களை இயலுமானவரை நிலைநாட்டுவதற்கு உழைத்தமை, இந்து சமய அறிஞர்கள் பிறந்த போதனையாளராகவும் சாதனையாளராகவும் விளங்கியமை, இந்து சமயத்தினைத் தனிப்பட்ட ரீதியிலும் குழுநிலைகளிலும் நிறுவன ரீதியிலும் வளர்த்தெடுப்பதற்குப் பெரிதும் முயன்றமை, இந்து சமயத்தவர்கள் இந்து சமய சூழலில் வாழவும் கல்வி கற்கவும், பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் உதவி யமை, இந்து சமயத்தின் பெயரில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த இந்து சமய மக்களால் பின்பற்றப்பட்ட மூட நம்பிக்கைகள் காலத்துக்கு ஒவ்வாத சமய நடைமுறைகளைக் களைந்தெறிந்து புது வழியில் இந்து சமயத்தினை வளர்த்து எடுக்க உழைத்தமை, இந்து சமய மாநாடுகளை நடாத்தியும் தலைமை தாங்கியமையும் ஆங்கிலேயர் சைவ நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

www.padippakam.com



# எட்வர்ட் செயித் 1935-2003

ஒவ்வொருகாலத்திற்கும் ஒவ்வொரு கருத்துநிலைசார் துறைகள் கல்விப்புலங்களில் தலைதூக்கி நிற்கும். அவற்றில் சில காணாமல் போவதில் வேகம் கொள்ளும். சில அரசியலாகவோ, நடைமுறையாகவோ மாறிவிடும். இவற்றின் விளைவான பெருங்கதையாடலாக அவை மாறிவிடும்.

இந்தவகையில் இப்பொது சமூக விஞ்ஞானக் கல்விப்புலங்களில் தற்போது பரவலாக அறியப்பட்டவை பின் காலனித்துவநிலை / வாதம், மற்றும் புலப்பெயர்வு பற்றிய ஆய்வுகள். இவற்றில் ஓர் பார்வை மாற்றத்தை ஏற்படுத்தியது 1978இல் வெளிவந்த "ஓரியன்ரலிசம்" அல்லது கீழ்த்திசையியல் என்னும் நூல். அந்நூலின் ஆசிரியர் எட்வேர்ட் செயித்.

செயத்தின் பிறப்பையே சில யூத அனத்துத் தீவிரவாத நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் "அறிஞர்கள்" கேள்விக்குள்ளாக்கினர். அவர் ஜெருசலமில் பிறக்கவில்லை, அதற்குமாறாக எகிப்தில் பிறந்தார் என்றனர். அவ்வளவு தூரம் போவதற்கு என்ன காரணம்?

'செயித்' பல்கலைக்கழக அறிவு வாழியாக மட்டும் இல்லாது, ஓர் தீவிர பாலஸ்தீனியச் செயற்பாட்டாளராயும் இருந்ததுதான். இருந்தார். ஆம், இப்போது அவர் நம்மிடை இல்லை. 25 செப்ரம்பர் 2003 இல் இரத்தப்புற்று நோயால் இறந்துவிட்டார்.

பண்பாட்டுத்துறை திறனாய்வாளர், கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் ஆசிரியர், பாலஸ்தீனியப் போராட்டத்தின் முதன்மை அரசியல் கருத்துரைஞர். இவை மட்டுமல்லாது இசையில் மிகுந்த விருப்புமுடையவர். 'The nation' என்ற இதழின் இசைப்பகுதி ஆசிரியராயும் இருந்தார்.

யாசீர் அரபாத்தின் நெருக்கமான கருத்துரையாளரில் ஒருவராயிருந்தார். ஆனால் 1993 ஒப்பந்தம் வந்தபோது, அது பாலஸ்தீனியர்களை மேலும் இஸ்ரெலிடம் அதிகம் காலனியத்துக்கு உள்ளாக்கும் வழி என்று விமர்சித்துக்கொண்டு பாலஸ்தீன தேசியக் குழுவில் இருந்துவிலகிவிட்டார். அவர் அந்த வகையில் தான் 'யாசிர் அரபாத் இன்னும் தீவிரத்தன்மை காட்டவேண்டும்' என்று ஒருமுறை கூறியிருக்கிறார்.

எந்தவகையான வன்முறையின் வடிவங்களையும் எதிர்த்தவர். தான் எழுதியது போலவே அனைத்து வகைக்காலனியாக்கத்திற்கும் எதிர் நிலைப்பாடு கொண்டவர். எனவேதான் புதிய யூதப்போக்கின் புதிய வழிமுறையான பாலஸ்தீன இஸ்ரேல் ஒப்பந்தத்தில் அவருக்கு ஈடுபாடு இல்லை.

1991 வரை பாலஸ்தீனத்துக்கு வெளியே அகதிகளாயிருப்பவர்கள் நடத்திய நாடாளுமன்றில் 14 வருடம் உறுப்பினராயிருந்தார். 1991 இல் அரபாத்தின் இஸ்ரேலுடனான நெருக்கத்தினைப் பிடிக்காமல் விலகினார். 1992 இல் நடந்த ஒஸ்லோ உடன்படிக்கை பாலஸ்தீனர்களை இஸ்ரேலிடம் அடகுவைத்துவிட்டது என்பது அவர் வாதம். அவர் வாதிடுவது சரிபிழை என்பதற்கப்பால் அவர் தனது நாட்டின் மீதும் மக்கள் மீதும் கொண்டிருந்த பார்வை எத்தகையது என்பதுதான் நோக்கத்தக்கது. 2001இல் லெபனான் -பலஸ்தீன எல்லையில் நின்று அவர்களுடைய வழக்கப்படி எதிர்ப்பைக் காட்டும் முகமாக இஸ்ரேலுக்குள் கல்லெறிந்தார்.

அறிவுத்துறை சார்ந்தவர்கள் இவரைக் கல்விப்புலத்தின் பரிமாணங்களை அரசியலுக்கும் பொதுவாழ்க்கைக்குள்ளும் கொண்டு செல்ல முயன்றவர் என்று கூறுவர். அவருடைய ஓரியன்ரலிசம் நூலின் தாக்கம் பல துறைகளிலும் வியாபித்தது. இலக்கியப் படைப்பிலிருந்து திறனாய்வு, பண்பாட்டியல் படிப்பு, சமூகவியல், மெய்யியல் என அனைத்துத்துறைகளும் இந்தச் சிந்தனையின் பாதிப்புக்கு உள்ளாகின. பல மொழிகளிலும் மொழிபெயர்ப்பானது.

cultural imperialism அவரது பிந்திய நூல். தனது எழுத்துக்குத் தளத்தை அவர் அமெரிக்காவில் தேடுவது இல்லை. வெளிநாடுகளில் இருக்கும் வெளியீடுகளே உரிய வாசகர்-பார்வையாளரைக்கொண்டது என்பது அவரது கருத்து. அமெரிக்க ஊடகங்கள் குறித்தவகையில் கருத்தியல் எதிர் நிலைப்பாடு கொண்டவை என்று அவர் கருதினார். BBC, அவுஸ்திரேலிய வானொலி, கனடியத் தொலைக்காட்சி CBC ஆகியவற்றுக்கு அவர் அடிக்கடி கருத்துரை வழங்கியிருக்கிறார். இந்தியா உட்படப் பல நாடுகளில் பாடங்கள் நடத்தியிருக்கிறார். பல கீழ்த்திசை நாடுகள் பிரித்தானியப் பல்கலைகள் என்பன இவ்வகையில் அடங்கும்.

ஒரு வகையில் பாலஸ்தீனத்தின் ஓர் தீவிரக் குரல் நின்றுவிட்டது. அது பலஸ்தீனத்துக்கு மட்டுமல்லாது பல உள்ளகச் சிக்கல்களின் குரல்களுக்கும் இழப்பே.

Courtesy of photos: www.columbia.edu

# வேருக்குத் திரும்புதல்

## கனடியச் சூழலில் தமிழ்ச்சாதி - தேசியம் - சிக்கல்

தமிழ் என்ற சூழலுக்குள் உள்ள எவரும் துயரம் - அவலம் என்ற வகைகளுக்குள் உள்ளாகாமல் இருக்கமாட்டார்கள். தமிழச் சாதியின் வரலாறு எதுவரை நீள்கிறதோ அதுவரை அவர்களுக்குள் துயரமும் அவலமும் இருந்திருக்கிறது. துயர் மிகுந்த அவல வாழ்வு தமிழுக்குள் மட்டுமல்ல., உலகில் ஏனைய இனங் களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஏற்பட்டுக் கொண்டுமிருக்கிறது. ஆயின் அது பற்றி இக்கட்டுரை அழப் போவ தில்லை. 'விதியே! விதியே! தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்' என்று விதியிடம் யாருக்காகப் பாரதி அழுதானோ அச்சாதியின் ஒரு கூறான புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய-தான தாகவே இக்கட்டுரை அமையும். (தமிழச் சாதி பற்றிய புரிதலே சிக்க லாக இருக்கும் இடத்தில் மற்றைய சாதிகள் பற்றிய நுனிப்புல் மேய்தல் தேவையில்லாததே) இக்கட்டுரைகூட ஆய்வின் ஆழ - அகலம் காலச்சிக்க லால் நுனிப்புல் மேயும் வேலையாக இருந்தாலும், முறையான ஆய்வின் முதற்கட்டமாக அமைக்கும் முயற்சியே இதுவாகும்.


ஓர் இனத்தின் விடுதலையானது தனித்தே அதன் அரசியல் விடுதலை என்றவாறு இருக்க முடியாது. எந்தெந் தத் தளங்களில் அது அடிமைப்பட்டும் அறியாமைப்பட்டும் கிடக்கிறதோ அங் கெல்லாம் அது தன் சிறகுகளை விரிக்க வேண்டும். அதற்கான பணிக-ளில் இறங்க மக்களை ஈடுபடுத்த வேண்டும். தமிழ்த்தேசியம் என்ற அடிப்படையில் இனவிடுதலைப் போர் கடந்த கால் நூற்றாண்டு காலமளவில் கருக்கூட்டப்பட்டு ஈழத்தில் நடை-பெற்று வருகையில், தமிழ்த்தேசியம் என்ற கருத்துநிலையானது புலம்

**சிவா தாட்சாயணி**

பெயர்ந்த ஈழமக்களிடம் எவ்வாறு நோக்கப்படுகிறது அல்லது கைக் கொள்ளப்படுகிறது என்று பார்க்கப் புகுவோமானால் அக்கருத்துநிலை சார்ந்த மக்களிடமே அக்கருத்து நிலைக்கு ஒவ்வாத பல கருத்துகள், செயற்பாடுகள் இருப்பதனைக் காண முடிகிறது. இத்தகு நிலையை கனே டியச் சூழலில் பார்ப்பது, இங்கு நாம் வாழ்வதால், அவசியமாகின்றது.

தேசியம் என்ற கருத்தானது சில நூற்றாண்டுப் பழமையானது. தமிழ்த் தேசியம் அல்லது ஒன்றான தமிழியம் என்ற வரைபுகளின் வரலாறும் கூட மேற்கூறப்பட்ட காலவரையறைகளுக் குட்பட்டதே. தேசியம் என்ற பரப்பில் பிரிவுகள் இருக்க முடியாது என்பது அதன் அடிப்படை. ஆனால் பல பிரிவுகள், பிரிப்புகளைக் கொண்ட தாகவே கனடியச் சூழலில் தமிழ்த் தேசியம் காணப்படுகிறது. அந்தப் பிரிப்புகளில் ஒன்றான மதம் என்பதானது தமிழரை எந்தளவிற்குத் தமிழ்த்தேசியத்தில் இருந்து அவர்களைத் தள்ளி வைத்திருக்கிறது என்பதை இங்கே பார்ப்போம்.

புலம்பெயர்ந்த சூழலில் தமிழர் என்ற அடையாளப்படுத்தலில் உள்ள சிக்கல்களில் மதமும் முக்கிய பங்கு வகிக்கின்றது. தமிழரின் மதம் எது என்ற கேள்வி ஒரு தனி ஆய்வுக்கான தலைப்பாகும். ஆயினும் மேலோட்டமாகப் பார்த்தோமானால்,



தமிழர்கள் இயற்கை வழிபாட்டினர். இலிங்க வழிபாடானது தமிழருக்கு உரித்தானது என்று சொல்லலாம். ஓர் உயிர் பிறப்பதற்கு ஏதுவாக அமைக-ின்ற உறுப்புகளாக ஆண்-பெண் பிறப்புறுப்புகள் அமைவதால் அவற்றைப் புனிதமாகத் தமிழரின் முன்னோர் கருதியதால் இவ்வழிபாட்டு முறை வந்திருக்கலாம் என்பது அறிஞர் சிலரின் கூற்றாகும். சிந்துவெளியிற் கிடைத்த புதைபொருட் சான்றுகளும் இதனை மெய்ப்பிப்பதாக அமைகின்றது. இது இன்றைய சைவத்தின் வழிபாடொடு ஒத்திருப்பதால், இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியாகச் சைவத்தைத் தமிழரின் மதமெனக் கொண்டால், இன்றைய நிலையில் அது தமிழரின் அடையாளத்தை நிர்ணயிக்கின்ற ஒன்றெனக் கொள்ளும் போதுதான் சிக்கல்கள் தோன்றுகின்றன.

மதத்தின் பேராலும் தேசியக் கருத்துகள் வடிவம் பெறலாம். இதன் ஆரம்பத்தைப் பல்லவர் ஆட்சிக் காலத்தில் காணலாம். பக்தி இலக்கிய எழுச்சிக் காலத்தில் அரசிலும் ஆட்சியிலும் வடமொழியின் ஆதிக்கம் இருக்க, வைணவ ஆழ்வார்களும் சைவ நாயன்மார்களும் மக்களின் மொழியாக இருந்த தமிழை, 'தமிழோடு இசைபாட' மறந்தவர்களைத் தமிழின் பக்கமாக, தமிழால் இறையை வணங்க வைப்பதற்காக ஆயுதமாக்கினர். பௌத்த-சமண மத எதிர்ப்பு என்ற நிலையில் மக்களை ஒன்று திரட்டவும் தமிழ் அவர்களுக்குத் தேவைப்பட்டது. இதனைத் தமிழ்த் தேசியநிலைச் சிந்தனை என்று சொல்ல முடியாவிட்டாலும் தமிழை முன்னிறுத்தி ஒரு செயலைச் செய்யலாம்., அதில் வெற்றியும் காணலாம் என்பதையும் காணமுடிகிறது. ஆயினும் அந்த வளர்ச்சியை, ஆளுமையை அடுத்து வந்த தமிழ்ப் பேரரசான சோழர் காலத்திலும், அதன் பின்புவந்த இரண்டாம் பாண்டியப் பேரரசின் காலத்திலும் தமிழ் தனது எல்லாத் தளங்களிலும் இனங்காட்ட முடியவில்லை.

இந்த நிலையில் தமிழ்த்தேசியத் சிந்தனையானது மதத்தின் வழியாலும் கட்டமைப்புப் பெறலாம் என்ற நிலை கி.பி. 1886இல் ஏற்படுகிறது. அந்த ஆண்டில் நிறுவப்பட்ட சைவ சிந்தாந்தக் கழகம் 'பார்ப்பனிய மறைகளுக்கு நேரெதிராகத் தமிழ்ச் சிவனியத் திருமுறைகளை நிறுத்தி, தமிழர்களின் சமய நெறிகளுக்கு இருந்த தனித்தன்மையை இக்கழகம் எடுத்துரைத்தது. வடமொழி, தென்மொழி என்று இருவேறு மொழி நிலைகளை வைத்தும் தமிழ்த்தேசிய உணர்வைப் பரப்புவதற்கும் இக்கழகம் ஒரு முன்னோடியாக இருந்தது' என்கிறார் ஞானி அவர்கள்.

சைவம் X இந்து
தமிழ் X சமஸ்கிருதம்

இங்கு பெரும்பாலான தமிழ்ச் சைவர்கள், விண்ணப்பப் படிவங்களில் 'எந்த மதம்?' என்ற வினாக்குக் கீழே தமது மதமெனக் குறிப்பது சைவத்தை அல்ல. அவர்கள் குறிப்பது 'இந்து' என்றே. இந்து என்ற பெயரை அல்லது மதத்தை எமது பழந்தமிழ் இலக்கியங்களில் எங்குமே கண்டெடுக்க முடியாது. எவ்வளவிற்குத் தேடினாலும் கிடைக்காது., ஏனென்றால் இப்பெயரும் அப்பெயரிலான மதமும் ஆங்கிலேயர் காலத்துடனேயே வருகின்றது. இத்தகு வரலாற்றுப் பழமை அற்ற சொல் எவ்வாறு ஈழத்தமிழருடன் இரண்டறக் கலந்த நிலை இன்று வந்துள்ளது என்று பார்ப்போமானால் அதன் புண்ணியம் கந்தபுராணக் கலாசாரக்காரர்களுக்கே உரியதாகின்றது. ஆங்கிலேயர் காலத்தில் நிகழ்ந்த மதமாற்றங்களால் நிலைகுலைந்த தமிழ்ச்சைவசர்களை மீட்டெடுக்க வந்ததே கந்தபுராணக் கலாசாரம்.

தமிழ்ச் சைவரைக் கிறித்தவ மதமாற்றத்தில் இருந்து தூக்க வந்தவர்கள் அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ தமிழ்ச்சைவரைச் சமஸ்கிருதமயமாக்கத்தில் அமிழ்த்தி விட்டனர். கந்தபுராணக் கலாசாரம் ஆனது, அதுவரை தமிழ்ச் சைவர்கள் வணங்கி வந்த கடவுளரின் பெயர்களை, வழிபாட்டு மொழியை, வழிபாட்டு முறைகளைச் சமஸ்கிருதமயமாக்கித் தமிழ் அடையாளங்களைச் சிக்கல்களுக்குள்ளாக்கி சைவசமயத்தையும் இந்து சமயத்தையும் போட்டுக் குழப்பி தமிழர்களையும் சலவை செய்து விட்டது. கடவுளரையும் சிறுதெய்வம் - பெருந்தெய்வம் என்றும் பிரித்தது. இக்கந்தபுராணக் கலாசாரம் இன்றும் எந்தளவுக்கு மக்களிடையே ஊன்றியுள்ளதை அறிய விரும்பினால் எந்த ஆய்வும் செய்ய வேண்டாம். சாதாரணமாக சைவசமயத்திற்கும் இந்து சமயத்திற்கும் (இந்து சமயம் என்று ஒன்று இல்லை என்று மறுக்கிறார் பேராசிரியர் தொ.பரமசிவன்) உள்ள தொடர்பு என்ற வினாவை எழுப்பினால் இன்றைய சூழலில் இரண்டும் ஒன்றே என்ற பதில் தான் வரும். இதில் பாமரர் முதல் படித்தவர் என்ற

www.padippakam.com

இருசாராரும் உள்ளடங்குவர். தப்பித்தவறி சைவம் வேறு, இந்து வேறு., இரண்டினதும் கோட்பாடுகளும் வேறு என்று அவர்களிடம் சொன்னால் உங்கள் தலைக்கு என்னால் காப்புத்தர இயலாது.

கனடாவில் தமிழ்ச் சைவர்களுக்காக என விளம்பரப்படுத்தி நடைபெறும் இந்துக் கோயில்களில் (கவனிக்க, சைவக்கோயில்கள் அல்ல) அர்ச்சனை முதற்கொண்டு குடமுழுக்கு வரை தமிழ் மொழியில் நடைபெறுவதில்லை. தமிழ்த் தேசிய ஆர்வலர்கள், அமைப்புகள் நடாத்தும் கோயில்களிலும் இதுதான் நிலை. இது பற்றி இங்கு சில தமிழ்ப் பேராசிரியர்களிடம் உரையாடும் பொழுது அவர்கள் சொன்ன கருத்து, ‘சமஸ்கிருத மொழிக்கு ஒரு சக்தி உண்டு. அதனை ஓதும் போது அதனை உணரலாம். தமிழில் சொல்லும் போது அவ்வாறு இருப்பதில்லை. இறைவனுக்கு இன்ன மொழியில்தான் பூசைகளைச் செய்யவேண்டும் என்று இல்லை’ என்பதாகும்.

இக்கூற்றானது ஒரு சாதாரண மனி த ரிடம் இருந்து வந்திருந்தால் வேறு. தமிழைக் கற்று, தமிழால் ஊதியம் பெற்ற, தமிழால் பொருளாதாரத்தில் முன்னேறிய, தமிழால் இந்தச் சமூகத்தில் உயர்ந்த நிலையடைந்த தமிழ்ப் பேராசிரியர்களிடமிருந்து வந்தபோது இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் எதிர்கொண்டுவரும் எதிர்ப்பின் பலம் புரிந்தது. எதிர்ப்பு வெளியில் இருந்துதான் வரவேண்டும் என்றும் இல்லைத்தானே.

இன்ன மொழியில்தான் பூசை செய்யவேண்டும் என்று இல்லை என்பவர்களும் இறைவனுக்கு எல்லா மொழியும் ஒன்று என்பவர்களும்தான் முருகன் தமிழ்க்கடவுள் என்றும் செந்தமிழைச் செப்பியது சிவன் என்றும் சொல்வார்கள். ஆக தமக்கு எங்கு எதனைச் சொல்ல வேண்டுமோ அங்கு அதனைச் சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளாய் ஆட்சிமொழி என்கிற தகுதியை இன்றுவரை பெறாமல், அதேவேளை பல மொழிகளின், பண்பாடுகளின் படையெடுப்புகளில் இருந்து தன்னை நிலை நிறுத்தி, வளமையொடு இருக்கின்ற தமிழ்மொழியில் இல்லாத ஒன்று, பெரும்பாலும் அதிகார மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருந்த போதிலும் வாழ்விழந்து போய் கருவறைகளில் மட்டும் (அதுவும் தமிழிலே எழுதி வாசித்து மனனம் செய்யும் பல பிராமணர்களின் புண்ணியத்தால். இனிமேல் தமிழ் தெரியாத பிராமணக் குழந்தைகள் ஆங்கிலத்தில்தான் எழுதி வாசித்து மனனம் செய்ய வேண்டும்.) வாழும் சமஸ்கிருத மொழியில், தனித்து நிற்கின்ற வளமையையும் தகுதியையும் என்றோ இழந்து போன ஒரு மொழியில் இருக்கின்றது என்றால், இதற்கு நாம் மக்களைத்

> **கனடாவில் ‘டபுள் டபுள்’ (double double) என்ற ரிம் கோர்ட்டன் கோப்பிக்கடை வாசகம் பிரசித்தம். அதை எண்ணியோ என்னவோ டபுள் டபுளாகவும் கோயில்களுக்குப் பெயர் வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, சுப்பிரமணியர் - ஐயப்பன் கோயில் ஸ்ரீ சிவா - விஸ்ணு ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை வருமானத்தை நாடியே எழுந்துள்ளதை இயல்பாகவே அறிய முடிகின்றது.**

தவிர, மக்களின் அறியாமை தவிர வேறெதனையும் குறை சொல்ல முடியாது.

இங்கு கோயில்களுக்குச் செல்லும் மக்களில் அனேகமானவர் தாயகவிடுதலை என்ற எண்ணத்தில் இருப்பவர்களே. தமிழ் மொழி மீது இயல்பாகவே, தாய் மீதான அன்பு போல அன்பை வைத்திருப்பவர்கள். ஆயினும் அதனை, அதன் பெறுமதியை உணராமல் இருப்பவர்கள். கனடாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழரோடு சேர்ந்து புலம்பெயர்ந்து கோயில் கொண்டிருக்கும் எல்லா மேல்மட்டக் கடவுளரையும் நீங்கள் ஒரு மொழி பெயர்ப்பாளரோடுதான் சந்திக்க முடியும். மேல்மட்டக் கடவுளர் எனும் போது சமஸ்கிருத மயமாக்கப்பட்ட கடவுளரையே இங்கு குறிக்கிறேன். கனடாவில் தப்பித்தவறியும் வைரவர், காளி, காடன், மாடன், பேச்சி போன்ற தெய்வங்களுக்கு கோயில் எழும்பவே இல்லை.

கவர்ச்சி இல்லாத, காசு பண்ணத் தெரியாத, உண்டியலில் மக்களைக் காசு போட வைக்கத் தெரியாத தெய்வங்கள் அவை என்பது மட்டுமல்ல, அவர்களை வணங்குகின்ற மக்கள் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் கனடாவிற்கு வரக் காசில்லாமல் தங்களின் ‘காவல்’ தெய்வங்களுடன் தாயகத்திலேதான் இருக்கிறார்கள் என்பதும் காரணங்களாக அமைகின்றன என்பன ஒருபக்கம் இருந்தாலும் கந்தபுராணக் கலாசாரக்காரர்களால் இவை சிறுதெய்வங்கள் என்று ஒதுக்கப்பட்டுக் காவல் தெய்வங்கள் என்ற மாத்திரத்தில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன என்பதுதான் முதலான காரணியாக அமைகின்றது.

இங்குள்ள சில கோயில்களினதும் கடவுளரினதும் ‘தமிழ்ப்’ பெயர்களைக் காணவும்.

திருப்பதி வெங்கடாசலபதி ஆலயம்
ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம்
ஜெயதுர்க்கா தேவஸ்தானம்
ஸ்ரீ மீனாட்ஷி அம்மன் ஆலயம்
ஸ்ரீ சக்தி துர்க்காதேவி ஆலயம்
ஸ்ரீ நாகபூஷணி அம்பிகா சமேத நாகலிங்கேஸ்வர சுவாமி திருக்கோயில்
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஆலயம்

கோயில்கள் எழுப்புவதால் தமிழ் வாழும். தமிழர் தம் இருப்பை நிலை நிறுத்துவர், தமது அடையாளங்களை தக்கவைத்துகொள்ளுவர் என்பதை வாதமாக வைத்துக் கொண்டால், இப்பொழுது இங்குள்ள கோயில்களில் தமிழுக்கு என்ன இடம் இருக்கிறது? உண்டியலைத் தவிர. உண்டியல் என்று எழுதி வைத்துக் காசு பண்ணும் இடத்தைத் தவிர வேறு இடத்தில் தமிழுக்கு இடமே இல்லை. ஆயினும் தமிழை வளர்க்க சில கோயில்கள் வகுப்புகள் நடாத்தவும் செய்கின்றன. ஆயினும் (உண்மையான சைவசமயம் பற்றியதா என்றால் இல்லை) சைவமும் தமிழும், தமிழரின் இரு கண்கள் என்ற வகையிலேயே நடைபெறுகிறது. அப்படியாயின் தமிழ்க் கிறித்தவர்கள், தமிழ் முஸ்லிம்கள், தமிழ்ப்பவுத்தர் என்போர் ஒரு கண் மட்டுமே உடையவர் என்பதும் தமிழ்த்தேசியத்திற்குள் அவர்கள் வரமாட்டார்கள் என்பதுவும்தானே பொருள்?

கனடாவில் ‘டபுள் டபுள்’ (னழரடிடந னழரடிடந) என்ற ரிம் கோர்ட்டன் கோப்பிக்கடை வாசகம் பிரசித்தம். அதை எண்ணியோ என்னவோ டபுள் டபுளாகவும் கோயில்களுக்குப் பெயர் வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, சுப்பிரமணியர் - ஐயப்பன் கோயில் ஸ்ரீ சிவா - விஸ்ணு ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை வருமானத்தை நாடியே எழுந்துள்ளதை இயல்பாகவே அறிய முடிகின்றது.

முடிவாகத் தமிழ்த்தேசியத்தின் விடுதலையை தம் தாயகமான ஈழத்தில் நாடி நிற்கின்ற புலம்பெயர் மக்கள் கனடாவிலே அதற்கு முரண்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர். மத அடிப்படையில் தமிழ்த்தேசியத்தின் அடி அத்திவாரமான தமிழுக்கே இடமில்லை எனும்போது தமிழ்த்தேசியச் சிந்தனைக்கு இடம் என்பது கனடியச் சூழலில் கேள்விக்குறியாகவும் சிக்கலுக்குரிய தொன்றாகவும் முரண்கள் பல நிறைந்ததாகவும் உள்ளதைக் காணலாம். □


எல்லோரைப் போலவே நானும்...
புதிதாக சொல்ல எதுவுமில்லை!

ROYAL LEPAGE
Connect Realty



Tam Sivathasan, B Sc. Eng.
Sales Representative

Bus: 416.284.4751
Fax: 416.284.6343
E-mail: veedu@veedu.com
4218 Lawrence Avenue East
West Hill, ontario M1E 4X9

வீடு வாங்க விற்க அழையுங்கள்

www.padippakam.com



# தமிழ் வேரில் வேற்று நீர் ஊற்றும் கல்கி

திருவாளர் கல்கி அவர்கள் தமிழ் மொழியால் பொருளையும் புகழையும் அடைந்தவர். ஆனால் தமிழ் மொழி குறித்து அவருடைய ஆழ் மனத்திலிருந்த எண்ணங்கள் நம்மை அதிர்ச்சியடையச் செய்கின்றன. அவர் எழுதியுள்ள "திருமகளும் கலைமகளும் " (பாரதி பதிப்பகம் 1960) என்ற கட்டுரையில் தமிழ் இலக்கணம் தமிழ் மொழிக் கல்வி குறித்த அவருடைய மதிப்பீட்டை வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மொழி இயற்கையாகவே பெற்றுள்ள சீரிளமைத் திறத்தைச் சிதைக்கும் நோக்கில் அக்கட்டுரை நஞ்சை உமிழ்கின்றது.

தமிழ் இலக்கணம் குறித்து கல்கி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்.

1. "இலக்கணம் கற்றுக் கொண்டு இந்த விதிகளின்படி பேசவோ எழுதவோ ஆரம்பித்தால் பேசவும் வராது எழுதவும் வராது." (ப. 22)
2. "குழந்தைகளைச் சித்திரவதை செய்வதற்கென்றே ஏற்பட்ட பயங்கரக் கருவிகளில் இலக்கணம் என்பதும் ஒன்று" (ப. 16)
3. "பல்லை உடைக்கும் சூத்திரங்கள்" (ப. 21)
4. "1942 - ஆம் ஆண்டில் அரசியலார் தேசத்தில் எத்தனையோ கொடுமைகளை இழைத்தனர் என்பதை எல்லாரும் அறிவார்கள். அவற்றுளெல்லாம் பெருங்கொடுமை ஹைஸ்கூல் மாணாக்கர்களின் பாடத்திட்டத்தில் தமிழ் இலக்கணத்தைப் புதிதாகச் சேர்த்தது தான் என்று நாம் கருதுகிறோம்." (ப. 21)

என்பன போன்ற நச்சுவிதைகளை தமிழ்மொழி எனும் வளமான நிலத்தில் விதைத்துள்ளார்.

இலக்கணம் கற்றுக் கொண்டு அந்த விதிகளின் படி பேசவும் எழுதவும் முடியாது என்று கல்கி தமிழ் இலக்கணத்தை இழிவுபடுத்தி - சிறுமைப் படுத்தி எழுதியிருப்பது வியப்பைத் தருகிறன்றது.

தொல்காப்பியர் மக்கள் வழக்கையும் செய்யுள் வழக்கையும் நன்கு அறிந்தே. எழுத்து, சொல், பொருள் ஆகியனவற்றிற்கு இலக்கணம் வகுத்தார். எழுத்தறிவு மக்களின் பேச்சிலும் உணர்விலும் இயற்கையாகப் பதிந்துள்ள இலக்கணக் கட்டமைப்பையும்,கற்றறிந்த புலமையாளர்களின் கவிதையில் காணப்படும் கட்டமைப்பையும் தொல்காப்பியம் கூறுகின்றது. இதற்கு எண்ணற்றச் சான்றுகளை எடுத்துக்காட்டலாம்.

உறுப்புப் பெயர்களாகிய கண், காது, தோள், கை, கால்,பாதம் ஆகியனவற்றை இலக்கண நூலார் சினைப் பெயர் என்பர். இந்த உறுப்புக்கள் இரட்டையாக அமைந்துள்ளன. ஆனால்,இவை பேச்சிலும்,எழுத்திலும் ஒருமையிலேயே சுட்டப்படுகின்றன.

'ஐயா கண் தெரியாத பிச்சைக்காரன் தருமம் போடுங்க
'கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும்
பொய் தீர விசாரிப்பதே மெய்'
'கண் மருத்துவமனை'
'கூப்பிடுவது காதிலே விழவில்லையா?
'கால் போன போக்கில் போனேன்'
'நீ என்னை அடிச்சா என் கை சும்மாவா இருக்கும்?'
'நீ தரும் சாப்பாட்டை விரலால் தொடமாட்டேன்.' எனப் பேச்சு வழக்கில் பன்மையில் சுட்ட வேண்டிய கண், காது, கை, விரல், கால் ஆகியன ஒருமையிலேயே சொல்லப்படுகின்றன.

இலக்கிய வழக்கிலும்இ
'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' - குறள்
'செவிக்கு உணவு இல்லாத போழ்து' - குறள்.
'தோள்கண்டார் தோளே கண்டார்' - கம்பர்.
'கையில் ஊமன் கண்ணிற் காக்கும்' - குறுந்தொகை.
'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே' - குறள்.
'செங்காந்தள் மென்விரல்' - குறுந்தொகை.

'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலார்' - சிலம்பு.

என இலக்கிய வழக்கிலும் இரண்டிரண்டாக உள்ள உறுப்புகள் ஒருமையிலேயே சுட்டப் படுகின்றன. தொல்காப்பயரின் இலக்கணத்தின்படியே இவ்வாறு மக்கள் பேசியும் எழுதியும் வருகின்றனர். 'கண்,தோள்,கை முதலிய பன்மைப் பாலுக்குரிய உறுப்புப் பெயர்களைப் பன்மையில் கூற வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஒருமையில் சொன்னாலும்,மரபு நிலையில் அவை மக்கள் எண்ணத்தில் பன்மைக் கருத்தையே உணர்த்தும்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறும் கடப்பாடு இலவே
தம் வினைக்கு இயலும்
எழுத்தலங்கடையே" - (சொல்: 545)
என்பது நூற்பா.

இலக்கணத்தின்படியே பேசவும், எழுதவும் செய்கிறோம் என்பதற்கு இன்னும் சில சான்றுகளைக் கூறலாம். ஒரு வீட்டில் கேட்கும் பேச்சைக் கவனிப்போம்.

'அம்மா அண்ணன் என் கன்னத்திலே கிள்ளிட்டான்.'
'ஏன்டா கிள்ளினே? உன் நகத்தை விரலோட வெட்டிருவேன். முகத்தைப் பார்த்துப் பதில் சொல்லு.'
'அவள் என் புத்தகத்தைக் கிழிச்சிட்டா'
'பொய். நான் கிண்ணத்திலே வச்சியிருந்த பண்டத்தை அவன் எடுத்தான். நான் கொடுக்கல, அதுதான்...'

இந்த உரையாடலில் கன்னம், நகம், புத்தகம், கிண்ணம், பண்டம், முகம் போன்று வரும். மகர ஈற்று ஒற்றெழுத்து (ம்) ஒரு தொடரில் அத்துச் சாரியைப் பெற்று வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' (எழுத்து -185) என்பது நூற்பா.

இந்த இலக்கணத்தின்படியே 'கன்னத்தை, நகத்தை, புத்தகத்தை, கிண்ணத்தை,பண்டத்தை,முகத்தை என்று வழக்கில் பேசுகின்றனர்.

இலக்கிய வழக்கிலும்
'செவ்வத்து பயனே ஈதல்' - புறம்.
'மண்டிணிஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்' - மணி
'இடத்தொடு பொழுது நாடி' - சீவகசிந்தாமணி
'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' - குறள்.
'உள்ளத்து உள்ளது கவிதை' - கவிமணி.
'ஞானத்திலே பரமோனத்திலே - உயர் மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர்நாடு' - பாரதி
'கூடத்திலே மனப்பாடத்திலே - விழி' - பாரதிதாசன்
'புதுப் பெண்ணின் மனத்தைத் தொட்டுப் போறவரே - உங்க எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க' - திரைப்பாடல்.

என எழுத்து வழக்கிலும் செல்வம், ஞாலம், இடம், மனம், உள்ளம், ஞானம், மோனம், மானம், தானம் போன்ற மகர ஒற்றெழுத்தை ஈற்றில் கொண்டுள்ள சொற்கள் செய்யுளில் அத்துச் சாரியைப் பெற்று வருவதைக் காணலாம். திணை தெரிந்து, ஆண்பாலா, பெண்பாலா என்பது தெரியாத நிலையில் ஒன்றைச் சொல்லும்போது பன்மையில் சொல்ல வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. (சொல். 506) 'யார் அங்கே?' 'அங்கு போகிறவர் யார்?' என்றே கேட்கிறோம். 'நாம் இருவர் நமக்கு ஒருவர்' என்று குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரத்தில்,குழந்தை ஆணா,பெண்ணா என்று தெரியாத நிலையில் 'ஒருவர்' எனப் பலர்பாலில் தொல்காப்பிய இலக்கண மரபில் எழுதப்பட்டுள்ளதை அறிஞர் வ. சுப. மாணிக்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இயற்கைப் பொருட்களைக் கூறும் போது அதன் தன்மையையும் சேர்த்துக் கூற வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது (502). மக்கள் பேச்சு வழக்கில் நீர் என்று சொல்லாது 'தண்ணீர்' என்று அதன் தன்மையைச் சேர்ந்தே சொல்கின்றனர். இவ்வாறே கொளுத்தும் வெயில் எரியும் தீ,வீசும் தென்றல், வாடைக்காற்று, வெண்ணிலா என்று பேசுகின்றனர். இலக்கிய வழக்கிலும்

'மண் திணிந்த நிலனும்' - புறம்
'நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்' - யாப்பருங்கலம்
'காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்னே கணவன்? - சிலம்பு.
'வெங்கதிர் வெம்மையின் விரி சிறை இழந்த' - மணி
என இயற்கைப் பொருளை அதன் தன்மையோடு சேர்த்தே சொல்வதைக் காணமுடிகிறது.

இவ்வாறு பேச்சிலும் எழுத்திலும் மக்கள் இலக்கண விதியின் படியே பேசியும் எழுதியும் வருகின்றனர். உண்மை இவ்வாறு இருக்க,தமிழ் இலக்கண விதிப்படி பேசவோ எழுதவோ முடியாது,பல் உடைக்கும் இலக்கணம், அது பயங்கரக் கருவி கொடுமையானது. என்று கல்கி கூறுவது முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும்.

பழங்காலத்தில் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதியதால் இயல்,இசை,நாடகம்,சிற்பம்,மருத்துவம்,இலக்கணம் என எல்லாச் செய்திகளையும் செறிவான சில சொற்களால் பா வடிவில் எழுதினர். நூற்பாவை நன்னூலார்,'பெரிய உருவங்களைத் தன்னுள் அடக்கிக்காட்டும் சிறிய கண்ணாடி' என்று குறிப்பிடுகிறார். இந்த அருமையையும் நுட்பத்தையும் அறியாமல்,'பல்லை உடைக்கும் சூத்திரம்' (ப. 21) என்று நூற்பாவைக் கல்கி கொச்சைப்படுத்துவது அறமாகாது.

தொல்காப்பியம் கூறும் உயர்திணை, அஃறிணை பகுப்பு முறை உலகத் தோற்றம் உலக உயிர்களின் தோற்றம் மானிட வாழ்க்வையும் அழகியல் வாழ்வையும் உணர்த்தும் அகப்புற இலக்கண வகையறை நிலத்தையும் காலத்தையும் முதல் பொருளாகக் கொண்டு கடவுளைக் கருப் பொருள்களுள் ஒன்றாக அடக்கிய உலகியல் கோட்பாடு போன்றவை தமிழரின் உயர்ந்த பண்பாட்டையும்,ஆழ்ந்த சிந் தனையையும் பறைசாற்றுகின்றன. இத்தகைய பெருமைகளையெல்லாம் மறைக்கும் நோக்கிலேயே இலக்கணத்தைக் கீழ்மை படுத்தி கல்கி எழுதியுள்ளாரோ என்று எண்ணத் தோன் றுகின்றது. இந்நூலில் அவர் எழுதியுள்ள பல கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும் போது இது உறுதிபடுகிறது.

கல்கி அந்நூலில் தொடர்ந்து தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் எதிரான கருத்துக்களையே சொல்லிச் செல்கிறார். இலக்கண அரக்கனைப் பாடத்தில் சேர்த்தவர்கள் இகத்திலும் பரத்திலும் என்ன கதி அடையப் போகிறார்களோ(ப. 19)
கல்வி மந்திரி (திரு. அவினாசிலிங்கம்) தமிழுக்கு முதலிடத்தைக் கொடுத்து ஆங்கிலத்தை மூன்றாமிடத்திற்கு தள்ளியிருக்கிறார் (ப. 45) தமிழை எவ்வளவு பிழைகளுடன் வேண்டுமானாலும் எழுதட்டும் (ப. 22) வாட்டும் சிலப்பதிகாரம், கலித்தொகை (ப. 98) தாய்மொழி,இந்தி. ஆங்கிலம் இவற்றோடு இந்தியாவின் பூர்வீக கலாச்சார பாசையான சமஸ்கிருத பாசைக்கும் இடம் கொடுக்கத் தானே வேண்டும் (ப. 115) தாய் பாசையைத் தனியாகக் கற்க அவசியமில்லை என்று நினைப்போர் இந்தியாவின் புராதன கலாச்சார மொழியாகிய வடமொழியைப் பிரதான முதல் மொழியாக எடுத்துப்

**முனைவர் மாணிக்கம்**

படிக்கலாம் (ப. 116) இதை எதிர்ப்பவர்கள் தேச விரோதிகள் (ப. 117) என்று கல்கி எழுதியுள்ளார். தனக்குச் சோறு போட்டுப் பெரும்புகழையும் ஈட்டித் தந்த தமிழ் மொழிக்குக் கல்கி காட்டும் நன்றி இது தானா? என்று வேதனையோடு கேட்கத் தோன்றுகின்றது.

படையெடுப்பு இல்லாமல் ஒன்றை அழிக்க வேண்டுமானால் அதனை இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களைப் பரப்பினால் போதும். எனவே தான் பாரதி! மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்றார். கல்கி சமஸ்கிருதத்தைப் பாராட்டிப் பேசட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், அறிவியல் முறையில் அமைந்த உயர்ந்த சிந்தனைகளை உள்ளடக்கிய தமிழ் மொழியைக் கீழ்மைப்படுத்திச் சிதைக்கும் செயல் கண்டனத்திற்குரியது. □

படிப்பகம்

www.padippakam.com

ENGLISH
ஆங்கிலம்

# GENETIC ADAM & EVE - TAMILS ?

The International Genome Project has rekindled interest in an age-old controversy regarding the birth place of the Human Race. This ongoing project has reiterated that the first humans – the genetic Adam and Eve if you like – hailed from East Africa. This raises a doubt as the historically established oldest human civilisation belongs to Mesapotomia in the middle east Asia and human race existed even earlier with the land's name being known as Sumeria. Some argue that human civilisation and human race have their own independent definitions ! Yet another school of thought supports the view that the earliest humans lived in the burried land mass of Lemuria – a continuous mass of land extending beyond the Indian southern peninsular tip. This view is the most handicapped as it has no historic records to go by nor artefacts have been unearthed from undersea excavations.
This article attempts to review briefly the above competition among the three candidate-sites of East Africa, Sumeria and Lemuria and proposes that serious view be taken of the claim that Lemuria (as well as Sumeria) were seats of Ancient Tamil culture and that million of years ago all the three sites were geographically quite close and there is every possibility that the first human race were Tamils.

The East African Claim :
The international Genome Project has supported the view that the human race originated somewhere in East Africa. A human migration route map has been proposed with the origin in East Africa and the very first branching taking place some 50,000 years ago towards South India. Another branching is shown towards Sumeria more or less at the same time.
The method of tracing the humans back through their genes (either through X or Y chromosome) is not without its uncertainties which are many. In the first place there is no unanimity even on the precise length of the human genome; it may be possible that the length varies among different races! The reported variations range between 30,000 to 1,30,000 genes per genome! Secondly, there are large uncertainties in the assumptions involved on the average duration of a generation, the population growth rates over thousands of years, the average migration rates and the poulation size involved and so on. Typically, reports suggest that a generation gap consists of 25 years, the world population at the time of Jesus Christ was about 100 million, was only about 50,000 some 7000 generations ago, migration takes place in groups of not more than a few thousands and to distances of about 300 miles in a year and so on.. One can easily visualise the many pitfalls involved. There is also the major scientific unknown regarding the gene modifications by bacterial infections. Perhaps the most serious disadvantage concerns the absence of human DNA materials as bench marks covering the entire time range over which extrapolations are made. Inspite of these limitations genetic laboratories in Uk and USA have not hesitated to do brisk business for issue of a certificate of genetic link to either of the ten sons or eighteen daughters of Adam-Eve after gene-mapping of DNA samples obtained from oral swipes of the individual concerned. It may be mentioned here that the Biblical Adam-Eve pair reportedly gave birth to only three children!
The East African site easily won over other candidate-sites because of unearthing of very old human skeletons to date. On the other hand it does not have historical records to match with the other sites under discussion.

Sumerian Tamils?
The oldest (earlier than 3000 B.C.) available records in the form of clay plates are from the ancient Sumeria which was part of the Mesepotamian Civilisation (around 6000 B.C.)claimed to be earliest in Human History. Recent research particularly of Prof. K.Loganathan from Malaysia encourages the view that the ancient literature of Sumeria viz. the Mutariibayam of Sulgi is in fact in Archaic Tamil language. One of the stone carvings dated 1900 B.C. can be interpreted to convey that Tamil was the world language during 4000 B.C. to 1000 B.C.! There are also references to Kumeru possibly indicating to Kumarinadu, the seat of Ancient Tamils. Although Kumarikandam existed as a continuity with the present South Indian Peninsula. one wonders about the link with Sumeria .
In the news reports from the Genome Project, there is no specific mention about seeking any genetic evidence to dislodge the claim that the earliest known human civilisation arose in this region. On the other hand there is specific mention that the two centres where the first human migration took place more or less at the same time of nearly 56,000 years ago, are the Mesopotomian region and Southern Indian region. Because of the uncertainties involved, what are the chances that the staring point could have been any one of the three sites ? ie East Africa or Sumeria or South India ?

Lemuria – from Myth to Reality
The subject of Lemuria has been a fascinating one for a long time; in the absence of historical records or archaelogical evidences, it has stayed as a myth. The International History Project initiated a few years ago have rekindled interest in the topic. Inferences have been drawn to the effect that the first Lemurian subraces were ape-like, egg-laying hermaphrodites and had third eye (similar to Lord Shiva ?)! The evoutionary process might have resulted in the first human race appearing here somewhere between 20,000 B.C to 75,000 B.C. It was the English Zoologist Philip L.Schlater who gave the name Lemuria for a sumerged landmass connecting East Africa, Madagaskar, South India and East Indian Archipelago and the primitive primates, the "Lemurs" existed here. There are others who believe that this land mass extended far beyond the above regions; it is suspected that the Californian Indians could be Lemurians! The oldest human artefact found off Santa Barbara (dated to about 25000 B.C.) could have something to do with Lemurians! Similarly a strong case exists to consider the aborigins of Australia to be descendants of Lemurians ie prehistoric Tamils. Though Tamil records are quite young compared to Sumerian literature, repeated references are found to the Tamil Kingdom of Kumarinadu which existed down south of present day Kanyakumari and perhaps extended even upto Australia. Quite significant similarities have been observed between Tamil and the dialects of the Australian aborigins. Tamil is spoken even to day in all the regions specified by the English Zoologist as belonging to erstwhile Lemuria. In a letter to the Editor in The Hindu dated June 4 1979, the famous archaeologist C.S.Mahadevan came out with a plea entitled, "No More A Dravidian Myth". He has made out a very strong case defending the theory that the Dravidian civilisation is the oldest in the world and that the first humans were Tamilians. He has listed the chronology of the Dravidian Dynasty dating back to 30,000 B.C. (Ten Madurai Tamil Sangam convened by Muthalam Nilandaru Thiruvir Pandian). He even says East African negros ruled this Tamilnadu between 16,500 B.C. and 16,000 B.C., the important rulers being Udukannan, Maraikkannan, Arividamali and Thiruprattuhal. The list gives a contiguous picture upto 235 A.D. (Kadaichangakalam) and it is claimed that the historical events and the dates have been corraborated astronomically by Prof.K.Srinivasa Raghavan. This particular letter resulted in a series of letters in the discussion mode from eminent scholars all over the world. The majority view seems to support Mahadevan's plea for accordng the due place for the Tamils in human evolutional history.

**K.S.V.Nambi***
(Retired Senior Scientist, BARC, Mumbai)

Concluding Remarks
Before we start arguing if Adam and Eve were Africans or Tamils, we should ascertain if indeed the human population grew out of a single pair of Man and woman or the humans could have come into being at many different locations of the earth and also not necessarily simultaneously. There are many considerations – mostly philosophical - which favours the former view. It is important to realise that all humans the world over, have more or less the same sense about "good" and "bad". All exhibit the same tendency to associate the Almighty with the space above. Many stories handed down the generations look

Continue in pg. 25

www.padippakam.com



# INDIGENISM: THE OLDEST IDEOLOGY

Indigenous ideology, spirituality and values have the capacity to make essential contributions to anti-globalization and anti-colonial movements around the globe.

It is surprising how much "the left" does not know about the culture and history that informs indigenous movements. While many recognize that the accumulation of wealth, privilege and power in Canada (as well as in other colonized countries) is predicated upon the implementation of genocide, assimilation and systemic violence against Aboriginal peoples, the implications of that realization are not readily apparent.

Indigenous people around the globe are struggling for their very survival. As we struggle it is clear to us that the contradictions of colonialism, imperialism and capitalism are not only threatening the survival of Indigenous communities, but of the human race.

In the 1980s, Cherokee academic Ward Churchill coined the term "Indigenist" for Native Americans. Churchill regards ideologies such as socialism, anarchism and Marxism as essentially Eurocentric, similar to indigenous ideologies but lacking in many ways. Churchill, Winona La Duke and others maintain that an "indigenist" worldview is probably the only thing that will get us out of the mess are in today.

Unlike socialist or Marxist ideologies, Indigenists do not need to incorporate

Indigenous people around the globe are struggling for their very survival. As we struggle it is clear to us that the contradictions of colonialism, imperialism and capitalism are not only threatening the survival of Indigenous communities, but of the human race.

anti-racist or feminist analyses into our practice. We do not need to create an analysis around specific oppressions for people who are differently-abled or for gays and lesbians. Indigenists recognize that every living being on this Earth has a role and a purpose and that if we are to survive we need to learn from each other, share and grow together.

In our communities we open our gatherings by taking the time to thank all of the plants, animals, winds, waters, mountains, the sun, the moon, etc for providing us with food, clothing, medicine and shelter. While often regarded as "primitive" or "simplistic", our worldview recognizes that the health and wellbeing of humans is directly dependant on the health of a larger community; a larger family.

All of the plants and animals cooperate within an ecosystem. We don't see the trees insisting that all the plants provide apples. We don't see the birds declaring war on fish because they do not fly. What one plant puts into the soil another takes as nourishment. What one animal leaves as waste, another considers food. Even death and decay serve to nourish new life and new growth.

It is the same with two-leggeds. We are part of the planet's biodiversity. What some call the environment we call Our Relations. For us concepts of diversity and respect are not options, they are integral to our survival. The catch is that Our Relations can survive quite well without us, if it comes to that.

Mother Earth only has so many re sources to provide. She cannot replace and renew at the rate that we take from her womb. As a human race we cannot afford the type of extreme wealth, exploitation and greed we see among the wealthier classes of society.

The struggle is no longer just about



Zainab Amadahy

redistributing resources and wealth being accumulated by a minority at the expense of the planet's majority. The struggle now has to be about living in a balanced way, in a simpler way. It has to be about recognizing that computers, cell phones and cars are not what bring a person joy in life. It's about recognizing our relationships to each other as two-leggeds and to the greater community around us. Who knows this better than indigenous peoples?

Fallen warrior and activist Rodney Bobiwash used to say that indigenous people are like the canaries in the mines whose death warns of toxic gasses. If indigenous people are exterminated who will be left to fight for the environment that sustains us all?

Exclusively for "Urai Mozhivu"

---

Continue from pg. 24

alike. For example one can cite the Great Deluge and Noah's Ark. It appears in various forms but with the same theme not only in Bible but also in Queron, Sulgi and the Hindu religeous literature of Nalayira Thivyaprabandam. All languages start with the alphabet with the same phonetic sound of 'a'. The workshipping of figures with elephant heads seems to be prevalent in many regions of the world. The list can be extended endlessly; the bottomline is that there is strong indication of a common thinking process which has genetically spread through all races in regions.

On the other hand the scientific thinking of a Bio-Chemico-Eco evolution of the human species from basic elements will support the possiblity that humans might have come up at various regions and at various points of time depending upon the weather profiles of the regions concerned. The well recognised evolutionary line up of fish-amphibians-reptiles-small mammals-apes-homosapiens is reflected variously in the literature of most of the religions of the world. The tropical regions perhaps were most suited for this type of evolution and the Africa-India line up presents itself advantageously for considering the appearance of the first humans. Millions of years ago, the geographical distances separating the three sites of East Africa, Sumeria and Lemuria were not much. In the plethora of uncertainties involved in the gene mapping and extrapolation backwards in time, the origin could easily be placed in any one of the above three sites! Going through the publications which have come out so far, one cannot escape from the feeling that no serious efforts have been made on the Indian and Chinese populations, the world's biggest nations. It appears that just a handful of tribal people hailing from Andhra Pradesh in India were genetically tested. Certain urgent studies need to be carried out by gene mapping of the aborigins in Australia, the tribal populations in Tamilnadu of India especially the Thodas in Nilgiris, the Narikuravars and so on. The genomes of monkey races especially the Lemurs need to be ascertained. The tribes of Madagaskar, Maritius, Lakshdweep and Andaman-Nicobar Islands need to be examined too for their genetic stalk. It is only after collecting statistically significant data bases on all these population groups, one can come up with any tangible results regarding our ancestoral links through gene mapping. There is a gut feeling that Lemurian Tamils are strong contenders for constituting the earliest human race on earth and for too long we cannot ignore them because no records or artefacts exist. The Sri Lankan Tamils always lament that invaluable archives of ancient Tamil Literature and records which should have included a lot about the Kumarikandam/Lemuria, were burnt down during the ethnic violences in the fifties. An international effort is called for initiating ocean bed excavations south of Kanyakumari in South India and Sri Lanka.

References


1. Genes, Peoples and Languages - Luiji Luca Cavalli, North Point Press,USA.
2. In search of Lemuria - Mark R.Williams, Golden Era Books, USA.
3. A Sumerian Reading Book - C.J.Gadd
4. No more a Dravidian Myth - C.S.Mahadevan, The Hindu, June 4, 1979
5. Human history through genetic mutations - The Hindu Magazine, May 21, 2000 (by arrangement with New York Times)
6. DNA exposes India's Past - Hinduism Today, July/August 2001.
7. Genome! (in Tamil) - Sujata, Junior Vikatan, July – Aug , 2000
8. Web informations on "Genome Project", "Sumeria" and "Lemuria" through any popular search engines like Yahoo, Amazon etc.
9. Sumero Tamil Campus of Dr. K. Loganathan in http://Tripod.com


படிப்பகம்

www.padippakam.com



# பெண்ணியம் பெண் நிலை வாதம்

நாம் வாழும் சமுதாயத்தின் பல்வேறு அமைப்புகளிலும் குடும்பத்திலும் மக்கள் உள்ளத்திலும் புரையோடிக் கிடக்கும் பெண்ணடிமைத்தனம் பெண்களைச் சுரண்டல் இவற்றின் ஆணிவேர்களை இனம் கண்டு திட்டமிட்டு இவைகளை உடைத்தெறிந்து பெண் - ஆண் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காக பெண்களும் ஆண்களும் எடுக்கும் புற அகப் போராட்டத்தை பெண்ணியம் என வர்ணிக்கலாம்.

எவ்விதமான ஒடுக்கப்படும் நிலைகளிலும் அவற்றில் மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் பெண்களே. இப் பெண்களை பொருளாதாரம், பாலியல், சாதியம் என்ற மூன்று தளங்களும் இணைந்தும் தனித் தனியாகவும் ஒடுக்குகின்றன. பெண்களுக்கு விடிவில்லாமல் ஏனையோருக்கு விடுதலை இல்லை.

பெண்ணியம் பேசும் பெண்கள் - ஆண்களின் பார்வையும் செயல்பாடும் ஒன்றாக இருப்பதில்லை. பழமைவாத மிதவாத மார்க்சிய தீவிரவாத ஒருபாற்புணர்ச்சி, சோசலிச பெண்ணியம் என்று பல்வேறு அணுகுமுறைகளை இவர்கள் பின்பற்றுகின்றனர். இக்கட்டுரையில் நமது சமூகத்திற்கு ஏற்ற அணுகுமுறை எதுவென்று சுருக்கமாக அலசுவோம்.

பெண்கள் தனிப்பட்ட முறையிலும் அமைப்புகள் ரீதியிலும் இன்றைய சமுதாயத்தில் பெண் விடுதலை பற்றி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பெண் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை பெண்கள் அமைப்புகள் சிதறிக் கிடப்பது பெண் விடுதலையின் பெரிய பலவீனமாக உள்ளது.

அனைத்துப் பெண்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான வரையறை பெண்நிலைவாதம் அல்லது பெண்ணியத்திற்குக் கிடையாது. அப்படி ஒன்று இருக்கவும் முடியாது. 17-ம் நூற்றாண்டில் பெண்நிலைவாதம் என்ற சொல் முதன்முதலாக உபயோகப்படுத்தப் பட்டட போது அது கொண்டிருந்த பொருள் 20-ம் நூற்றாண்டின் இறுதியில் இன்று கொண்டுள்ள பொருளிலிருந்து மிகவும் வேறுபட்டதாகவே உள்ளது. பல்வேறு நிலையிலுள்ள பெண்களால் அவர்களின் வர்க்கப் பின்னணி, கல்வி, உணர்வு நிலை போன்றவற்றைப் பொறுத்து உலகின் பல பகுதிகளிலும் ஒரு தேசத்துள்ளேயும் பல்வேறு வகையாகப் பெண்நிலைவாதம் பேசப்படலாம்.

எனினும் சமூகத்திலும் வேலை செய்யுமிடத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்கு பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் பெண் நிலை வாதம் எனக் கொள்ளலாம். இது தெற்காசிய பெண்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வரையறையாகும்.

பெண்நிலை வாதம் ஒரு மேற்கத்திய கோட்பாடு என்று விமர்சனம் வைக்கப் படுகின்றது. மேற்கத்திய நாகரீகத்தையும் நவீன மயமாக்கலையும் ஆங்கிலத்தை யும் ஏற்றுக் கொண்டவர்கள் பெண்நிலை வாதத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக சொல்லப்படுவது இது. எந்த ஒரு கருத்தாக்கத்தையும் தேசிய, பூகோள எல்லைக்குள் அடக்கி விட முடியாது. எனவே பெண்நிலை வாதத்தை ஒரு மேற்கத்திய கருத்தாக்கம் என்று வாதிடவோ ஒதுக்கிடவோ முடியாது.

பெண்நிலை வாதம் என்ற சொல் மட்டுமே புதியது. பெண்கள் பிரச்சனைகள் பற்றிய விவாதம் காலங்காலமாக நடைபெற்று வருகின்றன. கி. மு. 6-வது நூற்றாண்டிலேயே புத்தரும் அவரது சீடர்களும் பெண்கள் பௌத்த சங்கத்தில் சேர்ந்து துறவிகள் ஆக முடியுமா என்று விவாதித்திருக்கிறார்கள். இயேசு விபச்சார குற்றத்திற்காக பெண்ணை மட்டுமே தண்டிக்கும் கூட்டத்தைப் பார்த்துத் தவறான நோக்கோடு ஒரு பெண்ணைப் பார்க்கும் ஆணும் விபச்சாரகன்தான் என்று கூறுகிறார். பெண்கள் போதனையைக் கேட்கும் உரிமை கூட மறுக்கப்பட்டு வந்த காலத்தில் இயேசு பெண்களுக்குப் போதித்தார்.

பெண் விடுதலை உணர்வு என்பது ஒரு பெண் தான் அடிமையாக்கப்பட்டுள்ளோன் என்று உணர்வதே. அடிமைப்படுத்துவது குற்றம். அநீதியான முறையில் நடத்தப் படுவது, பெண்கள் மீது வன்முறையை உபயோகிப்பது அனைத்துமே குற்றமாகும். அடிமைத்தனத்தை உணர்தல் சமூக நிலையை மாற்றும் விடுதலை உணர்வை உருவாக்கும்.

பெண்கள் விடுதலை அவசியம் என உணர்த்திப் பெண்களின் கருத்துக்களும், அணுகுமுறைகளும் பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

பே. சாந்தி

### பழமைவாத பெண்நிலை வாதம்:

பெண்கள் ஆண்களுக்கு அடிமை இல்லை என்பது இவர்கள் நிலைப்பாடு. பிறவியிலேயே சமத்துவமற்றவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதால், பெண்ணின் இரண்டாந்தர நிலையை ஒத்துக் கொள்கின்றனர். ஆனால் அடிமைத்தனமாக பழமைவாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள ஏற்றத் தாழ்வை மறைமுகமாகக் கட்டிக் காக்கவே விரும்புகிறார்கள். இக்கருத்துக்கள் பெண் அடிமைத் தனத்தை மேலும் அதிகரிக்கின்றன. எனவே இவை கண்டிப்பாக முறியடிக்கப்பட வேண்டும் என்றுமட்டும் கூறுவதால் இந்த அணுகுமறை போதுமானதாக இல்லை.

### மிதவாத பெண்நிலை வாதம்:

இக்கருத்துடையோர் சட்டத்திருத்தத்தின் மூலம் பெண் விடுதலை கொண்டுவர முற்படுவர். தனிநபர் சுதந்திரம் குறித்தும் பேசும் இவர்கள். பெண்கள் மீது இழைக்கப்படும் இன்றைய சூழ்நிலைக்கேற்ற வன்முறைப் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. சட்டம் ஒழுங்கை கடைப்பிடித்து குடும்ப வாழ்வை நன்கு அமைக்க வேண்டும் என்கின்றனர். அடிப்படை மாற்றத்திற்கான முக்கிய காரணங்களைக் கண்டறிய இந்த மிதவாத பெண் நிலைவாதிகள் முன் வருவதில்லை.

சமுதாய விடுதலையும பெண் விடுதலையும் ஒரே நேரத்தில் பெறப்பட வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஒவ்வொரு தனிப்பட்ட பெண்ணின் விடுதலைக்கே முதன்மை அளிக்கின்றனர். இன்றையச் சூழ்நிலையில் முழு பெண் விடுதலைக்கும் இக்கருத்துக்கள் உதவியாக அமையாது.

### மார்க்சீயப் பெண்நிலைவாதம்:

தனிச் சொத்து ஒழிக்கப்பட்டு உற்பத்தி முறை சமூக மயமாக்கப்பட்டுப் பெண்கள் பொது உற்பத்தியில் ஈடுபட்டு சமுதாய விடுதலைக்குப் போரிட்டால் பெண் விடுதலை பெறுவாள் என்கின்றனர். ஆனால் அவ்வாறு உற்பத்திமுறை மாற்றியமைக்கப்பட்ட சோசலிச நாடுகளிலும் பெண்ணிற்கு சம பங்கு அரசியல், பொருளாதார வாழ்வில் கிடைக்கவில்லை. சமூக, பண்பாட்டு அடக்கு முறைகளை கருத்திற் கொள்ளாது பொருளாதார மாற்றத்திற்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து பொருளாதார மாற்றம் பெண்விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்கின்றனர். பெண்ணடிமைக்கு ஒரு காரணமான ஆணாதிக்கத்தைக் குறித்து இவர்கள் பேசுவதில்லை.

> கற்பு என்கிற வார்த்தையை பகுபதமாக்கிப் பார்ப்போமானால் - கல் என்பதிலிருந்து வந்ததாகவும் அதாவது படி-படிப்பு என்பது போல் கல் - கற்பு என்கிற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது. அன்றியும் 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்கின்ற வாக்கியப் படி பார்த்தால் 'கற்பு' என்பது சொல் தவறாமை - அதாவது நாணயம், சத்தியம் ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது - என்பதான கருத்துக்கள் கொண்டதாக இருக்கிறது.
>
> ஆரிய பாஷையில் பார்க்கும் போது மாத்திரம் 'கற்பு' என்கின்ற பதத்திற்குப் பதிவிரதை என்கிற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது.
>
> - தந்தை பெரியார்

ஒரு பெண்ணின் பார்வையில் ஆணாதிக்க உறவு முறை, வர்க்க உறவு முறையைவிட முதன்மையானதும் குறிப்பான தனிப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்துவதுமாகும். மேலும் வன்மையானதும் கொடுமையானதும் ஆகும். ஆண் - பெண் உறவு முறையை முதலாளி - தொழிலாளி போன்ற உறவு முறையாகப் பார்க்கின்றனர். பெண் விடுதலை பெற்றால்தான் மொத்த விடுதலை என்று இவர்கள் கூறுவதில்லை.

### தீவிரவாத பெண்நிலை வாதம்:

இக்கருத்தைப் பின்பற்றுவோர் பெண்ணடிமைத்தனத்துக்கு 'பாலின ஒடுக்கு முறை' ஓர் அடிப்படைக் காரணம் என்கின்றனர். மேலும் பெண்ணடிமைத்தனத்துக்கு மூல காரணம் உடற்கூறு நிலை என்கின்றனர். குழந்தை பெற்று பலவீனமடைந்து ஆணைச் சார்ந்து வாழும் நிலைக்கு பெண் தள்ளப்படுகிறாள். உடல் ரீதியாக ஆண், பெண்ணை அடிமைப்படுத்துவதற்கு வரலாறு ஓர் அடிப்படையான காரணமாக இருந்து வருகிறது. பிற காரணங்கள் இரண்டாம்பட்சம் தான் என்கின்றனர்.

உடற்கூற்றை முக்கியப்படுத்தி ஆணை எதிர்த்துச் செயல்படுவதும் சரியான கருத்தல்ல. மனித விடுதலைக்கும், மனித நேயத்திற்கும் போராடுகையில் பெண்களின் பிரதானமான எதிரி ஆணாதிக்கமும் சமுதாய அமைப்புமே தவிர ஆண்கள் அல்ல.

1970 - ம் ஆண்டுகளில் தீவரவாத பெண்நிலைக் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப் படாமல் இரண்டு விதமான கருத்துக்கள் உருவெடுத்தன. ஒன்று ஒரு பாற்புணர்ச்சி (லெஸ்பியன்) பெண்நிலைவாதம், அடுத்தது சோசலிஸ பெண்நிலை வாதம்.

ஆண் - பெண் பாலியல் உறவு ஆணாதிக்க நெறியை உருவாக்கி பெண்ணை அடிமைப்படுத்துகிறது. இதிலிருந்து விடுதலை பெற ஆண் - பெண் பாலியல் உறவையே எதிர்க்கின்றனர். தாய்வழிச் சமுதாயத்தில் பெண் தலைவியாகவும் அதிகாரம் பெற்றவளாகவும், சிறந்த வலிமை பெற்றவளாகவும் இருந்தாள். இப்படிப்பட்ட ஒரு தாய்வழிச் சமுதாய கலாசாரத்தை திரும்பவும் படைப்பதே இவர்களின் முக்கிய நோக்கமாகும்.

### சோசலிஸ பெண்நிலை வாதம்:

தீவிரவாத பெண்நிலைவாதிகளின் கருத்தான பெண் விடுதலை குழந்தை பெறுதலை ஒழிப்பதினால்தான் உருவாகும் என்பதை இவர்கள் எதிர்க்கின்றனர். இவர்கள் மார்க்சீய பெண்நிலைவாதிகளின் கூற்றான பொதுவுடைமை சமுதாயம் பெண் விடுதலைக்கு வித்திடும் என்றும் அதே நேரத்தில் பாலின அடிமைநிலை அச்சமுதாயத்திலும் தொடரும் என்றும் நம்புகின்றனர்.

பொருளாதார சமத்துவத்திற்காகப் போராடும் அதே சமயம் பெண் விடுதலைக்கான விழிப்புணர்வும் வேண்டும் என்பது இவர்களின் கருத்து. பிற பெண்நிலை வாதிகளைப் போலன்றி இவர்கள் 'குடும்பம்' என்பதை ஒரு வித்தியாசமான முறையில் வளர்த்தெடுப்பதை பெண்களின் ஒரு பணியாக பார்க்கின்றனர். வீட்டு வேலைகள், குடும்ப பொறுப்புகளில் ஆண் - பெண் இருவருக்கும் சம பங்கு, பாலியல் சுதந்திரம் போன்றவை இதில் அடங்கும்.

பொருளாதார சமத்துவம், ஆண் - பெண் சமத்துவம் இரண்டும் முக்கியத்துவம் பெறுகின்றது. சோசலிஸ உறவு முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பெண் விடுதலைக்கு ஆண்களைப் பெண்களுடன் இணைந்து போராட இது வழி வகுக்கிறது. தனிப்பட்ட நபர் ஒவ்வொருவரின் பழக்க வழக்கங்களிலும் மாற்றம் அவசியம். ஒருவருக்கொருவர் தங்களது வாழ்கைப் பொறுப்புகளில் சம பங்கு ஏற்று செயல்பட வேண்டும் என்பதே இவர்கள் கருத்து.

இந்த சோசலிச பெண்நிலை வாதக் கருத்துக்கள் பெரும்பாலும் நமது சூழ்நிலைக்கு பெண்ணடிமை தீரப் பெரிதும் உதவும்.

### முடிவுரை:

பிற பெண்நிலை வாதக் கருத்துக்கள் ஏற்புடையன அல்ல என்பதல்ல இதன் பொருள். அவைகள் ஏதாவது ஒரு நோக்கில் மட்டும் முன் வைக்கப்டுகின்றனவே தவிர நம் நாட்டின் பொருளாதார , சமுதாய, பண்பாட்டுச் சிக்கல்களை முழுவதுமாக எடுத்துக் கொள்வதில்லை. எனவேதான் சோசலிச பெண்நிலை வாதக் கருத்துக்கள் ஏற்புடையதாகத் தோன்றுகிறது. ஏனெனில் பெண்நிலை வாதம் பெண்ணிம் என்பது ஆணை எதிர்ப்பதல்ல என்கிறது. மாறாக ஒரு பெண் தன்னை உணர்தல், சமுதாய பொருளாதார, பாலியல் தளைகளிலிருந்து முழுமையான விடுதலை அடைதல். இதற்கு இருபாலரின் மனமாற்றமும் இருபாலாரின் இணைந்த போராட்டமுமே இதனைச் சாதிக்கும்.

இன்னமும் நம் மாணவ சமுதாயத்தாரிடமும் சரி, படித்தவர்களிடமும் சரி, பெண்ணியம் என்பது தவறானதாகவும் குழப்பமானதாகவும் புரிந்து கொள்ளப் படுகின்றது. பெண்ணியம் சம்பந்தமான சிந்தனைத் தெளிவை மாண்வரிடையே உருவாக்குவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

படிப்பகம்

28ம் பக்கத் தொடர்ச்சி...

# டானியல் நினைவுமலர்...

சாதி ஒடுக்குமுறை சார்ந்தும் வர்க்கப்போராட்டம் சார்ந்தும் போராடி எழுதிவரும் அனைத்து எழுத்தாளப் பெருமக்களும் இந்த நூலில் எழுதியிருப்பது மகிழ்விற்குரியது. டானியல் அவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ஓரிருவராவது உள்ளனர் என்பது இதிலிருந்து உணர முடிகிறது.

நூலினுள்ளே போனால், சி.சிவசேகரம்




சாதி என்பது அன்றைக்கு மட்டும் எம்மை வதைத்துக் கொன்றுவிடவில்லை, இன்றும் எமக்குத் தொல்லைகளைக் கொடுக்கின்றது என்பதை, சாதி எவ்வாறு வந்தது என்பதிலிருந்து கனடா போன்ற புலம் பெயர் மண்ணில் அது கால்பதித்து நிலைநிற்கப் போராடும் விதம் பற்றித் தெளிவாக விளக்கங்களுடன் எழுதியுள்ளார். இலங்கையிலும் பிரதேசங்களுக்கிடையிலுள்ள சாதியமைப்புப் பற்றியும் தொட்டுச் சென்றிருக்கிறார்.

அடுத்து டானியலுடன் வாழ்ந்த தோழர்கள் சூ.மார்க், செ.கணேசலிங்கன், எம்.ஏ.சி.இக்பால், செந்தில்வேல் போன்றோர் சாதி சார்ந்து தமது அனுபவங்களையும் டானியலின் நூல் சார் அனுபவங்களையும் ஒன்றிணைத்துக் கட்டுரை வரைந்துள்ளனர்.

தேன்மொழியாள்
கங்காதரன்.

உண்மைத்தனமான அதேவேளையில் வேதனைக்குரிய அனுபவங்களை அவர்கள் திரட்டித்தந்திருப்பது சாதியம் பற்றிய அறிவு அற்றவர்களும் தமது பண்பாடு பாரம்பரியம் மிக்கது என்று கூவித்திரிபவர்களும் அறிந்துணர வேண்டியதொன்றாகும்.

இது தவிர பேராசிரியர்கள் கா.சிவத்தம்பி, செ.யோகராசா போன்றோரின் ஆய்வுநோக்கிலமைந்த கட்டுரைகள் சிறப்பானவையாகும்.

கா.சிவத்தம்பி அவர்கள் டானியல் பற்றிக்குறிப்பிடும்போது, "டானியலின் எழுத்துக்களுக்கான ஒரு நியாயப்பாடு உண்டு. யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி காரணமாக சமூக ஒடுக்குமுறை இருக்கும் வரை டானியல்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். இந்தப் பிரச்சனையை மறைத்துக்கொண்டு இப்படி எழுதலாமா என்று கேட்பது நியாயமற்றது" (டானியல் நினைவுமலர் ப.85) என்று பலருடைய புரியாத கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

டானியல் பற்றி, டானியலை நன்கு தெரிந்தவர்கள் பலர் இந்நூலில் எழுதியுள்ளனர். டானியல் மீதுள்ள குற்றச்சாட்டுப் பற்றிக் கூறும் எழுத்தாளர் தெணியான் கூறுவது, "டானியல் அவர்களின் படைப்புகளில் உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஆண்கள் தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களைத் தமது பாலியல் இச்சைக்கு ஆட்படுத்தினார்கள் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. அது பற்றி எதுவிதப் பிரச்சினையும் இப்பொழுது எழுவதாக இல்லை. ஆனால் உயர்ந்த சாதிப் பெண்கள் தாழ்த்தப்பட்ட சாதி ஆண்களைத் தமது பாலியற் தேவைகளுக்குப் பயன்படுத்தினரென டானியல் அவர்கள் தமது நாவல்களிற் சித்தரிப்பதே சிலரை உறுத்துகின்றது" (டானியல் நினைவுமலர், ப.81). இவர் டானியல் மீதுள்ள குற்றச்சாட்டு அர்த்தமற்றது. உண்மைத்தன்மை கொண்ட விடயங்களைச் சொல்லும்போது, பாதிப்புக்குள்ளானவர்கள் கோபப்படுவர் என்பதற்காக சொல்ல வந்த விடயத்தை நிறுத்திவிடமுடியுமா என்பது இவரின் வாதம். மேலும் பலர் டானியல் பற்றித் தமக்குத் தெரிந்தவிடயங்களை எழுதியுள்ளனர்.

ஆகவே இந்நூல் யாழ்ப்பாண மண்ணில் புரையோடிப்போய் இன்றுவரை அவ்வப்போது காயப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு சாராரின் அறிவுப்பரப்பில் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்களினது குரலாக இப்புலம் பெயர் மண்ணில் வந்துள்ளது. இன்று நாமனைவரும் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் நமது இரத்தத்தில் சாதி என்னும் வியாதி நன்கு பரவிக் கிளைவிட்டிருக்கிறது. அதனை அவ்வப்போது சுட்டிக்காட்டினாலொழிய நாம் திருந்தப்போவதில்லை. எனவே இந்நூல் அனைவராலும் வாசிக்கப்படவேண்டியதொன்றாகும்.

நீண்டகால முயற்சிக்குப் பின் இடதுசாரி நண்பர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது. அவரவர்களுக்கு டானியலுடன் உடன்பாடு இருக்கிறதோ இல்லையோ இந்த நூலை, நினைவு மலரைக் கொண்டு வந்தது பாராட்டுக்குரியது. அது மீண்டும் ஒரு சிறிய தளத்திலாவது சில புதிய உரையாடல்களைக் கொண்டு வரும். ◘


28ம் பக்கத் தொடர்ச்சி...

# குமரி நில...

ருக்கு, எப்படி இணையப் பங்கங்களுக்கும் தனது கணினிக்கும் வேறுபாடு தெரியாமல்போனது. அடிப்படையிலேயே பிழைகளை வைத்துக்கொண்டு விண்ணைப் பிளக்கும் ஆய்வு எப்படிச் செய்வது. துணைக்கோள் படத்திற்கும் தேநீர் சிந்திய தாளுக்கும் இவருக்கு எப்படி வேறுபாடு புரியும்? இது எங்கள் ஐயங்கள்.

தமிழர் வரலாறு பற்றி புலவர் குழந்தை, க.அப்பாத்துரை ஆகியோரின் நூல்களைப் படிக்கும் போது ஏற்படும் அயர்ச்சியும் சோர்வும் இதைப் படிக்கும் போதும் ஏற்படுவது உண்மை. அது ஒரு எல்லை என்றால் இது மறு எல்லை. வரலாற்றுப் படிப்புக்கள் பல்துறை சார்ந்த ஆய்வாக இல்லாமல் இருப்பதும் மேற்கத்திய சிந்தனையின் அடிமைத்தனத்தின் மனநிலையில் இருந்துகொண்டு பிறவற்றைப் பார்ப்பதும் இன்னும் தொடர்கிறது. பிறவரின் சிந்தனைகளைக் காழ்ப்புணர்வுடன் ஏதிர்ப்பது எவ்வகைத் தீமை பயக்குமோ கண்மூடித்தனமாக அதில் மூழ்குவதும் அப்படியே.

இன்னொரு வேண்டுகோள். தரமற்ற நம்பகத்தன்மையற்ற நூல்களுக்கு அணிந்துரை முன்னுரை எழுதுபவர்




களும் இவற்றிற்கென தார்மீகப் பொறுப்பு ஏற்கும் நிலை தமிழில் வரவேண்டும். வந்தார், கேட்டார், எழுதினேன், கொண்டு சென்றார் என்பதெல்லாம் முடிந்துபோன காலத்தில் இருந்ததாகவேண்டும். ஆனாலும் குறள் காப்பாற்றுகிறது.

முன் அட்டையைத் தயாரித்தவர் நல்ல அழகியல் சிந்தனை மட்டுமல்ல, அழிவியல் சிந்தனையும் வாய்ந்தவராக இருந்திருக்கிறார். மறைந்து போன குமரிக் கண்டத்தை ஆய்வு செய்யப் போனவர்கள் இருக்கும் இலங்கையையும் வரைபடத்தில் இருந்து எடுத்துவிட்டார்கள். அல்லது நாசாவின் ஜெமினி 11 விண்கலம் இந்தியாவை மட்டும் எடுத்து விட்டு இலங்கையை மறந்துவிட்டதா? இந்தியாவில் இருந்து பல்லாயிரம் அடிகளுக்குள் கடலுக்குள் இலங்கை மறைந்து விட்டதா? அப்படியாயின் முன்னட்டை: தென்னிந்தியா-இலங்கைப்படம் என்று போடுவானேன். இனி மறைந்து போன இலங்கை இருந்ததா இல்லையா என்பதை இந்நூலாசிரியரை வைத்தே இந்தப் பதிப்பகத்தார் எழுத வைப்பார்களா?

இவையெல்லாம் தவறுகள் அல்ல என்பது உறுதி. இவை புனைவு எழுத்துக்களல்ல. ஆணித்தரமாக வாதிடும் ஆதார நூல்கள் என்பது அவர்கள் கருத்து. அதன்படி இவர்களுடைய 'தவறுகள்' எவ்வகையானவை என்பது ஐயத்துக்கிடமில்லாமல் தெளிவானவை. வரலாற்று நூற்களைப் பதிப்பவர்களுக்கும் ஒருவகை நம்பகத்தன்மை இருக்கவேண்டும் என்பது இதனால் நெறியாகின்றது

மேலே குறிப்பிட்ட தவறுகளைக் 'காணாப்பிழை, கருதாப்பிழை' என்று கொள்வோமானால் உண்மையான பதிவுகள், உணரப்பட வேண்டிய பதிவுகள் என்று நூலாசிரியரும் பதிப்பித்த பதிப்பகத்தாரும் உளறுவதை நிறுத்தல் வேண்டும்.

அந்த ஜப்பானியரின் அழகிய படத்துக்காக மட்டும் இந்நூலை வாங்கலாம். அதுவும்கூட இணையத்தளத்தில் தேடுவீர்களானால் காசு இல்லாமல் பார்க்கலாம். உங்கள் கணினிக்குள்ளும் இறக்கலாம். பதிப்பகம் இறக்கியதைப் போல.

"இக்கருத்தாக்கம் அறிவியல் அடிப்படையில் உருவானது அல்ல. இதற்கும் சங்க இலக்கியங்கள் குறிக்கும் நிலப்பரப்பிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது என் நிலை." (ப.18) அறிவியலிலும் குழப்பம். சங்க இலக்கிய ஆய்வுமல்ல இது. இன்று கல்விப்புலம், ஆய்வுப்புலம் பல்துறைசார்ந்ததாக விரிவடைந்துவிட்டது. ஆகவே நுனிப்புல், குண்டுச்சட்டி எல்லாம் வெளிறிவிடும் நிலையும் இன்று உண்டு. ◘

www.padippakam.com

**BOOK REVIEW**

**நூல் திறனாய்வு**

# டானியல் நினைவுமலர் : ஒரு சிறு கண்ணோட்டம்

## டானியல் நினைவு மலர் 99,Gennala Sqr. Toronto. 2003.

'சாதிகள் இல்லையடி பாப்பா உயர் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' தான். சாதி என்பது உலகிலுள்ள பல நாடுகளில் பொதுவான கவலை தரும் ஒரு விடயம். இலங்கையில் பல்வேறு பட்ட பகுதிகளில் சாதி ஒடுக்குமுறை இருந்தாலும் வடபகுதித் தமிழரிடையேயுள்ள ஏற்றத்தாழ்வு சாதியமைப்பு முறையினால் முதன்மையாக வந்த தொன்றாகும். இதனை இன்றுவரை மாற்றமுடியவில்லை.

உயர்ந்தவன் தாழ்ந்தவனை நசுக்குவது என்பது மிகச் சாதாரணவிடயம். யாழ்ப்பாணப் பகுதியில் சாதியிலே குறைந்தவர் என்று கருதப்பட்டவரை, சிறுபான்மைத்தமிழர் என்று அழைத்து அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக மதித்துவந்தனர் பெருங்குடிமக்கள் என்று அழைக்கப்பட்டோர். அவற்றை முறியடிக்கப் போராடியவர்களுள் கே. டானியல் மிக முக்கியமானவர். இவர் தனது தொடர்ச்சியான எழுத்துக்களின் மூலம் யாழ்ப்பாணப் பெருங்குடிமக்களாகக் கருதப்பட்டவர்களுடன் போராடினார். நிறைய எழுதி மக்களைச் சிந்திக்கத் தூண்டினார். அவரது வாழ்க்கை அனுபவங்கள் உண்மைகளாக எழுத்துருவில் வெளிவந்தன.

அவரது எழுத்துக்கள் 1950களில் இலங்கை தமிழிலக்கியத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை எல்லாரும் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். சமூக சிந்தனையும், எதையும் கண்டு விலகிப் போகாது போராடி வெற்றிகாண வேண்டும் என அவாக் கொண்டவருமான டானியல் 1986ஆம் ஆண்டில் தனது தீராத நோயின் காரணமாக மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவரது நினைவாக நினைவுமலர் ஒன்றை அவரது சிந்தனைசார்ந்த பெருமக்கள் ஒன்று கூடி வெளியிட்டிருப்பது மதிப்புக்குரியது. சாதி ஒடுக்குமுறைப் போராட்டத்தில் வாழ்ந்த தோழர் கு.சிவராசாவுக்கு சமர்ப்பணம் செய்திருப்பது சிறப்பான ஒரு செய்தியாகும்.

தொடர்ச்சி 27ம் பக்கம்



# குமரி நில நீட்சி

குமரிக்கண்டம் இருந்ததா இல்லையா என்ற சிக்கலுக்குள் இந்நூலும் இந் நூலாசிரியர் இறங்கியது போல் நாமும் இறங்க முற்படவில்லை. பதிவுகள் என்பவை காலத்தின் சுவடுகளாக இருக்க வேண்டும். அந்த வகையில் குமரிக் 'கண்டம்' என்ற நில நீட்சி இருந்தது ஆனால் தமிழர்களின் மரமண்டையிலேதான் என்பதாக நூலாசிரியர் கடைசியாகக் கண்டு பிடித்துப் பதிவு செய்கிறார்.

நேரத்தின் அருமை கருதியும் (கனடாவில்) தேவையற்றது என்பது கருதியும் இந்நூலுக்கு மறுப்புநூல் எழுதாமல் சில கருத்துகளை மட்டுமே பதிவு செய்யலாம்.

ஆய்வு நூலுக்கு உரிய மதிப்பையும் நம்பகத்தன்மையையும் தருவபை குறிப்புகள் (references) அல்லது சான்றுகள் ஆகும். அந்த வகையில் பல பிற சான்றுகளோடு ஆசிரியர் இணையத்தளச் சான்றுகளும் தந்துள்ளார். எப்படி. எங்கோ ஒரு முறை இணையத்தில் படித்ததை அப்படியே நகல் செய்து தனது கணினியில் பதிவு செய்து, அது பதிவு செய்திருக்கும் கோப்பின் (file) தடத்தைத்தான் தந்துள்ளார் (file path in his computer as a web addres). இந்த சான்றை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள அவரைத்தேடி, அவர் இருக் கும் இடத்துக்குச் சென்று, அவரது கணினியைத் திறந்து...

'உண்மையில் மனித இனங்களின் தோற்றம் ஏற்பட்டது ஆப்பிரிக்காவில் தான் என்பதை அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆதிமனித எலும்புகளின் மரபணு ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. மானிடத்தின் தொட்டில் ஆப்பிரிக்கா தான் என்பது உறுதியான நிலையில்...' பக்.59. அறிவியலிலோ அல்லது அறிவியல் கண்டுபிடிப்புகளிலோ முடிந்த முடிபாக எதையும் கொள்வதில்லை என்பது அடிப்படை. முடிந்ததாக நினைத்த ஒன்றிலிருந்து பின்பு வரும் அறிவியலாளர் தொடர்ந்து, அதற்கும் அப்பால் செல்வர். மனித இனங்களின் தொடக்கம் ஆப்பிரிக்காதான் என்று முடிவு செய்துவிட்டால் இன்றும் ஏன் ஏனைய கண்டங்களில் அந்த ஆய்வுகளை மற்றவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்?

இது ஒரு வகை என்றால், முன்னுக்குப் பின் முரணாகச் சொல்வது நூலின் பல இடங்களிலும் நேர்ந்துள்ளது. மட்டுமல்ல நூலின் எந்த வொரு இடத்திலும் சான்றுகள் அடிக்குறிப்புக் களாகக் கொடுக் கப்படவில்லை. பல நூல்களின் பட்டியலைக் கொடுத்துள்ளார். ஆனால் அவற்றிலிருந்து இவர் எடுத்த சான்றுகளை நாம் அவரின் உள்ளத்தில்தான் தேடிப் பார்க்க வேண்டும்.

"தமிழகம் -இலங்கை நிலப்பகுதி... திடீரென நிலம் அதிர்ந்து, எரிமலை குமுறி அழிவு ஏற்பட வாய்ப்புக்கள் குறைவு." (ப.64). அடுத்த கூற்று பக்கம் 70இல் இவ்வாறு தொடர்கிறது: "தக்காணப் பீட பூமியில் உள்ள பாஸால்ட் (Basalt) எனும் எரிமலைப் பாறைகளை...". தமிழ் நாட்டுக்கும் தக்காணப் பீட பூமிக்குக்கும் ஒரு பத்தாயிரம் கிலோமீட்டர் இருக்குமா? இவற்றைச் சொல்வதனால் நாங்கள் குமரிக்கண்டத்தை நிறுவ வரவில்லை. நூலின் நம்பகத்தன்மையை மீள்நிறுவ வருகின்றோம்.

அலெக்சாந்தர் கொந்தராத்தோவின் நூலை ஆசிரியர் எடுத்தாளும் விதம் அலாதியானது. இந்த நூலைப்பற்றி முன்பு எதுவும் தெரியாத ஒரு வாசகருக்கு இது 1982 ஆம் ஆண்டு எழுதப் பட்டது அல்லது அதையொட்டிய ஆண்டுகளில் எழுதப்பட்டது என்பதாகவே தகவல் கிடைக்கும். பின்னாலிருக்கும் நூல்பட்டியல் தகவல் இது. உண்மையில் இப்படிப்பட்ட நூல்களுக்கு, அதுவும் அதன் அடி ஆதாரத்தையே கேள்விக்குள்ளாக்கும் நூல் ஒன்றை எழுதும்போது, அதன் முதற்பதிப்பு எப்போது வந்தது என்று குறிப்பிடுவதுதான் ஆய்வு நேர்மை. எந்த நூலுக்கும் இது பொருந்து மாயினும் இந்தநூலுக்குக் கட்டாயம் பொருந்தும். மேலும் "இந்துமாக்கடல் மர்மங்கள்... ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டை முன்னிட்டு 1981 இல் சிறப்பு வெளியீடாக வந்தது." (ப.58, பத்தி3) என்று எழுதுகிறார். ஒரு நூல் எழுதும்போதே 1982க்கும் 1981க்கும் இடையில் காலப் பகுதிகுறித்த அல்லாட்டம் வருகிறது. ஆசிரியரால் எங்களை எப்படி வரலாற்றுத் தெளிவு பெறவைக்க எழுதமுடிந்தது?

ஒரு பிரிந்துரை. 'சிங்கள வரலாற்று நூல்களின் நம்பகத்தன்மை' என்ற தலைப்பிலான நூலை ஒரு முறை படிக்கலாம். வில்ஹெம் கெய்கர் ஒரு வரலாற்று நூலின் முன்னுரையே எவ்வளவு வாதத்திறனோடு ஆதாரங்களோடு எழுதியிருக்கிறார் என்பதைப் (தமிழில்) படித்து சான்றுகளை முன்வைத்து எழுத, அறிந்துகொள்ள உதவும். (காந்தளகம் வெளியீடு.)

**சு.கி. ஜெயகரன்,**
**பதிப்பகம்: காலச்சுவடு 2002**

மகாவம்சத்தையும் சிந்துபாத் கதையையும் தற்கால வரலாற்று ஆய்வு முறையின் அடிப்படையில் சான்றுகளாக எடுத்துக் கொள்ளும் நூல், தமிழின் ஐதீகக் கதைகளுக்குச் சொற்பமேனும் அவ்வகைத் தகுதியில்லை என்கிறது. அவருடைய நூலின் நோக்கமே நிறைவேறுவது அதன்வழியானதால்.

பல அறிவியல் ஆதாரங்களைத் தன் பணி அனுபவத்தின் ஊடாகத் தருவதான இந்த முயற்சி செய்யும் அவ

தொடர்ச்சி 27ம் பக்கம்

படிப்பகம்